REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 மே 9 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
1932 - 2022

வரு. 90 இல. 107 | Monday 09, May, 2022 | 16பக்கங்கள் | 40/-

## எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்படவில்லை



எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக வெளியாகும் செய்திகள் உண்மைக்குப்புறம்பானது என எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளதாக சமூக வலைத்தளங்களில் பரவி வரும் செய்தி 06

## இரண்டு வருடங்களுக்கு நாட்டின் பொருளாதார நெருக்கடி தொடரும்

மக்கள் தாங்கித்தான் ஆக வேண்டும் – நிதியமைச்சர்



இலங்கை அதன் பொருளாதார நெருக்கடிகளை குறைந்தது இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு தாங்க வேண்டியிருக்கும் என்று நிதி அமைச்சர் அலி சப்ரி எச்சரித்துள்ளார்.

பல மாதங்களாக நிலவும் மின்சாரத்தடை மற்றும் உணவு, எரிபொருள் மற்றும் மருந்துப் பொருட்களின் கடுமையான தட்டுப்பாடு ஆகியவை, நாடு முழுவதும் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

இந்தநிலையில் பொதுமக்கள் உண்மையை 06

## பிரதமர் பதவி விலகுவதாக மீண்டும் பல வதந்திகள்

உரிய நேரத்தில் அவரே அறிவிப்பார்

ஊடகத்துறை அமைச்சர் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பிரதமர் ம ஹிந்த ராஜபக்ஷவை அந்த பதவியிலிருந்து நீக்குவ தற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என வெளி வந்துள்ள தகவல்கள் தவறுதலானவை என ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி நாலக்க கொடஹேவா தெரிவித்துள்ளார். 06

## நீதிபதிகளின் பாதுகாப்பை உடனடியாக அதிகரிக்கவும்

IGPக்கு பிரதமர் மஹிந்த பணிப்புரை



இலங்கை முழுவதும் உள்ள அனைத்து நீதிமன்ற நீதிபதிகளின் பாதுகாப்பை உடனடியாக அதிகரிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ (08) பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், கடுவெல நீதவானின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் பாதுகாப்பை நீக்குவது தொடர்பில் நீதித்துறை சேவை சங்கம் மற்றும் நீதிக்கான சட்டத்தரணிகள் சங்கம் இணைந்து பிரதமரின் கவனத்திற்கு கொண்டு சென்றதை அடுத்து இந்த 06

### சட்டத்தரணிகள் சங்கத்துடன் SJB, SLFP, சுயாதீன குழு சந்திப்பு;

# இடைக்கால அரசு உருவாக்கம் குறித்து சகல தரப்பும் இணக்கம்

சந்திப்பு குறித்து சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி, பிரதமருக்கு விளக்கம்



BAR ASSOCIATION OF SRI LANKA

இன்று அல்லது நாளை சகல தரப்பும் இணைந்து ஒரு நிலைப்பாட்டுக்கு வருமென நம்பிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இடைக்கால அரசாங்கம் ஒன்றை உருவாக்குவது உள்ளிட்ட பிரதான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பில் நேற்றைய தினம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் சுயாதீன பாராளுமன்ற குழுவுடன் கலந்துரையாடியுள்ளதோடு அது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமரை சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

நெருக்கடி நிலைக்குத் தீர்வாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சில யோசனைகளை முன் வைத்துள்ளதுடன் அந்த சங்கத்தினர் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடனும் 06



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று அநுராதபுரம் புனித ஸ்ரீ மகாபோதிக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். மத அனுஷ்டானங்களில் ஈடுபடுவதற்காக அங்கு வந்திருந்த பக்தர்கள் பிரதமருடன் சுமுகமாக உரையாடுவதை படத்தில் காணலாம்.



**இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தினால் உடன் கைது**

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் 03

## அடுத்த வாரம் முதல் 10 மணி நேர மின்வெட்டு என்பது பொய்

CEB,பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு மறுப்பு



எதிர்வரும் வாரம் முதல் நாட்டின் சகல பகுதிகளிலும் 10 மணித்தியாலங்கள் வரை மின்வெட்டு அமுல்படுத்தப்படுமென இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளதாக சமூக ஊடகங்களில் பரவி வரும் செய்தியை மின்சார சபையும் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவும் நிராகரித்துள்ளன. 06

நம்பிக்கையில்லா பிரேரணை;

## TNA இன்னமும் எந்த முடிவுக்கும் வரவில்லை

சாணக்கியன் MP தெரிவிப்பு



எதிர்க்கட்சியினால் அரசாங்கத்திற்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பது தொடர்பில் இன்னும் எவ்வித இறுதி தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லை என தமிழ் தேசிய கூட்டமைப்பு 06

60வயதுக்கு மேற்பட்டோருக்கு

## இன்று முதல் நான்காவது கொவிட் டோஸ் தடுப்பூசி!

சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமன



நான்காவது கொரோனா தடுப்பூசியை நாட்டு மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்று திங்கட்கிழமை முதல் இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன குறிப்பிட்டுள்ளார். 06

## எரிபொருளின் தரம் குறித்து சந்தேகமா?

அறிவிக்க தொலைபேசி இலக்கங்கள்

எரிபொருளின் தரம் தொடர்பில் ஏதேனும் சிக்கல் காணப்படுமாயின் பாவனையாளர்கள் 011-5455130 என்ற தொலைப்பேசி இலக்கத்திற்கு அழைத்து குறிப்பிட முடியும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, பாவனையாளர்களின் 06

## 113 பெரும்பான்மை கிடைத்தால் பிரதமர் பதவியை ஏற்கத்தயார்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறிவிப்பு



113 பெரும்பான்மை பாராளுமன்றத்தில் கிடைக்குமாக இருந்தால் நிச்சயமாக பிரதமர் பதவியை ஏற்க தான் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாம் எடுக்கும் எந்த முடிவும் மக்களின் குரலை பிரதிநிதித்துவப்படுத்துவதாக இருக்க வேண்டும். மக்கள் வாழும் உரிமையை கோருகின்றனர். அந்த சவாலை ஏற்க நாம் தயார். முழுமையான மாற்றம் வேண்டும் என மக்கள் கோருகின்றனர். பாதிமாற்றம் செய்து சரியாக நாட்டுக்காக 06

நாட்டின் தற்போதைய அசாதாரண சூழல்;

## பொறுமை, புத்திசாலித்தனத்துடன் நாட்டை நிர்வகிக்க உதவுங்கள்

நாட்டு மக்களிடம் பாதுகாப்பு அமைச்சு வேண்டுகோள்

**ஸாதிக் ஷிஹான்**

நாட்டின் தற்போதைய பொருளாதார, சமூக நெருக்கடி மற்றும் அமைதியின்மையுடன் கூடிய சூழலில் புத்திசாலித்தனத்துடனும் பொறுமையுடனும் நிர்வகிக்க உதவுமாறு முதலில் நாட்டின் அனைத்து பிரஜைகளிடமும் பாதுகாப்பு அமைச்சு அன்புடன் கேட்டுக் கொள்கிறது.

ஜனாதிபதியினால் வெள்ளிக்கிழமை நள்ளிரவு பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலை தொடர்பான 06

## எரிவாயு கோரி பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டம்



எரிவாயு கோரி கிரேன்ட்பாஸ் பகுதியில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் நேற்று அதிகாலை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கொழும்பு ஹைலெவல் வீதியின் நாவின்ன பகுதியில் நேற்று காலை முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் 06



**வங்காள விரிகுடாவில் உயர் காற்றழுத்தம்**

கடற்றொழிலாளருக்கு எச்சரிக்கை 03



**காணாமல் போன மகனை காணாமலேயே இறந்த தாய்!**

14 வருடங்களாக போராடிய பெண் மரணம் 03



எதிர்க்கட்சிகள் சாதகமான முடிவுக்கு வராவிடின்

**சுயாதீன குழுக்களின் தலைமையில் இடைக்கால அரசு**

வேறு வழியில்லை என்கிறார் வீரசுமன வீரசிங்க 03

## காலி முகத்திடலில் காளியின் திடீர் அவதாரம்

–சமூக வலைத்தளங்களில் வைரல்



காலிமுகத்திடலில் இடம்பெற்ற காளியாட்டமானது சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் எதிராக மக்கள் பல்வேறு தரப்பிலிருந்து 06

லண்டன் தேர்தலில்

## ஷஸ்னா முஸம்மில் வெற்றி பெற்றுள்ளார்



இங்கிலாந்தில் நடைபெற்ற டொட்டஹன் வட்டாரத்திற்கான உள்ளூராட்சித் தேர்தலில் கொன்சவேட் கட்சியின் ஊடாக போட்டியிட்ட ஊவா மாகாணசபை ஆளுநர் ஏ.ஜே.எம். 06

காலி முகத்திடல்

## போராட்டத்திற்கு ஒரு மாதம் பூர்த்தி



தற்போதைய நெருக்கடி நிலைக்கு தீர்வு கோரி, ஆரம்பிக்கப்பட்ட காலி முகத்திடல் போராட்டத்திற்கு இன்றுடன் ஒரு மாதம் பூர்த்தியாகின்றது. இதற்கமைய நாளை முதல் ஆரம்பமாகும் வாரத்தை, 06


## இடைக்கால அரசுக்கு இடமளிக்க வேண்டும்

தனது டுவிட்டரில் சந்திரிகா பதிவு



இடைக்கால அரசாங்கத்திற்கு இடமளித்து அரசாங்கம் பதவி விலக வேண்டும் அல்லது அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இடைக்கால அரசாங்கத்திற்கு 06

## குடிவரவு,குடியகல்வு திணைக்கள சேவைகள் இன்று முதல் வழமைக்கு



கணனி அமைப்பில் ஏற்பட்டுள்ள அவசர திருத்தப்பணிகள் காரணமாக இடைநிறுத்தப்பட்ட கடவுச்சீட்டு வழங்கும் பணி இன்று திங்கட்கிழமை (9) முதல் வழமையான சேவையில் இருந்து ஆரம்பிக்கப்படும் என குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. மே 5, 6 மற்றும் 9 ஆம் திகதிகளில் சாதாரண சேவையின் கீழ் 06

# சர்வதேச செய்திகள்

## ஹொங்கொங்கின் தலைவராக தீவிர சீன ஆதரவாளர் தேர்வு



ஹொங்கொங்கின் புதிய தலைவராக ஜோன் லீ தெரிவாகியுள்ளார். இந்த பதவிக்கு ஒரே வேட்பாளராக போட்டியிட்ட அவர் இரகசிய வாக்கெடுப்பில் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.


அவரது நியமனம் இந்த நகரில் சீனாவின் பிடியை இறுக்குவதாகவே பரவலாகப் பார்க்கப்படுகிறது. தீவிர சீன ஆதரவாளராக பார்க்கப்படும் லீ, 2019 இல் இடம்பெற்ற ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டங்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை முன்னெடுத்தவராக உள்ளார்.

2017 ஆம் ஆண்டு தொடக்கம் ஹொங்கொங்கின் தலைமை நிறைவேற்றுனராக இருந்த கரி லாமுக்கு பதிலாகவே அவர் அந்த பதவியை ஏற்கவுள்ளார்.

பொரும்பாலும் அனைவரும் சீன ஆதரவாளராக இருக்கும் சுமார் 1500 உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றினாலேயே ஹொங்கொங் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

கடந்த சில ஆண்டுகளாக அரசியல் ரீதியான சர்ச்சைகளை எதிர்நோக்கியுள்ள ஹொங்கொங்கிற்கு தலைவராகப் பொறுப்பேற்கவுள்ள லீ, முன்னர் பாதுகாப்பு அதிகாரியாகப் பணிபுரிந்தவராவார்.

## 3 இஸ்ரேலியரை கொன்ற இரு பலஸ்தீனர்கள் கைது



இஸ்ரேலிய சுதந்திர தினத்தன்று மூன்று இஸ்ரேலியர்களை கோடாரியால் தாக்கிக் கொன்ற இரு பலஸ்தீனர்கள் கைது செய்யப்பட்டதாக இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனர்களுக்கு இடையிலான வன்முறையின் தொடர்ச்சியாக கடந்த வியாழக்கிழமை எல்ஹாத் நகரில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. இந்த தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேலிய படையினர் தாக்குதல்தாரிகளை தேடி கடும் தேடுதலில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் எல்ஹாத் நகருக்கு அருகில் இருக்கும் வனப் பகுதியில் சந்தேக நபர்களான இரு பலஸ்தீனர்களும் பிடிபட்டதாக கூறப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு சம்பந்தப்பட்டவர்கள் என்று 19 வயதான அசாத் யூசுப் அல் ரிபாய் மற்றும் 20 வயதான சுபி இமாத் அபூ சுகைரி ஆகியோரின் பெயர்களை இஸ்ரேலிய படையினர் முன்னதாக வெளியிட்டிருந்தனர்.

பலஸ்தீனர்கள் மற்றும் இஸ்ரேலின் அரபு சிறுபான்மையினர் அண்மைக் காலத்தில் நடத்திய தாக்குதல்களில் 18 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். பதிலுக்கு இஸ்ரேலிய தேடுதல் நடவடிக்கைகளில் குறைந்தது 40 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

## பீஜிங்கில் கொரோனா சோதனை: மக்கள் வரிசையில் காத்திருப்பு



சீனத் தலைநகர் பீஜிங்கில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மில்லியன் கணக்கான மக்கள் கொரோனா பரிசோதனைக்காக வரிசையில் காத்திருந்தனர். ஷங்ஹாய் நகரம் போன்று பீஜிங்கில் நீண்ட கால முடக்கநிலையை அறிவிக்க வேண்டிய கட்டாயம் வந்துவிடக்கூடாது என்று சீன அரசாங்கம் தீவிரப் பரிசோதனையை மேற்கொண்டு வருகிறது. வைரஸ் தொற்றியுள்ள அனைவரும் தனிமைப்படுத்தப்படுகின்றனர்.

பீஜிங், ஷங்ஹாய் உள்ளிட்ட சீனப் பெருநகரங்களில் கடுமையான கட்டுப்பாடுகளால் மக்கள் மனோவியல் ரீதியாகப் பாதிப்படைந்துள்ளனர்.

இதனால் உலகின் இரண்டாவது மிகப் பெரிய பொருளாதாரம் நெருக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. உலக விநியோகத் தொடரும், சர்வதேச வர்த்தகமும் தடைபடுகின்றன. ஆயினும் சீனா, மற்ற நாடுகளைப் போன்று கொவிட்–19 தொற்றுடன் வாழவிரும்பவில்லை. அதை முற்றாகத் துடைத்தொழிக்கவிரும்புகிறது. இருபத்தைந்து மில்லியன் மக்களைக் கொண்ட வர்த்தக மையமான ஷங்ஹாயில், ஒரு மாதத்துக்கும் மேலாக மக்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர்.

உணவு, அவசர மருத்துவம், அத்தியாவசியச் சேவைகள் கிடைக்கவில்லை என்று பலரும் புகார் செய்கின்றனர்.

## உக்ரைனிய பாடசாலை மீது ரஷ்யா தாக்குதல்: பலர் பலி



கிழக்கு உக்ரைனில் ரஷ்யா நடத்திய வான் தாக்குதலில் பாடசாலை ஒன்று தரைமட்டமாகி உள்ள நிலையில் இடிபாடுகளில் காணாமல்போயுள்ள குறைந்தது 60 பேர் உயிரிழந்திருப்பதாக அஞ்சப்படுகிறது.

ரஷ்ய படை பாடசாலை மீது கடந்த சனிக்கிழமை வீசிய குண்டுகளில் இருவர் உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக லுஹன்ஸ்க் பிராந்திய ஆளுநர் செர்ஹிய் ஹெய்டெய் தெரிவித்துள்ளார். இடிபாடுகளில் இருந்து 30 பொதுமக்கள் மீட்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிலோஹொர்கா கிராமத்தில் இருக்கும் இந்த பாடசாலையில் சுமார் 90 பேர் அடைக்கலம் பெற்றிருந்தனர். தாக்குதலை அடுத்து கட்டடத்தில் தீ பரவியுள்ளது.

"சுமார் நான்கு மணி நேரத்துக்கு பின் தீ அணைக்கப்பட்டது. பின்னர் இடிபாடுகள் அகற்றப்பட்டபோது துரதிருஷ்டவசமாக இரு சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன" என்று ஹெய்டெய் குறிப்பிட்டுள்ளார்.

டெலிகிராம் செயலியில் அவர் வெளியிட்டிருக்கும் பதிவில் மேலும் கூறியிருப்பதாவது, "இடிபாடுகளில் இருந்து முப்பது பேர் வெளியேற்றப்பட்டனர். அவர்களில் ஏழு பேர் காயமடைந்துள்ளனர். இடிபாடுகளில் சிக்கில் அறுபது பேர் உயிரிழந்திருக்க வாய்ப்பு உள்ளது" என்றார். பிலோஹொர்கா கிராமம் அரச கட்டுப்பாட்டில் இருக்கும் செவரோடோனெட்ஸ்க் நகருக்கு அருகில் அமைந்துள்ளது. இந்த நகரில் உக்ரைன் படைக்கும் ரஷ்யாவுக்கும் இடையே உக்கிர மோதல் இடம்பெற்று வருகிறது.

ரஷ்யப் படை பொதுமக்களை இலக்கு வைப்பதாகவும் போர் குற்றத்தில் ஈடுபடுவதாகவும் உக்ரைன் மற்றும் மேற்கத்திய நாடுகள் சுமத்தும் குற்றச்சாட்டை ரஷ்யா தொடர்ந்து மறுத்து வருகிறது.

உக்ரைனில் 10 வாரங்களாக நீடித்துவரும் ரஷ்ய போரினால் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டு, பல நகரங்களும் அழிக்கப்பட்டிருப்பதோடு ஐந்து மில்லியன் உக்ரைனியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

## ஆப்கான் பெண்கள் முகத்தை மறைக்க தலிபான்கள் ஆணை



ஆப்கானிஸ்தானில் கடந்த சில தசாப்தங்களுக்கு பின்னர் பெண்கள் முகத்தை மறைக்கும் வகையில் பர்தா அணிவதற்கு ஆளும் தலிபான்கள் ஆணை ஒன்றை பிறப்பித்துள்ளனர்.

இதனை கடைப்பிடிக்காத மற்றும் புறக்கணிக்கும் பெண்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஆண் பாதுகாவலர் ஒருவர் மூன்று நாள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டி வரும் என்று அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

1990களில் தலிபான்கள் ஆட்சியில் இருந்தபோதும் பெண்கள் உடலின் அனைத்து பாகங்களையும் மறைக்கும் புர்கா அணிவதற்கு விதிக்கப்பட்டிருந்தனர்.

எனினும் கடந்த ஆண்டு மீண்டும் ஆட்சியை பிடித்த தலிபான்கள் இந்த கட்டுப்பாட்டை நகர் பகுதிகளில் அமுல்படுத்தவில்லை.

ஆப்கானில் பெரும்பாலான பெண்கள் ஏற்கனவே உடல் முழுவதையும் மறைக்கும் புர்கா ஆடையை அணிந்தபோதும், குறிப்பாக நகர்புற பகுதிகளில் தமது தலையை மறைக்கும் சாதாரண ஆடைகளையே அணிகின்றனர். இந்நிலையில் தலிபான்களின் தீயவற்றை தடுப்பது மற்றும் நல்லொழுக்கத்தை ஊக்குவிக்கும் அமைச்சு இந்த ஆணையை பிறப்பித்துள்ளது. இந்த ஆணையை ஓர் அறிவுறுத்தல் என்றே தலிபான்கள் குறிப்பிட்டபோதும், இதனை பின்பற்றாதவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது.

இதனை மீறும் முதல் முறை பெண்ணின் விட்டுக்குச் சென்று அவரது கணவர், சகோதரர் அல்லது தந்தையுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும். இரண்டாவது முறை ஆண் பாதுகாவலருக்கு அமைச்சினால் அழைப்பாணை விடுக்கப்படவுள்ளது. மூன்றாவது முறை ஆண் காவலர் நீதிமன்றத்திற்கு அழைக்கப்படவிருப்பதோடு, அவர் மூன்று நாள் சிறை தண்டனைக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும்.

## நீர்மூழ்கி கப்பலில் இருந்து வடகொரிய ஏவுகணை வீச்சு



கொரிய தீபகற்பத்தின் கிழக்குக் கரைக்கு அப்பால் நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து பலிஸ்டிக் ஏவுகணையை வீசி வடகொரியா சோதனை மேற்கொண்டிருப்பதாக தென்கொரியா மற்றும் ஜப்பான் கூறியுள்ளன. இது உறுதி செய்யப்படும் பட்சத்தில், வடகொரியா அண்மைக் காலத்தில் நடத்திவரும் ஏவுகணை சோதனைகளின் தொடர்ச்சியாக இது அமையும்.

தென்கொரிய புதிய ஜனாதிபதியாக யூன் சுக் யிவோல் பதவியேற்று சில நாட்களிலேயே இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது. வடகொரியா தொடர்பில் கடும் நிலைப்பாட்டை எடுப்பது பற்றி யிவோல் உறுதி அளித்துள்ளார். இந்த சோதனை சர்வதேச சமூகத்திற்கு ஏற்க முடியாத அச்சுறுத்தலாக உள்ளது என்று ஜப்பான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. எந்தவிதமான சூழ்நிலைகளையும் கையாள்வதற்கு தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும், விமானங்கள் மற்றும் கப்பல்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு ஜப்பான் பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

## 'மரியுபோல்' உருக்காலையில் இருந்து மக்கள் வெளியேற்றம்



உக்ரைனின் மரியுபோல் நகரில் முற்றுகையில் உள்ள அசொவ்ஸ்டால் உருக்காலையில் இருந்து வயதானவர்கள், சிறுவர்கள் மற்றும் பெண்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டதாக ரஷ்யா மற்றும் உக்ரைன் தெரிவித்துள்ளன.

அங்கிருக்கும் மக்களை வெளியேற்றும் நடவடிக்கை ஐ.நா மற்றும் செஞ்சிலுவை சங்கத்தின் ஒருங்கிணைப்போடு ஒரு வாரத்துக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது.

மரியுபோல் நகர் ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் வந்தபோதும் இந்த உருக்காலையை உக்ரைனிய படை தொடர்ந்து தக்கவைத்துள்ளது. இங்கு ரஷ்யா கடும் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

கடந்த சில வாரங்களாக இந்த உருக்காலையை முற்றுகையில் வைத்திருக்கும் ரஷ்யா, உக்ரைனிய படைகளை சரணடையும்படி அழுத்தம் கொடுத்து வருகிறது.

இந்நிலையில் மரியுபோலில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்றுவது தொடர்பிலான இராஜதந்திர முயற்சிகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் செலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

## இந்திய–டென்மார்க் இடையே பசுமை மூலோபாயத் திட்டம்



இந்திய பிரதமர் நரேந்திர மோடி டென்மார்க்குக்கு மேற்கொண்ட இராஜதந்திர விஜயத்தின் ஊடாக இந்தியா–டென்மார்க் பசுமை மூலோபாய கூட்டாண்மையில் புதியதொரு அத்தியாயம் ஆரம்பமாகியுள்ளதாகவும் இரு நாடுகளுக்கும் பரஸ்பரம் நன்மை பயக்கும் ஒத்துழைப்பின் இலட்சிய நிகழ்ச்சிநிரலாக அமைந்துள்ளதாகவும் இந்திய வெளிவிவகார செயலாளர் வினாய் குவாத்ரா தெரிவித்துள்ளார்.

டென்மார்க்குக்கான விஜயத்தை தொடர்ந்து பல உயர்மட்ட பேச்சுவார்தைகள் இருநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்றுள்ளன. அதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர், "பிரதமர் மோடியும் டென்மார்க் பிரதமர் மெட்டே பிரடெரிக்சனும் முழு அளவிலான இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் உலகளாவிய, பிராந்திய நலன்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடினர். இவ்விஜயத்தின் ஊடாக இந்தியா–டென்மார்க் பசுமை மூலோபாயக் கூட்டாண்மையில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது. இது இரு நாடுகளது பொருளாதாரங்களுக்கும் சமூகங்களுக்கும் பரஸ்பர நன்மை பயக்கும் ஒத்துழைப்பின் ஒரு இலட்சிய நிகழ்ச்சி நிரலாக அமையும்" என்றுள்ளார்.

## சவூதி மன்னர் சல்மான் மருத்துவமனையில் அனுமதி




சவூதி அரேபியாவின் வயதான மன்னர் சல்மான் குறிப்பிடப்படாத மருத்துவ சோதனை ஒன்றுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக அந்நாட்டு அரச ஊடகம் நேற்று செய்தி வெளியிட்டுள்ளது. மன்னர் சல்மான் கடந்த 2015 ஆம் ஆண்டு தொடக்கம் அரபு உலகின் மிகப் பெரிய பொருளாதாரமான சவூதியில் ஆட்சி புரிந்து வருகிறார். எனினும் 86 வயதான அவரது உடல் நிலை குறித்து தொடர்ந்து மர்மம் நீடித்து வருகிறது. இந்நிலையில் துறைமுக நகரான ஜித்தாவில் உள்ள மன்னர் பைசல் சிறப்பு வைத்தியசாலையில் கடந்த சனிக்கிழமை அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் மீது சில மருத்துவ சோதனைகள் நடத்தப்படவிருப்பதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

"இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலரை இறைவன் காக்க வேண்டும். அவரது சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்திற்காக பிரார்த்திக்கிறோம்" என்று அரச சபை வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. எனினும் மன்னரின் உடல் நிலை குறித்து அறிவிக்கப்படுவது மிக அரிதான ஒன்றாக பார்க்கப்படுகிறது.

முன்னதாக மன்னரின் இதய முடுக்கியின் மின்கலத்தை மாற்றுவதற்காக தலைநகர் ரியாதில் உள்ள மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டதாக இந்த ஆண்டு ஆரம்பத்தில் அரச ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது.


## உலகின் பெரும் வெள்ளை வைரம் ஜெனீவாவில் ஏலம்



உலகில் மிகப்பெரிய வெள்ளை வைரக் கல் வரும் புதன்கிழமை ஜெனீவாவில் ஏலம் விடப்படவுள்ளது. 'தி ரொக்' என்று அழைக்கப்படும் இந்த வைரம் 30 மில்லியன் டொலர் அல்லது அதற்கு மேல் ஏலம் போகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

228.31 கெரட் எடை உள்ள பேரிக்காய் வடிவிலான இந்த வைரம் தற்போது அடையாளம் வெளியிடப்படாத வட அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவருக்கு சொந்தமாக உள்ளது. இந்நிலையில் இந்த வைரம் ஏலத்தில் சாதனைத் தொகைக்கு விலைபோகலாம் என்று நம்பப்படுகிறது. இந்த வைரம் 2000களின் ஆரம்பத்தில் தென்னாபிரிக்காவில் உள்ள சுரங்கம் ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டு 163.41 கெரட் வெள்ளை வைரம் கிறிஸ்டி ஏலவிற்பனையகத்தால் 33.7 மில்லியன் டொலர்களுக்கு விற்கப்பட்டது. இந்நிலையில் இந்த வைரக்கல்லையும் கிறிஸ்டி ஆபரணத் திணைக்களமே ஏலம் விடவுள்ளது.

## கியூபா ஹோட்டலில் வெடிப்பு: 26 பேர் பலி



கியூபாவின் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பாரிய வெடிப்பில் குறைந்தது 26 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு 60க்கும் அதிகமானோர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பழைய ஹவானாவில் சரடோகா ஹோட்டலுக்கு வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எரிவாயு டேங்கர் ஒன்றில் தீப்பிடித்தே இந்த வெடிப்பு நிகழ்ந்துள்ளது. இதில் ஹோட்டலின் பல மாடிக் கட்டடங்களும் சேதமடைந்துள்ளன. பெருந்தொற்றுக் காரணமாக மூடப்பட்ட இந்த ஹோட்டல் அடுத்த வாரம் மீண்டும் திறக்கப்படவிருந்தது. இடிபாடுகளில் சிக்கியிருப்போரைத் தேடி தொடர்ந்து மீட்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

உயிரிழந்தவர்களில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் மற்றும் குழந்தை ஒன்று இருப்பதாக கூறப்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் அருகில் இருக்கும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சக்திவாய்ந்த வெடிப்பினால் ஹோட்டலின் மேற்சுவர் இடிந்து பெரும் அழிவு நேர்ந்துள்ளது.



பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வேந்தராக பேராசிரியர் ஜி.எச். பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.

# பிரச்சினைகளை மேலும் மோசமடையச் செய்யலாம்

## அவசரகால நிலை நீக்குமாறு PUCSL ஜனாதிபதியிடம் கோரிக்கை

மின்வெட்டு, தற்போதைய ஆர்ப்பாட்டம் மற்றும் பொது மக்களிடையே அமைதியின்மை அதிகரித்துள்ள இச்சந்தர்ப்பத்தில் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவது தற்போதைய பொருளாதார பிரச்சினைகளை மேலும் மோசமடையச் செய்யும் எனவும் அதனால் அவசரகால நிலையை பிரகடனப்படுத்துவதை தவிர்க்குமாறு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அரசாங்கத்திற்கு அறிவுறுத்தியுள்ளது.

பொது பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி 2278/22 இலக்க

06

## 240 கிலோ ஹெரோயின் போதைப் பொருளுடன் ஏழு வெளிநாட்டவர் கைது

லோரன்ஸ் செல்வநாயகம்

240 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஏழு வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக நேற்று கடற்படையினர் தெரிவித்தனர்.

சர்வதேச கடற்பரப்பில் வைத்து போதைப்பொருளுடன் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

புலனாய்வுத் துறை அதிகாரிகளின் தகவல்களுக்கிணங்க கடற்படையினரும் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளும் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இந்த போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

## ஓய்வூதியர்களின் பொதுச்சபைக் கூட்டம்

புதிய காத்தான்குடி விசேட நிருபர்

அரச சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் காத்தான்குடி பிரதேசக்கிளையின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் (2022/2023) இன்று (09) பிற்பகல் 4 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேசக்கிளையின் தலைவர் கே.எம்.ஏ அஸீஸ் தலைமையில் நடை பெறும் இக்கூட்டத்தில் காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ. உதய ஸ்ரீதர் பிரதம அதிதியாகவும் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி எம்.எஸ். சில்மியா கௌரவ அதிதியாகவும் மற்றும் பிரதேச செயலக கணக்காளர் செல்வி கே சித்ரா உட்பட மாவட்ட ஓய்வூதியர்களின் தலைவர் செயலாளர் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொள்வர்.

# இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தினால் உடன் கைது

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்



இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தினால் ஆர்ப்பாட்டக்காரர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் பாராளுமன்றத்திற்கு அருகில் உள்ள வீதியில் இடம் பெற்றது போல ஆர்ப்பாட்டக்காரர்கள் பல மணிநேரம் முக்கிய வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களிற்கும் பாராளுமன்றம் செல்லும் பாராளுமன்ற உறுப்பினர்களிற்கும் பாதுகாப்பான போக்குவரத்தை உறுதிப்படுத்தவேண்டியது எங்கள் கடமை என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொலிஸார், படையினர், பிரதேச செயலாளர்களின் உதவியுடன் அவசரகால நிலையை நடைமுறைப்படுத்தியதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெற்ற பாதுகாப்பு கவுன்சிலின் கூட்டத்தின் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தனியாக அதிகாரிகளை சந்தித்தார் என அவர் தெரிவித்துள்ளார்.

நிலைமை கட்டுப்பாட்டை மீறி செல்வதை தவிர்ப்பதற்காகவும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் அவசரகால நிலை அறிவிக்கப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

# 'பிரதமர் மஹிந்தவை பாதுகாப்போம்' இன்று அலரி மாளிகையில் பேரணி

## SLPP உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஏற்பாடு

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பதவி விலகுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்துள்ள கோரிக்கை தொடர்பில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இன்றைய தினம் அலரிமாளிகையில் கூடவுள்ளனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு தெரிவித்து 'பிரதமர் மஹிந்தவை பாதுகாப்போம்' என பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் இன்று காலை அலரிமாளிகை முன்பாக போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

பிரதமரின் பதவி விலகல் குறித்து பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி விடுத்த கோரிக்கை தொடர்பில் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதுடன், கட்சியின் அடுத்தகட்ட நகர்வு குறித்து உறுதியான தீர்மானம் எட்டப்படும்.

சமூக கட்டமைப்பில் தோன்றிய பிரச்சினைகளுக்கு தீர்வு, தான் பதவி விலகலை மையப்படுத்தியதாக அமையாது. பதவி விலகலை தொடர்ந்து அடுத்தக்கட்டமாக முன்வைத்துள்ள யோசனைகள் நடைமுறைக்கு பொருத்தமாக அமையாது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகுவதை பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் எவரும் விரும்பவில்லை. தற்போதைய நெருக்கடியான சூழ்நிலைக்கு அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில்

06

# அவசரகால நிலை பிரகடனப்படுத்தியதன் காரணம் என்ன?

லோரன்ஸ் செல்வநாயகம்

அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டதற்கான காரணத்தை விளக்குமாறு மனித உரிமை ஆணைக்குழு அரசாங்கத்தை கேட்டுக்கொண்டுள்ளது. அதற்கிணங்க நாட்டில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தியுள்ளதற்கான காரணங்களை தெளிவுபடுத்துமாறு கோரி இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவானது ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன மற்றும் பொலிஸ் மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்ன ஆகியோருக்கு இன்று ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அறிவித்தல் விடுத்துள்ளது.

அது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள மனித உரிமை ஆணைக்குழு, அரசாங்கத்திற்கு எதிராக தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அமைதியாக

## காமினி செனரத், கமல் குணரத்ன, சீ.வி. விக்ரமரத்னவுக்கும் மனித உரிமை ஆணைக்குழுவில் ஆஜராக அழைப்பு

06

# அரசியல் தீர்வை பெற்றுக் கொடுக்க தமிழக முதல்வர் பங்களிக்க வேண்டும்

## ஸ்ரீதரன் எம்பி வேண்டுகோள்

லோரன்ஸ் செல்வநாயகம்,
ஷம்ஸ் பாஹிம்



இந்தியாவின் உதவிகளைப் பெற்று வரும் நிலையில் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் கூற்றை ஏற்று தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும் என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் எம்பி ஸ்ரீதரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

திறந்த மனதுடன் இலங்கை மக்களுக்கு உதவி செய்ய முன்வந்துள்ள தமிழக முதல்வர் மு. க ஸ்டாலின் 70 ஆண்டுகளுக்கு மேல் தொடரும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை பெற்றுக் கொடுப்பதிலும் முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக்கொண்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை தொடர்பில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும்

06

# 220 லட்சம் மக்களின் சிறப்புரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்,
ஷம்ஸ் பாஹிம்

பாராளுமன்றத்தில் 225 பேரின் சிறப்புரிமை மட்டுமன்றி நாட்டு மக்கள் 220 லட்சம் பேரின் சிறப்புரிமையையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கட்சித் தலைவர்கள் மட்டுமன்றி நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்துவது அவசியம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சபை முதல்வர் தினேஷ் குணவர்தன தெரிவித்த கூற்றுக்கு பதிலளிக்கும் வகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

கட்சித் தலைவர்கள் கூட்டம் ஹன்சாட்டில் பதியப்பட மாட்டாது. அது ஒளிபரப்பப்படவும் மாட்டாது. வெளியே உள்ள மக்களுக்கு அது தெரிய வரப் போவதுமில்லை.

06

# சாதாரண தரப் பரீட்சை தொடர்பில் பரீட்சை திணைக்களம் விசேட அறிவிப்பு



2021ஆம் கல்வி ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்கான அனுமதி மற்றும் பரீட்சை அட்டவணைகள் உரிய பாடசாலை அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்துள்ளார்.

அனுமதிப் பத்திரங்கள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு முன்னர், பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த மாதம் 23ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் முதலாம் திகதி வரை சாதாரண தரப்பரீட்சை நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கான நேர அட்டவணை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம்ய மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு 0112 784 208, 0112 784 537, 0113 188 350 மற்றும் 0113 140 314 அல்லது 1911 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## வங்காள விரிகுடாவில் உயர் காற்றழுத்தம்

### கடற்றொழிலாளருக்கு எச்சரிக்கை

வங்காள விரிகுடாவில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் உயர் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாகி, அடுத்த சில மணி நேரங்களில் சூறாவளியாக உருவாகலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

பிற்பகல் வேளையில், கிழக்கு, மத்திய வங்காள விரிகுடாவில் இது சூறாவளியாக உருவாகும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. அதன்படி, மறுஅறிவித்தல் வரும் வரை அந்தப் பகுதிகளில் மீன்பிடிப் படகுகளை இயக்க வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மணித்தியாலத்துக்கு 90 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசுவதோடு, கடல் மிகவும் கொந்தளிப்பாக காணப்படும்.

எதிர்க்கட்சிகள் சாதகமான முடிவுக்கு வராவிடின்

# சுயாதீன குழுக்களின் தலைமையில் இடைக்கால அரசு

## வேறு வழியில்லை என்கிறார் வீரசுமன வீரசிங்க



இடைக்கால அரசாங்கம் தொடர்பில் எதிர்க்கட்சிகள், சாதகமான தீர்மானத்தை எதிர்வரும் வாரத்திற்குள் முன்னெடுக்காவிடின் சுயாதீன குழுக்களின் தலைமையில் இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிப்பது குறித்து அவதானம் செலுத்தப்படும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் வாரம் பதவி நீக்கப்படலாம் அல்லது அவர் பதவி விலகலாம் என அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்தார்.

இடைக்கால அரசாங்கம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இடைக்கால அரசாங்கத்திற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கொள்கை ரீதியில் இணக்கம் தெரிவித்துள்ளது. பொதுஜன பெரமுனவுடனான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை எதிர்வரும் வாரம் இடம்பெறவுள்ளது.

சர்வ கட்சிகளையும்

06

# காணாமல் போன மகனை காணாமலேயே இறந்த தாய்!

## 14 வருடங்களாக போராடிய பெண் மரணம்



"சாகுறதுக்கு இடையில என்ட பிள்ளைகள கண்ணால காணனும். கடைசி வரைக்கும் நான் சாகும் மட்டும் மரண சான்றிதழை நான் வாங்க மாட்டேன்" என உறுதியாக இருந்த தங்கராசா செல்வராணி, அதே நிலைப்பாட்டில் நேற்று இந்த உலகை விட்டு விடைப் பெற்றுள்ளார்.

இலங்கையில் இடம் பெற்ற உள்நாட்டு யுத்தம் 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்ட போதிலும், அதன் பாதிப்புகள் இன்று வரை அவ்வாறே காணப்படுகின்றன.

யுத்த காலப் பகுதியில் காணாமல் போன உறவுகளை தேடி, இன்றும் இலங்கையில் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் காணாமல் போனோரை தேடும் தேடல், இன்றும் தொடர்கின்றது.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், இன்றும் தமது உறவுகளை தேடி போராடி வருகின்ற

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
| --- | --- | --- |
| அவுஸ்திரேலியா டொலர் | 249.07 | 260.33 |
| கனடியன் டொலர் | 273.95 | 285.05 |
| யூரோ | 373.83 | 383.45 |
| ஜப்பான் யென் | 2.7067 | 2.8119 |
| சிங்கப்பூர் டொலர் | 255.10 | 263.99 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 440.04 | 455.34 |
| சுவிஸ் பிராங்க் | 359.43 | 373.10 |
| அமெரிக்க டொலர் | 350.05 | 362.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
| --- | --- | --- | --- |
| பஹ்ரின் டினார் | 901.77 | கட்டார் ரியால் | 92.56 |
| குவைத் டினார் | 1,108.57 | சவூதி ரியால் | 90.64 |
| ஓமான் ரியால் | 883.08 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 26ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷவ்வால் பிறை 07



**குறள் தரும் சிந்தனை**

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது

தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்கப் பிறன் தனக்கு செய்த உதவிக்கு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் கைமாறாகக் கொடுத்தாலும் ஈடு ஆக முடியாது.

# மக்களின் நலன்களுக்காக அவசரகால நிலை பிரகடனம்

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரி அண்மைய சில வாரங்களாக ஆர்ப்பாட்டங்கள், தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வரும் நடவடிக்கைகள் ஆத்திரமூட்டும் ஆவேசமான எதிர்ப்பு போராட்டங்களாக அமைந்திருக்கின்றன. அவை மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிக்கக்கூடிய வகையிலும் மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் விதத்திலும் காணப்படுகின்றன.

அதாவது பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கோரி ஆரம்பமான ஆர்ப்பாட்டங்கள் வன்முறை மற்றும் கலவர நிலையை நோக்கி நகர்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இதற்கு பாராளுமன்றத்திற்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஆத்திரமூட்டும் விதத்தில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான ஆர்ப்பாட்டங்களும் தொழிற்சங்க நடவடிக்கைகளும் மக்களின் இயல்பு வாழ்வுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையிலும் மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் விதத்திலும் அமைந்திருப்பதால் மக்களுக்கான எரிபொருள் விநியோகம் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை சீராகவும் ஒழுங்கு முறையாகவும் முன்னெடுப்பது பெரும் சவாலுக்கு உள்ளாகியுள்ளன.

குறிப்பாக ஆர்ப்பாட்டங்கள், தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாகப் பொதுப் போக்குவரத்து பயணிகள் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அவர்களால் உரிய நேர காலத்தில் கடமைக்கோ, சேவை பெற்றுக்கொள்ளும் நிலையங்களுக்கோ செல்ல முடியாத துரதிஷ்டகரமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அதிலும் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் உரிய நேர காலத்தில் பாடசாலைக்கோ, அரச, தனியார் ஊழியர்கள் தங்கள் கடமை நிலையத்திற்கோ, வைத்தியசாலைகளில் மருத்துவ சேவைகளைப் பெற்றுக்கொள்ள செல்லவோ முடியாத நிலைமை உருவாகியுள்ளன.

வீதிகளை மறித்து முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களாலும் மக்களுக்கான சேவைகளை பாதிக்கக் கூடிய வகையிலான தொழிற்சங்க நடவடிக்கைகளாலும் மக்கள் மணித்தியாலயக் கணக்கில் வீதிகளில் காத்து நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்கு உள்ளாகி வருகின்றனர்.

இவ்வாறு அரச தனியார்த் துறை ஊழியர்கள் எதிர்கொண்டு வரும் அசௌகரியங்களால் நாட்டின் உற்பத்திகள் மற்றும் சேவைகள் துறையில் பெரும் தாக்கங்களும் பாதிப்புகளும் ஏற்பட்டு வருகின்றன. இதன்படி பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரி முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் பொருளாதார நெருக்கடியை மென்மேலும் அதிகரிக்க வழிவகுக்கும் வகையில் அமைந்து வரும் நிலையை ஏற்படுத்தியுள்ளன.

மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிக்கக்கூடிய வகையிலும் அவர்களது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் வகையிலும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரி முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் வளர்ச்சி பெற்று வருவதாக சமூக நல ஆர்வலர்களும் சுட்டிகாகட்டியுள்ளனர். இந்நிலைமை தொடர்வதற்கும் வளர்ச்சி பெறுவதற்கும் இடமளிப்பது ஆரோக்கியமானதல்ல. அது நாட்டை மென்மேலும் நெருக்கடிகளுக்குள்ளும் பாதிப்புகளுக்குள்ளுமே தள்ளிவிடும்.

அதன் காரணத்தினால் இந்நிலைமை தொடர்பில் விஷேட கவனம் செலுத்திய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த 06 ஆம் திகதி முதல் அவசர கால நிலையைப் பிரகடனப்படுத்தி இருக்கின்றார்.

நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதையும் அவர்களது இயல்பு வாழ்வை கட்டியெழுப்புவதையும் பிரதான நோக்கமாகக் கொண்டு அவர் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். அதாவது ஆர்ப்பாட்டங்கள், தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் மக்களுக்கு இடையூறுகள் இன்றி அத்தியாவசிய சேவைகள் மற்றும் விநியோகங்களை மேற்கொள்ளவும் மக்கள் தமது பயணங்களை சுதந்திரமாக மேற்கொள்ள வழி செய்யவுமே இதன் ஊடாக எதிர்ப்பார்க்கப்பட்டு இருக்கின்றது. மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி செயற்படும் ஒரு பொறுப்புமிக்க தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி இந்நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கின்றார்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண பல வழிகளிலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சூழலில், மக்களது இயல்பு வாழ்வு பாதிக்கப்படவோ அவர்களது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படவோ இடமளிக்கப்படலாகாது. அத்தோடு மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளும் வசதிகளும் இடையூறுகள் இன்றி கிடைக்கப்பெறவும் வேண்டும். அதனை உறுதிப்படுத்துவதும் இந்நடவடிக்கையின் மற்றொரு நோக்கமாக விளங்குகிறது.

ஆகவே மக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்படும் விதத்திலோ அவர்களது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் விதத்திலோ அவர்களுக்கான சேவைகளுக்கு இடையூறுகள் ஏற்படும் விதத்திலோ மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதிக்கும் விதத்திலோ ஆர்ப்பாட்டங்களும், தொழிற்சங்க நடவடிக்கைகளும் அமையக்கூடாது. அதன்மூலம் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதைத் தவிர்த்துக்கொள்ள முடியும். அதுவே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# கணினியில் நீண்ட நேரம் பணியாற்றுபவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை

வேலை அல்லது பொழுது போக்கு நோக்கத்திற்காக நிறைய பேர் மடிக்கணினியை நீண்ட நேரம் உபயோகிக்கின்றனர். அதிலும் கொவிட் 19 தொற்று அச்சுறுத்தல் தோற்றம் பெற்ற பின்னர் வீட்டிலிருந்து பணியாற்றுபவர்களில் பெருபாலானவர்கள் கணினி ஊடாகவே பணியாற்றுவது தெரிந்ததே. அதனால் கணினி முன்பாக அமர்ந்து மணித்தியாலயக்கணக்கில் நேரத்தை செலவிடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இன்றைய நவீன டிஜிட்டல் யுகத்தில் கணினி பயன்பாடு தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியுள்ளது.

ஆனால் கணினி உள்ளிட்ட டிஜிட்டல் சாதனங்கள் முன்பாக நீண்ட நேரம் அமர்ந்து பணியாற்றுவதும் பொழுது போக்குக்காக நேரத்தைக் கழிப்பதும் கண்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதோடு உடல் உள ஆரோக்கியத்தைப் பாதிப்புக்குள்ளாக்கும் என்று மருத்துவ ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

குறிப்பாக மடிக்கணினி அல்லது கணினியில் பணியாற்றுவதன் மூலம் அல்லது பொழுது போக்குக்காக நீண்ட நேரத்தைக் கழிக்கும் போது கழுத்து வலி, முதுகு வலி, தலைவலி, சோர்வு போன்ற பாதிப்புகள் உண்டாகும். குறித்த இடத்தில் ஒரே மாதிரியாக நீண்ட நேரம் அமர்ந்திருக்கும் போது உடல் தோற்றத்தின் நிலையிலும் மாற்றத்தை உருவாக்கும். அதாவது ஒரு பக்கமாக சாய்ந்தே உட்கார்ந்து பழகிவிட்டால், எல்லா நேரங்களிலும் அவர்களை



அறியாமலே அவ்வாறே அமரக்கூடிய பழக்கம் ஏற்பட்டுவிடும்.

பொதுவாக ஒரே நிலையில் அதிக நேரம் அமர்ந்திருக்கும் போது உடலின் அந்த பகுதி தசைகள் இறுக்கமாகிவிடும். அதன் விளைவாக அப்பகுதிகளில் இரத்த ஓட்டமும் பாதிக்கப்படலாம். இந்நிலைமையைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் முதுகுப்பகுதி வளையாத நாற்காலி அமைப்பு இருக்க வேண்டும். கண் பார்வை மட்டத்திற்கு இணையாகவோ அல்லது அதற்கு சற்று கீழாகவோ கணினியை வைத்திருப்பது மிகவும் அவசியம். விசைப்பலகையை முழங்கைகளுக்கு ஓய்வு கொடுப்பதற்கு வசதியான நிலையில் வைத்திருக்க வேண்டும்.

அதேநேரம் தொடர்ச்சியாக கணினி அல்லது மடிக்கணினியை பார்த்துக்கொண்டிருக்கும் போதுகண்களுக்குஅழுத்தம் ஏற்படும். திரை தூரத்தில் இருந்தாலும் கூட கண்களுக்கு சோர்வு ஏற்பட்டு அழுத்தம் உண்டாவது தவிர்க்க முடியாதது. இதனை தடுக்க அறையில் இருக்கும் விளக்கு வெளிச்சம் நேரடியாக கண்களில் பிரதிபலிக்கக்கூடாது. கணினி திரையை சற்று சாய்வாக வைத்திருப்பது நல்லது. திரையின் வெளிச்ச அளவையும் குறைத்து வைத்துக் கொள்ள வேண்டும். அடிக்கடி திரையில் இருந்து கண்களை விலக்கி வேறு பக்கம் பார்க்க வேண்டும். பார்வை மங்கலாகவும், தலைவலியும் காணப்படுமாயின் கண்களை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்று கண் சிகிச்சை நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும் கணினி திரையில் நீண்ட நேரம் செலவிடும்போது தூங்கும் நேரம் குறைந்துவிடும். திரையிலிருந்து வெளி வரும் நீல நிற ஒளியானது மெலடோனின் என்ற தூக்க ஹார்மோனுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும். இதன் விளைவாக இரவில் தூங்குவதற்கு சிரமப்பட வேண்டியிருக்கும். நாளடைவில் தூக்கமின்மை பிரச்சினை தலைதூக்கும். இதனைத் தவிர்க்கவென இரவு வேளையில் மடிக்கணினியில் வேலை செய்வதை முடிந்த வரை தவிர்த்துக் கொள்வது நல்லது. அவ்வாறு வேலை செய்ய வேண்டிய நிலை காணப்படுமாயின் 20 நிமிடங்களுக்கு ஒரு முறையாவது சில வினாடிகள் கண்களை மூடி திறக்க வேண்டும். குறிப்பிட்ட இடைவெளியில் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளவும் தவறக்கூடாது.

அதேநேரம் மடிக்கணினியில் நீண்ட நேரம் பணியாற்றும் போது இரண்டாம் வகை நீரிழிவு, இதய நோய், புற்றுநோய் போன்றவை ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகரிக்கும். அத்தோடு டிஜிட்டல் சாதனங்களில் அதிகம் நேரத்தை செலவிடும் போது உடலில் இன்சுலின் அளவு அதிகரிக்கும் என்பது விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவை இவ்வாறிருக்க இரத்த ஓட்டத்தில் கொழுப்பு சேரவும், பக்கவாதம் ஏற்படும் அபாயத்தை அதிகரிக்க இவை வழிவகுக்கும். அதனால் கணினியில் அதிக நேரத்தை செலவிடுபவர்கள் துரித உணவு, கொழுப்பு உணவுகள் என்பவற்றை உட்கொள்வதை தவிர்த்து சத்தான பழங்களை சாப்பிடுவது நல்லது.

மடிக்கணினியில் நீண்ட நேரம் வேலைசெய்யும் போது மூளையின் சிந்தனை செயல்முறைக் கட்டமைப்பிலும் மாற்றங்கள் ஏற்பட வழிவகுக்கலாம். அதாவது மூளையின் சமிக்ஞைகளை பலவீனப்படுத்தி அறிவாற்றல் செயல் முறையை பாதிக்கக்கூடும். அதனால் நினைவாற்றல் பாதிக்கப்படும். இதனை தவிர்க்க கண்களுக்கு பயிற்சி கொடுக்க வேண்டும். தியானமும் செய்யலாம்.

# வங்க கடலில் இலங்கை பெயரிட்டுள்ள அசானி புயல்

வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் உயர் காற்றழ்த்த தாழ்வு மண்டலமாக நேற்று உருவாகியுள்ளது. இது புயலாக மாறலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இப்புயலுக்கு 'அசானி' எனப் பெயரிடப்படப்பட்டுள்ளது. இப்பெயரை இலங்கையே சூட்டியுள்ளது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உருவாகும் ஒவ்வொரு புயலுக்கும் ஒவ்வோர் பெயர் சூட்டப்படும் வழக்கம் உண்டு. அந்த வகையில் இம்முறை உருவாகியிருக்கும் புயலுக்கு அசானி என பெயர் சூட்டப்பட்டுள்ளது. இப்பெயரையே இலங்கை சூட்டியுள்ளது. அசானி என்றால் சிங்கள மொழியில் 'கடும் சீற்றம்' என்ற பொருளைத் தரக்கூடியதாகும்.

உலக வானிலை அமைப்பின் வழிகாட்டுதலின்படி, இயற்கை சீற்றங்களின் தகவல்களை பெறுவதில் குழப்பத்தைத் தவிர்ப்பதற்காக ஒவ்வோர் புயலுக்கும் பெயரிடப்படும் வழக்கம் பின்பற்றப்படுகிறது. உலகம் முழுவதும், ஆறு பிராந்திய சிறப்பு வானிலை மையங்கள் மற்றும் ஐந்து பிராந்திய வெப்பமண்டல புயல் எச்சரிக்கை மையங்கள் ஆலோசனைகளை வழங்குவதற்கும், பெயரிடுவதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளன.



ஆறு பிராந்திய சிறப்பு வானிலை மையங்களில் இந்திய வானிலை ஆய்வு மையமும் ஒன்றாகும். இந்திய வானிலை ஆய்வு மையம் இந்தியா மற்றும் 12 நாடுகளுக்கு ஆலோசனைகளை வழங்குகிறது. அவை பங்காள தேசம், ஈரான், மாலைத்தீவு, மியான்மார், ஓமன், பாகிஸ்தான், கட்டார், சவூதி அரேபியா, இலங்கை, தாய்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், எமன் ஆகிய நாடுகள் ஆகும்.

அதன்படி, ஏப்ரல் 2020 இல் இந்திய வானிலை ஆய்வு மையம் புயலுக்கு பயன்படுத்தக்கூடிய 169 பெயர்களை அறிவித்துள்ளது. இந்தியா உட்பட 13 நாடுகளும் ஒவ்வொரு நாடும் 13 பெயர்களை வழங்குகின்றன. மொத்தம் 169 பெயர்கள் கொண்ட பட்டியலின்படி இயற்கை சீற்றங்களுக்கு பெயர்கள் சூட்டப்படுகின்றன.

பெயர் பட்டியல் தரும் நாடுகளின் பெயர்கள் அகரவரிசையில் வகைப்படுத்தப்படும். அப்பட்டியலில் உள்ளபடி அவற்றின் பரிந்துரைக்கப்பட்ட தலைப்புகள் இந்திய பெருங்கடல் மற்றும் தெற்கு பசிஃபிக் பகுதிகளில் உருவாகும் புயல்களுக்கு சூட்டப்படுகின்றன.

இந்த தொகுப்பின் பட்டியலில் நிசர்கா, கதி, நிவார், புரேவி, தௌ தே, யாஸ், குலாப், ஷாஹீன் மற்றும் ஜவாத் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டுள்ளன, அடுத்ததாக வரிசையில் இருப்பது தான் அசானி என்பதாகும்.

இந்த அசானி புயல், மே 7ஆம் திகதியில் தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் குறைந்த தாழமுக்கமாக உருவானது. அது நேற்று மாலையில் உயர் காற்றழ்த்த தாழ்வு மண்டலமாகியுள்ளது. பின்னர் இந்தியாவின் கிழக்குக் கடற்கரையை நோக்கிச் செல்லும். இப்புயல் காரணமாக அது கரையைக் கடக்கும் மாநில கடலோர பகுதிகளில் கனமழை மற்றும் மண்சரிவு போன்றவை ஏற்படலாம். மே 10ஆம் திகதி ஆந்திரா மற்றும் ஒடிஷா கடற்கரையை ஒட்டிய மத்திய மேற்கு வங்க கடல் பகுதியில் நிலைபெறக்கூடும் என வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# உலகளாவிய பொருளாதார நெருக்கடிக்கு வித்திட்டுள்ள உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர்

உக்ரைன் மீது ரஷ்யா போர் ஆரம்பமாகி இரண்டு மாதங்களுக்கும் மேலாகி விட்டன. இருந்தும் இன்னும் போர் முடிவுக்கு வந்தபாடில்லை.

இப்போர் காரணமாக உக்ரைன் உருக்குலைந்து கொண்டிருக்கின்றது. உயிரிழப்புகள், இடம்பெயர்வுகள், சொத்து செல்வ அழிவுகள் என்றபடி சொல்லன்னா துன்பங்களையும் இழப்புக்களையும் சந்தித்து வருகின்றது.

அதேவேளை இப்போர் உலகலாவிய ரீதியிலும் பலவிதமான தாக்கங்களையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்தி இருக்கின்றது. அவற்றில் பொருளாதார ரீதியிலான நெருக்கடிகளும் அழுத்தங்களும் குறிப்பிடத்தக்கனவாக உள்ளன.

உலக சந்தைக்கு பல்வேறு உற்பத்திகளை வழங்கி வரக்கூடிய நாடுகளாக ரஷ்யாவும் உக்ரைனும் இருக்கின்ற அதே நேரம், பல நாடுகளது உற்பத்திகளை இறக்குமதி செய்யும் நாடுகளாகவும் அவை விளங்கிக் கொண்டிருக்கின்றன.

இப் பேரைக் காரணம் காட்டி அமெரிக்காவும் ஐரோப்பாவும் அதன் நேச நாடுகளும் ரஷ்யாவுக்கு எதிராகக் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

இவ்வாறான பின்னணியில் உலகம் முழுவதும் எரிபொருள் விலையேற்றம், சமையல் எண்ணெய் தட்டுப்பாடு, கோதுமை தட்டுப்பாடு உள்ளிட்ட இன்ன பிற வர்த்தக, பொருளாதார சிக்கல்கள் உருவாகியுள்ளன. எகிப்து தமக்கு தேவையான கோதுமையில் 80 வீதத்தை ரஷ்யாவிடமிருந்தே இறக்குமதி செய்து வரும் நாடாக விளங்குகின்றது. இந்த யுத்ததின் விளைவாக எகிப்து உள்ளிட்ட பல ஆபிரிக்க நாடுகள் தமது கோதுமை தேவையை நிறைவேற்றிக் கொள்வதில் பெரும் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளன.



இதேபோன்று எரிவாயு, எரிபொருள், சமையல் எண்ணெய் விநியோகத்திலும் உலக சந்தையில் நெருக்கடிகள் உருவாக்கியுள்ளன.

என்றாலும் உக்ரைன் மீதான போரை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கில் ஆரம்பம் முதல் இரு நாடுகளுக்கும் இடையில் பல கட்ட அமைதிப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இருந்தும் இப்பேச்சுவார்தைகளும் கடந்த சில வாரங்களாக ஸ்தம்பிதமடைந்துள்ளன. அதன் விளைவாக போர் நீடித்த வண்ணமுள்ளன.

இவ்வாறான சூழலில் கடந்த வாரம் கூடிய ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் உரையாற்றிய ஐ. நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்ரெஸ், 'உலக மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு உக்ரைனுடனான போரை ரஷ்யா உடனடியாக நிறுத்த வேண்டும். ரஷ்யாவின் படையெடுப்பு ஐ.நா. சாசனத்தின்படி, உக்ரைனின் பிராந்திய ஒருமைப்பாடுக்கு எதிரானது. அதனால் உக்ரைன், ரஷ்யா மக்களுக்காக மாத்திரமல்லாமல் ஒட்டு மொத்த உலக மக்களின் நலன்களையும் கருத்தில் கொண்டு இப்போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருமாறு கேட்டுக் கொண்டார்.

அத்தோடு ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் அங்கத்துவ நாடுகளான சீனா, அமெரிக்கா, அயர்லாந்து, பிரான்ஸ், மெக்சிகோ ஆகியனவும் உக்ரைன் மீதான போரை முடிவுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளன.

இக்கூட்டத்தில் உரையாற்றிய சீன தூதர், 'உக்ரைன் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மட்டுமே தீர்வாகும். ஆனால் அந்நாட்டுக்கு ஆயுதங்களை வாரிவழங்குவது கண்டிக்கத் தக்கது' என்றார்.

கென்ய தூதர் மார்டின் கிமானி, 'உக்ரைன் ரஷ்யா விவகாரத்தில் ஐ.நா. தலைவர் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்றார். உக்ரைனின் ஐ.நா தூதர் செர்க்டெ கிஸ்லிட்ஸியா, 'அமைதியை நிலைநாட்ட எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்த வேண்டும்' என்றார்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர்கள் மட்டுமல்லாது பிற நாடுகளும் தங்களின் அக்கறையைப் பதிவு செய்துள்ளன. நோர்வே, மெக்சிகோ உள்ளிட்ட நாடுகள் போரை முடிவுக்குக் கொண்டு வர ஐ.நா. முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளைப் பாராட்டியுள்ளன.

இவ்வாறான நிலையில் ஐ.நா செயலாளர் நாயகத்தின் அழைப்புக்கு ரஷ்யா சாதகமான பதிலை அளிக்க முடியும் என்ற எதிர்பார்ப்பு பரவலாக எழுந்துள்ளது.

ஐ.நா. செயலாளர் நாயகம் குட்ரெஸ் உக்ரைன் தலைநகர் கீவ் நகருக்கும், ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோவுக்கும் அண்மையில் விஜயம் செய்திருந்தார். அவர் உக்ரைனின் மரியுபோல் நகருக்கு சென்றிருந்த போது அங்கு சிக்குண்டுள்ள பொதுமக்கள் வெளியேற வழிவகை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார். அவரது கோரிக்கைக்கு அமைய மரியுபோலில் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் வெளியேற வழிவகை செய்யப்பட்டுள்ளதோடு பல்லாயிரக்கணக்கான மக்களும் வெளியேறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருஞானசம்பந்த நாயனார்



திருஞானசம்பந்தர் நாயனார் தம்முடைய பதிகங்களின் மூலம் தமிழும் சைவமும் தழைக்கக் காரணமானவர். உமையம்மை இவருக்கு சிவஞானம் கலந்த ஞானப்பாலை ஊட்டியதால் மூன்று வயதிலேயே இறைவனைப் போற்றிப் பதிகம் பாடும் திறனைப் பெற்றவர்.

பதிகம் என்பது இறைவனைப் போற்றும் முதல் பத்து பாடல்களையும், அப்பாடல்களால் உண்டாகும் நன்மைகளை விளக்கும் இறுதிப் பாட்டையும் கொண்ட தொகுப்பு ஆகும்.

திருஞானசம்பந்தர் நாயனார் சைவ சமயக் குரவர்களில் முதன்மையானவராகவும், அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகவும் போற்றப்படுகிறார். அப்பர், சுந்தரர் மற்றும் மாணிக்கவாசகர் ஆகியோர் சைவ சமயக் குரவர்களில் ஏனையோர் ஆவர்.

இவர் கிரியை என்னும் சத்புத்திர மார்க்கத்தைப் பின்பற்றி இறைவனை வழிபட்டார். அதாவது சத்புத்திர மார்க்கம் என்பது இறைவனை சரியான வழிமுறைகளில் அபிசேகித்து, ஆராதித்து மனதாலும் உடலாலும் இறைவனை வழிபடுவதைக் குறிக்கும்.

வீடுபேற்றினை அடையும் சைவம் குறிப்பிடும் நான்கு வழிகளில் சத்புத்திர மார்க்கமும் ஒன்று. தாச மார்க்கம் (அப்பர்), யோக (சக) மார்க்கம் (சுந்தரர்), ஞான (சன்) மார்க்கம் (மாணிக்க வாசகர்) ஆகியவை ஏனையவை ஆகும். இவருடைய பதிகப் பாடல்கள் கொஞ்சு தமிழ் வகையைச் சார்ந்தவை. இவர் இறைவனுடன் மகன்மையை நெறியைப் பின்பற்றினார்.

ஆளுடைய பிள்ளையார், சிவஞானம் பெற்ற பிள்ளை, காழிநாடுடைய பிள்ளை, பரசமயகோளரி, திராவிட சிசு, காழி வள்ளல், சந்தத்தின் தந்தை, கல்லாமல் கற்றவன், ஞானத்தின் திருவுரு என்றெல்லாம் இவர் போற்றப்படுகிறார். பெரிய புராணத்தில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணம் மிகப்பெரியது. 4287 பாடல்களைக் கொண்ட பெரியபுராணத்தில் 1256 பாடல்கள் திருஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாற்றை விளக்குகிறது. ஆதலால் தான் 'பிள்ளை பாதி புராணம் பாதி' என்ற பழமொழி வழக்கத்தில் வந்தது.

நம்பியாண்டார் நம்பி, திருத்தொண்டர் திருவந்தாதியில் இரண்டு பாடல்களால் சம்பந்தரைப் போற்றியதோடு அவரைப் பற்றி தனியே ஆறு பிரபந்தங்களை அருளியுள்ளார்.

அவை ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி, ஆளுடையபிள்ளையார் திருச்சண்பை விருத்தம், ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை, ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை, ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம், ஆளுடையபிள்ளையார் திருத்தொகை ஆகியவை ஆகும்.

நம்பியாண்டார் நம்பி, ஒட்டக்கக்கூத்தர், அருணகிரிநாதர் ஆகியோர் ஞானசம்பந்தரை முருகனின் திருஅவதாரமாக தம்முடைய பாடல்களில் போற்றுகின்றனர்.

சைவசமய குரவர்கள் நால்வரையும் அவதார புருஷர்களாகவே பொரியோர்கள் கருதுகின்றனர். அப்பர் திருக்கையிலையில் இருந்த சித்தரின் அவதாரமெனவும், சுந்தரர் ஆலால சுந்தரரின் அவதாரமெனவும், மாணிக்கவாசகர் நந்தியெம்பெருமானின் அவதாரமெனவும் பெரியோர் கூறுவர். அவ்வகையில் திருஞானசம்பந்த நாயனார் முருகப் பெருமானின் திருவதாரமாகக் கொண்டாடப்படுகிறார்.

சைவ மஞ்சரி

## மானுடவியல்
(தொடர்)

### கழற்சிங்க நாயனார்



71

அப்பொழுது கழற்சிங்க நாயனார் அவரை நோக்கி, "புஷ்பத்தை எடுத்த கையை முதலில துணிக்கவேண்டும்" என்று சொல்லி, கட்டிய உடைவாளை உருவித் தம்முடைய மனைவி புஷ்பமெடுத்த கையைத் துணிந்தார்.

அது கண்டு, தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். ஈசன் மூவருக்கும் காட்சி கொடுத்தார். கழற்சிங்கநாயனார் மனைவிக்கு மீண்டும் இருகரங்களையும் மூக்கையும் அளித்தார். இருவரின் பக்தியையும் கண்டு மனம் மகிழ்ந்து ஈசன் முக்தி அளித்தார்.



பின் செருத்துணை நாயனார் சில காலம் பல சிவாலயம் சென்று இறைபணி செய்து முக்தி அடைந்தார். கழற்சிங்க நாயனார் நெடுங்காலம் சைவநெறி தழைத்தோங்க அரசியற்றிக் கொண்டிருந்து பரமசிவனுடைய திருவடிநீழலை அடைந்தார்.

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**19037) நள்ளிரவில் சிவன் ஆடும் நடனம் எது?**
சங்கார தாண்டவம்

**19038) இடக்காலில் முயலகனை ஊன்றிய கோலத்தை எங்கு காணலாம்?**
வெள்ளியம்பலம்

**19039) வெள்ளியம்பலம் எங்கு உள்ளது?**
மதுரையில்

**19040) மாலை வேளையில் இறைவன் மகிழ்ந்தாடும் திருநடனம் எது?**
பிரதோஷ நடனம்

**19041) பிரதோஷ நடனத்தை வேறு எவ்வாறு அழைப்பர்?**
புஜங்கலளிதம்

**19042) நடராஜருக்குரிய விரத நாட்கள் எவை?**
திருவாதிரை, கார்த்திகை சோமவாரம்

**19043) நடராஜருக்குரிய திருவாதிரை பிரசாதம் என்ன?**
களி.

**19044) திருச்சிராப்பள்ளியில் வீற்றிருக்கும் இறைவன் யார்?**
தாயுமான சுவாமி

**19045) பஞ்சபூத தலங்களில் வாயுத்தலம் எது?**
காளஹஸ்தி

**19046) வண்டு வடிவில் இறைவனை பூஜித்த முனிவர் யார்?**
பிருங்கி

**19047) திருமூலர் எழுதிய திருமந்திரம் எத்தனையாம் திருமுறை?**
பத்தாம் திருமுறை

**19048) திருஞானசம்பந்தர் பொன் தாளம் பெற்ற தலம்...**
திருக்கோலக்கா

**19049) திருக்கோலக்கா திருத்தலத்தை வேறு எவ்வாறு அழைப்பார்கள்?**
தாளமுடையார் கோவில்

**19050) தாளமுடையார் கோவில் எங்கு உள்ளது?**
சீர்காழிக்கு அருகில் உள்ளது

**19051) விபூதி என்பதன் நேரடியான பொருள் என்ன?**
மேலான செல்வம்

**19052) சுக்கிரதோஷ நிவர்த்திக்குரிய சிவத்தலம் எது?**
கஞ்சனூர்

**19053) ஜோதிர்லிங்கத்தலங்கள் மொத்தம் எத்தனை?**
12 (பன்னிரெண்டு)

**19054) மதுரையில் உள்ள சித்தரின் பெயர் என்ன?**
சுந்தரானந்தர்

**19055) திருஞானசம்பந்தருக்கு திருமணம் நிகழ்ந்த தலம் எது?**
ஆச்சாள்புரம் (திருப்பெருமண நல்லூர்)

**19056) நாவுக்கரசரின் உடன் பிறந்த சகோதரி யார்?**
திலகவதி

**19057) சுந்தரருடன் கைலாயம் சென்ற நாயனார் யார்?**
சேரமான் பெருமாள் நாயனார்

**19058) "அப்பா! நான் வேண்டுவன கேட்டருள்புரிய வேண்டும்' என்ற அருளாளர் யார்?**
வள்ளலார்

**19059) மதுரையில் சைவசமயத்தை நிலைநாட்டிய சிவபக்தை யார்?**
மங்கையர்க்கரசியார்

**19060) மாணிக்கவாசகர் யாருடைய அவையில் அமைச்சராக இருந்தார்?**
அரிமர்த்தன பாண்டியன்

**19061) திருநாவுக்கரசரால் சிவபக்தனாக மாறியவர் யார்?** பல்லவ மன்னன்

**19062) இந்த பல்லவ மன்னனின் பெயர் என்ன?**
மகேந்திர பல்லவன்

**19063) சிவபெருமானின் ஐந்து முகங்களில் காக்கும் முகம் எது?**
தத்புருஷ முகம் (கிழக்கு நோக்கிய முகம்)

**19064) சிவன் வீரச்செயல் நிகழ்த்திய தலங்கள் எத்தனை?**
8 (எட்டு)

## வேல் வேல் வடிவேல் வேதாந்த வடிவேல்

வேல் வேல் வடிவேல் வேதாந்த வடிவேல்
நாதாந்த முடிமேல் நான்மறைகள் போற்றும் வேல்
தேவியவள் தந்த வேல் தேவர் மூவர் போற்றும் வேல்
குழந்தைக் குமாரவேல் குன்று தோறுமாடும் வேல்

பாலகனின் கைவேல் பாவவினை தீர்க்கும் வேல்
கந்தன் கதிர்வேல் கவலைகளைப் போக்கும் வேல்
வேல் வேல் வெற்றிவேல் தேவர்சிறை மீட்ட வேல்
வாரி வழங்கும் வேல் வள்ளல் குணம் கொண்ட வேல்

ஆடும்பரிவேல் ஆபரணம் தரித்த வேல்
அழகன் முருகன் வேல் அள்ளியள்ளித் தந்த வேல்
மின்னும் கதிர்வேல் சண்முகன் சதுர்வேல்
சங்கடங்கள் தீர்க்கும் வேல் சத்ருசங்கார வேல்

முத்துக்குமார வேல் முன்னின்று காக்கும் வேல்
வானோர் தொழுத வேல் ஞானம் அருளும் வேல்
வைகாசியில் அவதரித்த முருகனின் வேல்
சங்கடங்கள் அனைத்தும் தீர்த்து வைக்கும் வேல்

முத்தமிழ முருகனின் திருவருள் நிறை வேல்
கதிரமலையில் குடிகொண்டு அருளும் நல் வேல்
நல்லூர் பதிதனில் நன்மைகள் அளிக்கும் வேல்
ஆடியில் கொழும்பில் எழுந்தருளி வலம் வேல்

## சனி பகவானால் ஏற்படக்கூடிய துன்பங்களைத் தீர்ப்பவர் பைரவர்

சனிஸ்வரனுக்கு எள் சட்டி தீபம் ஒரு போதும் ஏற்றவே கூடாது. நெய் தீபம் ஏற்றவும். அல்லது எள்ளில் இருந்து எடுக்கப்படும் நல்லெண்ணெயில் பைரவருக்கு தீபமேற்றினால் சனி தோஷம் நிவர்த்தியாகும். நவக்கிரகங்களுக்கும் சனிபகவானுக்கும் பைரவர்தான் குரு. சனிபகவான் அர்த்தாஷ்டம, அஷ்டம, கண்டகம், ஏழரை ஆண்டு சனி காலம், சனி திசை காலங்களில் ஆட்டிப்படைப்பவர்.

இப்படி சனி பகவானால் ஏற்படக்கூடிய துன்பங்களைத் தீர்ப்பவர் பைரவர். ராகு காலத்தில் பைரவருக்கு வடை மாலை மற்றும் வெற்றிலை மாலை அணிவித்து புனுகு பூசி கறிவேப்பிலை சாதம், பாகற்காய் கூட்டு, பால் பாயாசம், படையலிட்டு அல்லது கறிவேப்பிலை மாலை, பாகற்காய் மாலை அணிவித்து ஒரு பூசணியில் மிளகு தீபம், ஒரு பாகற்காய் மிளகு தீபம் ஏற்றி ஸ்ரீ பைரவருக்கு அர்ச்சனை செய்தால் சனி பகவான் பிடியிலிருந்து விடுபடலாம். இது பொதுவான பரிகார பூஜை. இதை எவர் வேண்டுமானாலும் செய்யலாம்.

சனிஸ்வரனுக்கு எள் சட்டி தீபம் ஒரு போதும் ஏற்றவே கூடாது. நெய் தீபம் ஏற்றவும். அல்லது எள்ளில் இருந்து எடுக்கப்படும் நல்லெண்ணெயில் பைரவருக்கு தீபமேற்றினால் சனி தோஷம் நிவர்த்தியாகும்.

ராசிக்கு சனிப்பார்வை இருந்தால் சனிக்கிழமை காலையில் ஒன்பது கருப்பு மிளகைத் தூள் செய்து வெதுவெதுப்பான தண்ணீரில் கலந்து குடிக்க வேண்டும். அதன் பிறகே கோவிலுக்குச் சென்று சனிஸ்வரருக்கும் ஸ்ரீபைரவருக்கும் வழிபாடு செய்து வர வேண்டும்.

ராசிக்கு சனிபகவான் பார்வை இருக்கும் வரை பொதுவான பரிகாரத்தை சனிக்கிழமையில் செய்து வரவேண்டும். இந்த விசேஷ பரிகாரத்தை மாதம் ஒரு முறை வரும் ஜென்ம நட்சத்திரம் அன்று செய்வது சிறந்தது.

## நாதப் பிரம்ம யோகம் - 18



சில அறிவியலாளர்கள் பறவைகள் தமது ஒலிகளை எழுப்பும் போது அவற்றின் பயம், கோபம், வெற்றி, இன்பம் ஆகியவற்றை வேறுபடுத்திக்காட்டும் ஆற்றலுடையவை என்று அறிந்திருக்கிறார்கள். மனிதர்களில் குரல்நாண் பெண்களை விட ஆண்களுக்கு மூன்று மடங்கு பெரியது. இதனால் பெண்கள் மென்மையான இனிமையான பலவித சுரங்களை ஏற்படுத்தக் கூடியவர்களாகவும் ஆண்கள் பலத்த குரலில் கோபம், அன்பு, பொறாமை ஆகிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தக்கூடியவர்களாகவும் பரிணாமத்தில் இருக்கிறார்கள்.

*R.LookWood* என்ற ஆய்வாளர் எலி முதலிய விலங்குகள் அரை மாத்திரை ஸ்வரங்களில் ஒலி எழுப்ப முடியும் என்பதை நிரூபித்திருக்கிறார்கள். எலிகளால் அஷ்டக சுரங்களின் அதிகுறைந்த சுரத்தை விட குறைவாக ஸ்வரத்தை ஏற்படுத்த முடியும் என்று கண்டுபிடித்திருக்கிறார். *LookWood* பலவிதமான எலிகளைவைத்து அவை எழுப்பும் ஒலிகளைக் கொண்டு அவற்றின் வித்தியாசங்களைத் தொகுத்துள்ளார். பல பறவைகள் ஸ்வரத்தை மாற்றி, ஏற்றி, இறக்கிப் பாடக்கூடிய தன்மை உடையவை என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. எப்படிப் பறவைகள் தமது ஸ்வரங்களை மாற்றி உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறதோ அதுபோல் மனிதனும் இசையினது, ஸ்வரத்தினது முக்கியத்துவத்தை நன்கு புரிந்து வைத்துள்ளான். ஸ்வரத்தில் மாற்றத்தைச் செய்து ஒலிகளைப் பாவிப்பது இயற்கை மனிதன் உட்பட விலங்குகளுக்குத் தந்துள்ள பெரிய வரப்பிரசாதம்.

மார்க்ஸ் முல்லர் போன்ற மானிடவியலாளர்கள் மனித இனத்தில் மொழி தோன்றுவதற்கு முந்தைய நிலையில் இசையே பாவிக்கப்பட்டது என்று கருதுகிறார். ஏனென்றால் மனிதனது ஆரம்ப உணர்ச்சி வெளிப்பாடு என்பது துன்பம், வலி, மகிழ்ச்சி போன்ற சொற்ப அளவினை வெளிப்படுத்தவே தேவை இருந்தது. இதை அவன் குரலின் அளவை கூட்டி, குறைத்து வேறுபட்ட ஸ்வரங்களில் எளிமையாக வெளிப்படுத்த முடியும். படிப்படியாக பரிணாமத்தில் மூளை வளர்ச்சியுற சிந்தனை ஆற்றல் வளர்ந்து, மிகச்சிக்கலான உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றான்.

இசை என்பது பறவைகள் சண்டையிடும் இரைச்சல்களில் ஆரம்பித்து பல்வேறு மனிதன் உருவாக்கும் சிக்கலான ஸ்வரங்கள் வரை பரந்து விரிந்தது என்று *Science and Music* என்ற நூலில் ஞசை *Sir James Jane* குறிப்பிடுகிறார். மனித நாகரீகம் இசையை மிக உயர்ந்த அளவிற்கு வளர்த்துள்ளது. எனினும் இன்றைய நவீன மனிதர்கள் இசையை எப்படிப் பறவைகள் கூச்சலிடுவதற்கும், சண்டைபிடிப்பதற்கும் பாவிக்கின்றனவோ அதைப்போன்று காதல், பொறாமை, கோபம், சோகம் போன்ற குறிப்பிட்ட ஒரு சில உணர்ச்சிகளுக்கே பாவிக்கின்றனர். (தொடரும்)

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்






சீரடி சாயி மந்திர் இராஜ கோபுர மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றதை தொடர்ந்து நடைபெற்ற 48 நாள் மண்டலாபிஷேக நிகழ்வின் இறுதி நாளான வியாழக்கிழமை மாலை தேரோட்டம் நடைபெற்றது. சீரடி சாயி மத்திய நிலையத்தின் தலைவர் எஸ். என். உதயநாயகம் தலைமையில் நடைபெற்ற தேரோட்ட நிகழ்வை காணலாம்.

## Gas வழங்குமாறு கோரி நாவின்னயில் ஆர்ப்பாட்டம்



Gas வழங்குமாறு கோரி நேற்று கொழும்பு, ஹைலெவல் வீதியின் நாவின்ன பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தினால் பெரும் பதற்றமான சூழல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. பாதையை மறித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதால் அப்பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது. பல மணிநேரம் ஆர்ப்பாட்டம் நீடித்த நிலையில் பிரதேசவாசிகளுக்கும் பாதையை மறித்து ஆர்ப்பாட்டம் செய்தவர்களுக்குமிடையில் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக இவ்வாறு பதற்றமான சூழல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

## TNA இன்னமும் எந்த ...

தெரிவித்துள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர், இராசமாணிக்கம் சாணக்கியன் இதனை தெரிவித்துள்ளார். அதேநேரம், ஜனாதிபதிக்கு எதிராக கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கும் என அவர் குறிப்பிட்டார்.

## நீதிபதிகளின் பாதுகாப்பை ...

அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடுவெல நீதவான் சனிமா விஜேபண்டாரவின் உத்தியோகபூர்வ இல்லத்தின் பாதுகாப்பு நீக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டிற்கு இலங்கை நீதிச்சேவை சங்கம் அதிருப்தி தெரிவித்திருந்தது.

நேற்று முன்தினம் (07) காலை முதல் நீதவானின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபருக்கு எழுதிய கடிதத்தில் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நீதிபதிகளின் பாதுகாப்பை வழங்குமாறு அனைத்து பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும் வழங்கப்பட்ட சுற்றறிக்கையை மீறி தலங்கம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நீதவானின் உத்தியோகபூர்வ இல்லத்தின் பாதுகாப்பை நீக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தொழிற்சங்கம் குற்றம் சுமத்தியிருந்தது. இது தொடர்பில் தலங்கம பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக பொலிஸ் மா அதிபர் உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை நீதிச்சேவை சங்கம் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## குடிவரவு,குடியகல்வு ...

கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள நேரத்தை ஒதுக்கிக்கொண்டவர்கள் மற்றும் மே 5ஆம் திகதி சாதாரண சேவையின் மூலம் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள விண்ணப்பப்படிவங்களை கையளிக்க வந்து திணைக்களத்தினால் இலக்கம் ஒன்றை பெற்றுக்கொண்டவர்களின் விண்ணப்பங்கள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், நாளை செவ்வாய்க்கிழமை( மே 10 )முதல், கடவுச்சீட்டுக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பது கட்டாயமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.www.immigration.gov.lk

என்னும் வலைத்தளத்தை பார்வையிடுவதன் மூலமோ அல்லது 0707101060 என்ற எண்ணுக்கு அழைப்பதன் மூலமோ திகதிகள் மற்றும் நேரங்களை முன்பதிவு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டை வழங்குவதற்கான கணினி அமைப்பை சீர் செய்யும் பணியில் திணைக்களத்தின் தொழில்நுட்ப ஊழியர்கள் தற்போது ஈடுபட்டுள்ளதுடன் கூடிய விரைவில் ஒரு நாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என திணைக்களம் அறிவித்துள்ளது.

பொதுமக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் வருந்துவதுடன், திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தினால் வழங்கப்படும் சேவைகள், பிராந்திய அலுவலகங்கள் மற்றும் விமான நிலையத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வு சேவைகள் வழங்கும் சேவைகள் வழமை போன்று இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஷஸ்னா முஸம்மில்...

முஸம்மில் மற்றும் பெரோஸா முஸம்மிலின் மகள் ஷஸ்னா முஸம்மில் வெற்றி பெற்றுள்ளார். அப்பிரதேசத்தில் இலங்கை வாக்காளர்கள் இல்லாதபோதிலும் இந்நகரை தெரிவு செய்து அப் பிரதேசத்தில் தனது பிரசார சமூக சேவைகளைச் செய்து அங்கு வாழும் வெளிநாட்டவர்கள் மனதை வென்று வெற்றிபெற்றுள்ளார்.

இங்கிலாந்திலுள்ள திறந்த பல்கலைக் கழகத்திலுள்ள எம்.பி.ஏ மற்றும் எம்.எஸ்.சி பட்டப்படிப்புகளை நிறைவு செய்துள்ள ஷஸ்னா முஷம்மில், திறந்த பல்கலைக் கழகம் சமூக சேவை அமைப்புக்களில் தொண்டராக பல்வேறு அமைப்புக்களில் உறுப்பினராக இருந்து வயது வந்தவர்களுக்கு உதவுதல், கெயினாஷ் இளைஞர் அமைப்பு ஊடாக சிறுவர்கள் சிறையில் உள்ள பெற்றோர்கள் அவர்களது குழந்தைகள் பராமரிப்பு போன்ற சமூக சேவைகளைச் செய்து வருகின்றார்.

## இடைக்கால அரசுக்கு...

தயாராக இல்லை என்றால் தேர்தலுக்கு செல்ல வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தனது பேஸ்புக் பக்கத்தில் நேற்று முன்தினம் (07) வெளியிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் "மக்கள் தங்கள் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிகாரம் வழங்குகிறார்கள். மக்கள் கொடுக்கும் அதிகாரம் தற்காலிகமானது என்பதை அவர்கள் உணர வேண்டும்," என்றும் கூறினார்.பௌத்த பிக்குகள், சிவில் சமூகம் மற்றும் பொது மக்கள் உள்ளிட்ட மதத் தலைவர்களின் வலுவான வேண்டுகோளுக்கு செவிசாய்க்காமல் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கையை வன்மையாகக் கண்டிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார் .

## அடுத்த வாரம் முதல் 10 மணி...

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் அன்ட்ரூ நவமுனி, குறித்த செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை எனவும், இதுவரையில் இலங்கை மின்சார சபையினால் அவ்வாறான தீர்மானம் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார். அத்துடன் தொடர்ச்சியான மின்வெட்டு மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் குறித்து இலங்கை மின்சார சபை நேற்று (08) கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இந்தச் செய்தி தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்கவிடம் நாம் வினவியபோது, 10 மணித்தியால மின்வெட்டு தொடர்பில் தமக்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை என தெரிவித்தார். அத்துடன், ஏனைய தரப்பினர் கூறும் கருத்துக்களுக்கு பதிலளிக்க தாம் தயாராக இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

## போராட்டத்திற்கு...

போராட்ட வாரமாக அறிவிப்பதாக ஒன்றிணைந்த தொழிற்சங்க ஒருங்கிணைப்பு மையம் குறிப்பிட்டுள்ளது.

காலி முகத்திடலில் உள்ள ஜனாதிபதி அலுவலகத்திற்கு அருகில் நேற்று 30ஆவது நாளாகவும் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

சுமார் ஒரு மாதமாக முன்னெடுக்கப்படும் இந்த போராட்டத்தில் இதுவரையில் முறுகல் நிலை எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை.

கடந்த மாதம் 9ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த போராட்டம் சீரற்ற வானிலை நிலவிய போதிலும் இன்று வரை தொடர்கின்றது.

இளைஞர் யுவதிகள், கலைஞர்கள், தொழிற்சங்கத்தினர், விசேட தேவையுடையவர்கள், சிவில் அமைப்பினர் மற்றும் மதகுருமார்கள் உள்ளிட்ட பலர் இந்த போராட்டத்துக்கு ஆதரவை வழங்கி வருகின்றனர்.

அத்துடன் இன, மத பேதங்கள் இன்றி கடந்த சித்திரைப் புத்தாண்டு மற்றும் ரமழான் போன்ற பண்டிகைகள் போராட்டம் இடம்பெறும் பகுதியில் கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் பதவி விலகுவதாக...

அது தொடர்பில் தமது இறுதித் தீர்மானத்தை பிரதமர் மகிந்த ராஜபக்சவே விரைவில் வெளியிடுவார் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட அமைச்சரவை கூட்டத்தின்போது இடைக்கால அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் ஆராயப்பட்டதுடன் அதற்கான ஒரு இலகுவான முறைமையாக பிரதமர் தமது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்பது தொடர்பிலேயே கலந்துரையாடப்பட்டது.

எவ்வாறெனினும் அதற்கான இறுதித் தீர்மானத்தை பிரதமரே விரைவில் மேற்கொள்வார் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இன்று திங்கட்கிழமை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பொது ஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களை சந்திக்கவுள்ளதாகவும் அதனையடுத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பின்னர் தமது இறுதி முடிவை அறிவிப்பார் என்றும் அரசாங்க வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்படுகிறது. (ஸ)

## பொறுமை, புத்திசாலித்தனத்துடன்...

விடயங்களை தெளிவுபடுத்தும் வகையில் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது :

ஜனநாயக கட்டமைப்பிற்குள் அமைதியான முறையில் தமது போராட்டங்களையும் எதிர்ப்புகளையும் வெளிப்படுத்தும் இலங்கை மக்களின் ஜனநாயக உரிமையை நாம் அனைவரும் மதிக்கின்றோம் என்பதை குறிப்பிட வேண்டும்.

இருந்த போதிலும், விஷேடமாக நேற்றும் கடந்த சில நாட்களாகவும் அமைதிப் போராட்டமாக நடைபெற்று வந்த போராட்டத்தை மாற்றி மக்களின் ஜனநாயக உரிமைகள் மீறப்பட்டு, மக்களின் இயல்பு வாழ்க்கையை சீர்குலைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் விதத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தப்படும் போராட்டங்கள் மற்றும் ஹர்த்தால்களால் பொதுவாக அனைவரும் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளோம் என்பதே யதார்த்தமாகும்.

நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கை பொருட்படுத்தாமல் ஆத்திரமூட்டும் வகையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் நடந்துகொள்வதுடன், சட்டம், ஒழுங்கைப் பேணுவதில் அர்ப்பணிப்புடன் செயற்படும் பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரின் பணிகளுக்கு இடையூறு விளைவிப்பதாகவும், நாட்டின் பொதுச் சட்டத்தை அவமதிப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன் காரணமாக, சட்டத்தை மதிக்கும்நாட்டின் பெரும்பான்மையானமக்கள் தங்களின் அன்றாட வாழ்க்கையை கொண்டுச் செல்வதற்கு தேவையான அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்வதில் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். இந்நிலையில், நாட்டின் தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டும், பொது அமைதியைப் பேணுவதற்கும், மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கும், சமூக ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் அரசியலமைப்பின் பிரகாரம் நாட்டின் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த கடினமான காலகட்டத்தில் நாட்டிலுள்ள பொறுப்புள்ள பிரஜைகள் என்ற வகையில் புத்திசாலித்தனத்துடனும் பொறுமையுடனும் செயல்பட வேண்டும் எனவும், இதுபோன்ற அவசரநிலைகளில் நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டி, அனைவரின் பாதுகாப்பிற்கு உறுதியளிக்கும் முப்படை மற்றும் பொலிஸாருக்கு உங்களது மேலான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

## எரிபொருளின் தரம்...

முறைப்பாடுகளுக்கு அமைய பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள எரிபொருளின் மாதிரிகள் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய சுயாதீன குழுவினரால் பரிசோதிக்கப்படவுள்ளன.

எரிபொருளின் தரம் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் வெளியாகிய காணொளியை அடிப்படையாகக் கொண்டு குருநாகல், நாரம்மல ஆகிய பகுதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எரிபொருளின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், இவ்விரு நிரப்பு நிலையங்களுக்கும் எரிபொருளை விநியோகித்த எரிபொருள் பௌஸர் கொலன்னாவ எண்ணெய் சேமிப்பு நிலையத்தின் ஊடாக பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுளளது.

குறித்த எரிபொருள் பௌஸர் நாரம்மல எரிபொருள் நிலையத்திற்கு செல்வதற்கு முன்பதாக தம்பதெனிய பிரதேசத்தில் உள்ள இரு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு 92 ஒக்டென் ரக பெற்றோலை கொண்டு சென்றுள்ளது.

அவ்விரு நிரப்பு நிலையங்களில் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட எரிபொருள் மாதிரிகளை கொண்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் எரிபொருளில் எவ்வித இதர பொருட்களும் கலக்கப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 5 ஆம் திகதி நாடுதழுவிய ரீதியில் 472 எரிபொருள் பௌஸர் ஊடாக 92 ரக ஒக்டென் பெற்றோல் 60இலட்சம் லீற்றர் விநியோகிக்கப்பட்டுள்ளது.

எரிபொருளின் தரம் தொடர்பில் இதுவரை எப்பிரதேசங்களில் இருந்தும் முறைப்பாடு கிடைக்கப்பெறவில்லை.

எரிபொருள் முனையம் அல்லது எரிபொருள் களஞ்சியசாலைகளில் இருந்து விநியோகிக்கப்படும் எரிபொருளின் தரம் தொடர்பில் முழுமையான கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. காலி பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் விநியோகிக்கப்பட்ட எரிபொருளின் தரம் தொடர்பில் ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்தியினை அடிப்படையாக்க கொண்டு விரிவுப்படுத்தப்பட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் தாங்கியில் தேங்கி நிற்கும் நீரை வெளியேற்றுவதற்கு முறையான வழிமுறைகள் பின்பற்றப்படவில்லை என ஆரம்பக்கட்ட விசாரணைகள் தெரியவந்துள்ளதை தொடர்ந்து விசாரணைகள் நிறைவு பெறும் வரை அந்த எரிபொருள் நிரப்பு நிலையம் மூடப்பட்டுள்ளன. எரிபொருள் இறக்குமதி செய்யப்பட்டதிலிருந்து, நுகர்வோருக்கு எரிபொருளை விநியோகிக்கும் வரை நான்கு கட்டங்களில் எரிபொருளின் தரம் பரிசோதனை செய்யப்படுகிறது.

பாவனையாளர்களின் முறைப்பாடுகளுக்கு அமைய பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள எரிபொருளின் மாதிரிகள் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் ஏற்றுக்கொள்ள கூடிய சுயாதீன குழுவினரால் பரிசோதிக்கப்படவுள்ளன.

## இடைக்கால அரசு உருவாக்கம்...

விசேட பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளனர்.

அதேவேளை, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நேற்று காலை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடனும் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட 11 கட்சிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதுடன் அதனையடுத்து அந்த பேச்சுவார்த்தைகளில் காணப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

எவ்வாறாயினும் இடைக்கால அரசாங்கம் ஒன்றை உருவாக்குவது தொடர்பில் அனைத்து தரப்பினரதும் இணக்கப்பாட்டை பெற்றுக்கொண்டு விரைவில் அது தொடர்பில் ஒரு பொது நிலைப்பாட்டை எட்டுவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்துள்ள அழைப்பைத் தொடர்ந்து நேற்றைய தினம் முக்கிய கட்சிகளுக்கு இடையிலான பல பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன. அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட 11 கட்சிகள் மற்றும் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி ஆகியன நேற்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினருடன் தனித்தனியே பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளன.

அந்தப் பேச்சுவார்த்தைகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிரி ஜயசேகர, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ,பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம்,மனோ கணேசன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.அந்தப் பேச்சு வார்த்தைகள் சாத்தியமானதாக அமைந்ததாகவும் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த கலந்துரையாடலையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்படி பேச்சுவார்த்தை வெற்றிகரமாக அமைந்ததாகவும் தெரிவித்துள்ளார். அதேவேளை இதன்போது ஜனாதிபதி பதவியில் மேற்கொள்ள கூடிய மாற்றங்கள் தொடர்பிலும் அரசியலமைப்பில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டு ள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை மேற்படி பேச்சுவார்த்தை தொடர்பில் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ; சர்வகட்சி அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பில் தமது கட்சி இதுவரை எந்த தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் எனினும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையின் பின்னர் ஜனாதிபதியினால் வெளியிடப்படும் விடயங்களை கவனத்திற் கொண்டே அது தொடர்பான முடிவை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் மத்தியஸ்தத்துடன் இடைக்கால அரசாங்கம் ஒன்று உருவாவதை ஆதரிக்க முடியும் என்ற தோரணையில் அந்த கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கருத்துக்களை முன்வைத்துள்ளார்அத்துடன் தமது கட்சியின் சார்பில் முன்வைக்கப்பட்டுள்ள 21 திருத்த யோசனைகளை தவிர மேலும் முக்கியமான யோசனைகளை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன் வைத்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் அனைத்து தரப்பினரதும் யோசனைகளை கவனத்திற்கொண்டு மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாடு தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை சந்தித்து நேற்று தெளிவு படுத்தியுள்ளது.அதனையடுத்து அந்த சங்கத்தினர் நேற்று பிற்பகல் பிரதமர் மகிந்த ராஜபக்சவையும் சந்தித்து அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

அதேவேளை பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் 11 கட்சிகளின் அங்கத்தவர்கள் நேற்று ஐக்கிய மக்கள் சக்தி தமிழ் தேசியக் கூட்டமைப்பு தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட கட்சிகளின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## எரிவாயு கோரி பல்வேறு...

காரணமாக அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது. இவற்றை தொடர்ந்து, மட்டக்களப்பு செங்கலடி சந்தியில் தற்போது ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது.பல்கலைகழக மாணவர்களால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.கிழக்கு பல்கலைகழகத்தின் வந்தாறுமூலை வளாகத்தில் இருந்து பேரணியாக சென்ற மாணவர்கள் செங்கலடி சந்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் குறிப்பிட்டார்.

## காலி முகத்திடலில்...

போராட்டங்களும் நடத்தி வருகின்றன. இந்த நிலையில் ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் மொத்தமாக வெளியேற வேண்டி மக்கள் தற்போது காலிமுகத்திடலில் சிறப்பு பரிகாரங்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அம்பாள் பூஜை அங்கு இடம்பெற்றதோடுஅது தொடர்பான சிறப்புப் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 113 பெரும்பான்மை கிடைத்தால்....

சேவையாற்ற முடியாவிடின் மக்கள் சஜித் கோஹோம் என்பார்கள். நான் தோல்வி எனின் அவ்வாறு கோசம் எழுப்புவதில் பிரச்சினை கிடையாது. கையையும் காலையும் கட்டிப் போட்டு ஆட்சியை செய்து அதன் அடிப்படையில் கோஹோம் என்று சொல்லும் நிலை ஏற்படுவதை நான் விரும்பவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். ஆதரவு வழங்கி விட்டு ரஞ்சித் சியம்பலாபிடிய விலகியது போன்ற நிலைமை வரக்கூடாது என்றும் அவர் கூறினார். 113 பெரும்பான்மை பாராளுமன்றத்தில் கிடைக்குமாக இருந்தால் நிச்சயமாக பிரதமர் பதவியை ஏற்க தான் தயார் எனவும் அவர் குறிப்பிட்டார். இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (பா)

## எரிபொருட்களின் விலை ...

உண்மைக்குப்புறம்பானது என்றும் அமைச்சர் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

லங்கா இந்தியன் ஒயில் நிறுவனமோ அல்லது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமோ எரிபொருள் விலையை அதிகரிக்கவில்லை என்றும் அதில் தெரிவித்துள்ளார்.

உண்மைக்குப்புறம்பான தகவல்களை வெளியிடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று எரிசக்தி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இன்று முதல் நான்காவது...

அதற்கமைய, 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு நான்காவது தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. இவர்களைத் தவிர 20 முதல் 60 வயதிற்குட்பட்ட, எதிர்ப்பு சக்தி குறைவடைந்தவர்களுக்கும், நாட்பட்ட நோயாளர்களுக்கும் இந்த தடுப்பூசியை பெற்றுக்கொள்ள பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டிலுள்ள 12 முதல் 16 வயதிற்கு இடைப்பட்ட சிறுவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசியை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரண்டு வருடங்களுக்கு...

அறிய வேண்டும். எனினும் நிலைமையின் தீவிரத்தை மக்கள் உணர்ந்து கொள்கிறார்களா என்று தமக்கு தெரியவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் இந்த நெருக்கடியை தீர்க்க முடியாது, எனினும் தற்போது எடுக்கும் நடவடிக்கைகள் இந்த பிரச்சினைக்கான தீர்வின் காலத்தை தீர்மானிக்கும என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பிரச்சினைகளை மேலும்... 03ஆம் பக்க தொடர்....

அதிவிசேட வர்த்தமானி மூலம் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டமை தொடர்பில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தனது எதிர்ப்பைத் தெரிவிக்கிறது.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலாளருக்கு ஆணைக்குழு தலைவர் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

மின்சாரம் மற்றும் பெற்றோலிய தொழிற்துறைக்கான ஒழுங்குறுத்தல் நிறுவனம் என்ற வகையில் 7.3 மில்லியன் மின்சார நுகர்வோர்கள் மற்றும் 21 மில்லியனுக்கும் அதிகமான சிறு குழந்தை முதல் வயதான நோயாளிகள் வரையான மின்சார நுகர்வோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முதன்மை பொறுப்பும் பணியும் ஆகும்.

போதிய மின் விநியோகம் இல்லாத காரணத்தால் முன்னெடுக்கப்படும் தொடர் மின்வெட்டு தற்போதைய ஆர்ப்பாட்டம் மற்றும் பொதுமக்களிடையே அமைதியின்மையை அதிகரித்துள்ளது என எதிர்பார்க்கிறோம். நுகர்வோரின் நலன்களைப் பாதிக்கும் விடயங்கள் குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவது இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் (PUCSL) பொறுப்பாகும். இச்சந்தர்ப்பத்தில் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவது தற்போதைய பொருளாதார பிரச்சினைகளை மேலும் மோசமடைய செய்வதால் அத்தகைய அவசர நிலையின் போது நுகர்வோர் மற்றும் பங்குதாரர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பொறுப்பை நிறைவேற்றுவதில் தடைகள் ஏற்படும் என்பதால் அவசரகால நிலையை பிரகடனப்படுத்துவதை தவிர்க்குமாறு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) அரசாங்கத்திற்கு அறிவுறுத்தியுள்ளது.

எமது இந்த ஆலோசனைகள் மற்றும் அது தொடர்பான விடயங்கள் குறித்து தீவிர கவனம் செலுத்தப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எதிர்பார்க்கிறது எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.(பா)

## 'பிரதமர் மஹிந்தவை ... 03ஆம் பக்க தொடர்....

பொதுத்தேர்தலை நடத்துவது சிறந்தாக அமையும்.

பிரதமர் பதவியில் இருந்து தான் ஒரு போதும் விலக போவதில்லை என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் முக்கிய தரப்பினர்களிடம் குறிப்பிட்டுள்ளார். சகல தரப்பினரது கருத்துக்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்படும் என்றார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று காலை அலரிமாளிகையில் இடம்பெறும் விசேட கலந்துரையாடலின் போது பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் அலரிமாளிகையின் முன்பாக ' பிரதமர் மஹிந்தவை பாதுகாப்போம்' என்பதை முன்னிலைப்படுத்தி பிரதமருக்கு ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

## அவசரகால நிலை... 03ஆம் பக்க தொடர்....

நடைபெறுவதுடன் பொலிசாரின் நடவடிக்கைகள் மூலம் அதனை கட்டுப்படுத்தக் கூடிய விதத்திலேயே காணப்படுகிறது எனவும் இத்தகைய நிலையில் நாட்டில் அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தியுள்ளமை சிக்கல்களையே ஏற்படுத்தும் என்றும் தெரிவித்துள்ளது.

அதேவேளை,அரசாங்கத்திற்கு எதிரான மேற்படி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக சில தரப்பினர் தகவல்களை தெரிவித்துள்ள நிலையில் அது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு கருத்துக்களை தெரிவிக்குமாறும் ஆணைக்குழுவானது மேற்படி மூவரிடமும் கேட்டுக் கொண்டுள்ளது.

## அரசியல் தீர்வை பெற்றுக்... 03ஆம் பக்க தொடர்....

உரையாற்றிய அவர்: தமிழக அரசாங்கத்திற்கு நாம் நன்றி சொல்ல வேண்டும் 123 கோடி ரூபாவுக்கும் அதிகமான பொருட்களை அவர்கள் இலங்கைக்கு வழங்குவதற்கு தயாராகி வருகின்றனர். நாட்டில் நடந்துள்ள அனர்த்தங்கள் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு அப்பால் ஒரு திறந்த மனதோடு தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நாட்டின் அனைத்து மக்களுக்காகவும் இந்த உதவியை செய்ய முன்வந்துள்ளார். நாம் இதை பாராட்டுகின்றோம் என்றார்.

## 220 லட்சம் மக்களின்... 03ஆம் பக்க தொடர்....

நான் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்துள்ளமை பொது மக்களுக்கு தெரியவர வேண்டும். அதேவேளை நிலையியற் கட்டளையின் படி செயற்படுமாறு சபை முதல்வர் உங்களை கேட்டுக் கொண்டார். அதையும் நாம் ஏற்றுக் கொள்கின்றோம்.

## சுயாதீன குழுக்களின்... 03ஆம் பக்க தொடர்....

ஒன்றினைத்து இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும் என மகாநாயக்க தேரர்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள். இடைக்கால அரசாங்கம் தொடர்பில் நாளை அல்லது நாளை மறுதினம் பிரதான எதிர்க்கட்சிகளுடன் விரிவுப்படுத்தப்பட்ட பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது. சாதகமான பதில் கிடைக்காவிடின் அரசாங்கத்தில் இருந்து விலகி பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் 39 பேரையும் ஒன்றினைத்து இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்க அவதானம் செலுத்தப்படும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது பிரதமரின் பதவி விலகல், இடைக்கால அரசாங்கம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து விரைவாக பொதுத்தேர்தலை நடத்துவது அவசியமாகும் என்றார்.

## காணாமல் போன மகனை... 03ஆம் பக்க தொடர்....

நிலையில், போராட்டங்களில் ஈடுபட்ட பலர், போராட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வயது முதிர்வு காரணமாக ஏற்படும் நோய்கள், உடலில் வலுவின்மை போன்ற காரணங்களில் பெற்றோர் போராட முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

# திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்தவர் கைது

**கரவெட்டி தினகரன் நிருபர்**

நல்லூர் வடக்கு கல்வியங்காடு சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் பகுதியில், தொடர்ச்சியாக திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டு வந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இக்கைது சம்பவம் பற்றி மேலும் அறியவருவதாவது,

சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் பகுதியில் வீடு ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை கைக்கணனி ஒன்றும் இரு கைபேசிகளும் களவாடப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் கடந்த (புதன்கிழமை) சந்தேகநபரை கைது செய்தனர். இவரை, யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்தினர்.




ஜெயந்தி நகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணியன் சுவாமி ஆலய வைகாசி விசாகத்திருவிழா சனிக்கிழமை (07) காலை ஆலய தர்மகர்த்தா ஏ. எஸ். எஸ். சங்கர் சோமசுந்தரம்பிள்ளை, ஜி. வி. சுப்பிரமணியம் பிள்ளை தெ.பிரம்மநாயகம்பிள்ளை முன்னிலையில் ஆரம்பமானது. சிவஸ்ரீ கிரிகைகளை நடாத்தி கொடியேற்றி வைப்பதையும் வள்ளி தெய்வானை சமேத சண்முகப்பெருமான் வீதி வலம் வருவதையும் கலந்து கொண்ட பக்தர்களையும் காணலாம்.

# குடிமனைகளை அண்மித்த பகுதிகளில் தவறணை அமைப்பதற்கு எதிர்ப்பு

**சாவகச்சேரி விஷேட நிருபர்**



கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் குடிமனைகளை அண்மித்து கள்ளுத் தவறணை அமைக்கும் செயற்பாடுகளைக் கண்டித்து (08) ஞாயிற்றுக்கிழமை பிரதேச மக்கள் எதிர்ப்பு போராட்டம் நடத்தினர்.

இது தொடர்பாக பிரதேச மக்கள் கருத்து தெரிவிக்கையில்;

கண்டி வீதி கொடிகாமம் என்ற முகவரியில் அமைய வேண்டிய தவறணையை, தற்காலிக தவறணையாக பருத்தித்துறை வீதி கொடிகாமத்தில் உள்ள தனியார் காணியில் அமைத்திருந்தனர்.

ஐந்து வருட ஒப்பந்தத்தில் கடந்த 2017 இல், இது அமைக்கப்பட்டது. ஐந்து வருடங்களின் பின்னர் குறித்த இடத்தில் இருந்து தவறணை அகற்றப்படும் எனவும் பொதுமக்களுக்கு நம்பிக்கையூட்டப்பட்டது.

இந்நிலையில் தற்போது மீளவும் 10 வருட குத்தகைக்கு இந்த தவறணையை குறித்த காணியில் நடத்த காணி உரிமையாளருடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் இங்கு நிரந்தர கட்டடம் அமைக்கும் செயற்பாடும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குடிமனைக்குள் நிரந்தர தவறணை அமைவதனை விரும்பாத பிரதேச மக்கள் தென்மராட்சி பிரதேச செயலகம், சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் கொடிகாமம் பொலிஸ் நிலையம் ஆகியவற்றுக்கு இவ்விடயம் தொடர்பாக தெரியப்படுத்தி னர்.

அரசாங்க உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் உள்ள நிலையில் இவ்விடத்தில் கள்ளுத் தவறணை அமைவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

தவறணை அமைப்பது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபையில் எந்தவிதமான அனுமதியும் பெறப்படவில்லை என பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.


இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

**திறைசேரி உண்டியல்கள் வழங்கல்**

**2022 மே 11ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 92,500 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122H121 | LKA18222K114 | LKA36428E127 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 46,500 | 23,000 | 23,000 | 92,500 |

ஏல விற்பனைத் திகதி : 2022 மே 11
தீர்ப்பனவுத் திகதி : 2022 மே 13
வழங்கப்படும் திகதி : 2022 மே 13
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2022 மே 11 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்க பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம்.ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**



**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**
துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**

**முன்மொழிவை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி நீடிப்பு**

**காலி துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் காணி மீட்புக்காக மேலதிக சூழல் தாக்க மதிப்பீடு மற்றும் பொறியியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான ஆலோசனை சேவைகளுக்காக முன்மொழிவுகளை அழைத்தல்**

1. முன்மொழிவை சமர்ப்பிப்பதற்கு ஆலோசகர்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய 2022 ஏப்ரல் 6 ஆம் திகதி இந்தப் பத்திரிகையில் வெளியான விளம்பரத்தின் கால அட்டவணை பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.

| | நிகழ்வு | முந்தைய திகதி மற்றும் நேரம் | நீடிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| a | முன்மொழிவு ஆவணத்திற்கான கோரிக்கை வழங்கல் | 2022 ஏப்ரல் 6 ஆம் திகதி தொடக்கம் 2022 மே 4 ஆம் திகதி வரை | 2022 ஏப்ரல் 6 ஆம் திகதி தொடக்கம் 2022 மே 18 ஆம் திகதி வரை |
| b | முன்மொழிவை வழங்குவதற்கான இறுதித் திகதி | 2022 மே 6 ஆம் திகதி 14.00 மணி | 2022 மே 20 ஆம் திகதி 14.00 மணி |

2. முன்மொழிவு கோரிக்கை (RFP) ஆவண திருத்தங்கள் ஆவணங்களை ஏற்கனவே வாங்கிய அனைத்து தரப்புகளுக்கும் ஒரு பின்னிணைப்பு வடிவத்தில் வழங்கப்படும்.
3. ஆர்வமுடைய தரப்புகள் 2022 ஏப்ரல் 6 ஆம் திகதி தொடக்கம் 2022 மே 18 ஆம் திகதி வரை சாதாரண வேலை நாட்களில் 10.00 – 16.00 மணிக்கு இடையே கட்டணம் இன்றி கீழுள்ள முகவரியில் ஆவணத்தை பரீட்சிக்கலாம்.

**தலைமை பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் மேம்பாடு)**
**திட்டமிடல் மற்றும் மேம்பாட்டுப் பிரிவு**
**இலங்கை துறைமுக அதிகாரசபை,**
**45, லெய்டன் பஸ்டியன் வீதி, கொழும்பு 01,**
**இலங்கை**

**தொலைபேசி இல : +94(0) 112325575**
**தொலைநகல் இல : +94(0) 112323055**
**மின்னஞ்சல் முகவரி : cepd@slpa.lk**

4. இந்த ஆவணத்தில் ஒப்பந்ததாரர்களுக்கான வழிமுறைகள், ஒப்பந்ததாரரின் நிபந்தனை, குறிப்பு விதிமுறைகள், தொழில்நுட்ப முன்மொழிவு மற்றும் நிதி முன்மொழிவின் தரநிலை வடிவங்கள், முதலியவை உள்ளடக்கப்பட்டிருப்பதோடு மீளளிக்கப்படாத கட்டணமாக வரி உட்பட 3,500.00 ரூபாவை செலுத்தி 2022 ஏப்ரல் 6 ஆம் திகதி தொடக்கம் 2022 மே 18 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் 10.00 தொடக்கம் 14.00 மணி வரை தலைமை பொறியியலாளரின் (திட்டமிடல் மற்றும் மேம்பாடு) அலுவலகத்தில் இருந்து எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.
5. முழுமையான முன்மொழிவுகளை "காலி துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் காணி மீட்புக்காக மேலதிக சூழல் தாக்க மதிப்பீடு மற்றும் பொறியியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான ஆலோசனை சேவைகளுக்காக முன்மொழிவுகளை அழைத்தல்" என்று குறிப்பிட்டு 2022 மே 20 ஆம் திகதி 14.00 மணி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் அலுவலகம் (மேம்பாடு), இலங்கை துறைமுக அதிகாரசபை, 45, லெய்டன் பஸ்டியன் வீதி, கொழும்பு – 1 என்ற முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைகேட்புப் பெட்டியில் இடவும். அதன்பின் பங்கேற்க விரும்பும் ஆலோசகர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் தொழில்நுட்ப முன்மொழிவைக் கொண்ட கடித உறை உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**இலங்கை துறைமுக அதிகாரசபை**
**இல. 19, சைத்ய வீதி**
**கொழும்பு – 01**



# அறிவித்தல்

**நாத்தாண்டிய பிரதேச சபை**

**2023ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்ளல்**

1987 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய வடமேல் மாகாண கௌரவ ஆளுநரான ராஜா கொல்லுரே அவர்களினால் 2020-10-29ஆம் திகதி மற்றும் 2199/15ஆம் இலக்க இலங்கை சனநாயக சோலிஷக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள பிரதேச சபை வரவு செலவுத் திட்ட திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல் 06ஆம் இலக்க விதியின் பிரகாரம் நாத்தாண்டிய பிரதேச சபையினால் 2023ஆம் வருடத்திற்காக தயாரிக்கப்படும் வரவு செலவுத் திட்ட ஆவணத்தில் அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்குவதற்கான முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும். உங்களால் அந்த முன்மொழிகளில் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கும் முன்மொழிவுகளை 2022 ஜூன் 30ஆம் திகதிக்கு முன் எனக்குக் கிடைக்கச் செய்யுமாறு தயவுடன் அறிவிக்கப்படுகின்றது.

**அலுவலக முகவரி - பிரதேச சபை, நாத்தாண்டிய**
**அலுவலக தொலைபேசி இலக்கம் - 032-2254276**
**அலுவலக தொலைநகல் இலக்கம் - 032-2254275**
**மின்னஞ்சல் முகவரி - naththandiyaps@yahoo.com**

**சட்டத்தரணி ரொஷான் நிலந்த பர்னாந்து,**
**தலைவர்,**
**பிரதேச சபை,**
**நாத்தாண்டிய.**

**2022-05-04ஆம் திகதி சபை அலுவலகத்தில்**



திகதி 06.05.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4754
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,831,340.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,733,332.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 3 3 3 1 8 6

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 784
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 541,900.00
வெற்றி இலக்கினம் X வெற்றி இலக்கங்கள் 08 43 75 76
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 109,787,660.40

HANDAHANA
DRAW NUMBER: 0063
TOTAL PRIZE WON IN THIS DRAW Rs. 1,043,840.00
WINNING ZODIAC AQUARIUS
WINNING NUMBERS 01 48 52 53
THE SUPER PRIZE OF THE NEXT DRAW Rs. 3,226,656.20

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1102
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 831,060.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 250,862,770.00
M 18 10 26 33 34
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011-4607001-2 பெக்ஸ்: 011-4669475 Email: info@nlb.lk Web: www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

திகதி 07.05.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 4755
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,445,550.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,313,582.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 7 2 9 1 2 9

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 785
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,486,620.00
வெற்றி இலக்கினம் G வெற்றி இலக்கங்கள் 06 09 24 45
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,009,718.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1243
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,897,040.00
வெற்றி இலக்கினம் கடகம் வெற்றி இலக்கங்கள் 9 2 1 8 7 0
அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு ரூ. 11,193,113.20

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0064
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,902,480.00
இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 10 21 27 35
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,226,656.20

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1103
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,326,300.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 250,949,530.00
A 26 23 27 59 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011-4607001-2 பெக்ஸ்: 011-4669475 Email: info@nlb.lk Web: www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# தையிட்டியில் அமைக்கப்படும் விகாரை நிர்மாணப்பணிகளை பார்வையிட விஜயம்



**யாழ். விஷேட நிருபர்**

வலி.வடக்கு தையிட்டியிலுள்ள தனியார் காணியொன்றில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ ரஜமஹா விகாரைக்கு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா விஜயம் செய்தார். அங்கு சென்ற அவர்,விகாரையின் கட்டுமானப்பணிகள் குறித்தும் கலந்துரையாடினார்.

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் படைத் தலைமையகத்துக்குச் சென்றிருந்தபோதே, விகாரைக்கும் சென்று களப்பணிகளை ஆராய்ந்தார்.

வலி.வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், இந்த விகாரையை அமைப்பதற்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டதுடன் கட்டுமானப்பணிகளை அனுமதிப்பதில்லை என்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

எனினும், கடும் எதிர்ப்பையும் மீறி காங்கேசன்துறை திஸ்ஸ ரஜமஹா விகாரை அமைக்க இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவால் அடிக்கல் நடப்பட்டது.

விகாரை கட்டுமானப் பணிகளுக்கு தடை விதிக்கக் கோரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலே, விகாரையின் கட்டுமானப்பணிகள் தொடர்பில் இராணுவத் தளபதி,கள ஆய்வுகளை மேற்கொண்டார்.

# மண்ணெண்ணெய் வாங்க இரு தினங்களாக அலைந்த முதியவர் மரணம்

**யாழ்.விஷேட நிருபர்**

மண்ணெண்ணெய் வாங்குவதற்காக இரண்டு தினங்களாக வரிசையில் காத்திருந்த முதியவர் ஒருவர் உயிரிழந்தார். மண்ணெணெய் கிடைக்காத நிலையிலே இம்முதியவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் அளவெட்டி மத்தியைச்சேர்ந்த கந்தசாமி நடராசா (வயது 80) என்பவரே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த இம்முதியவர் கடந்த வெள்ளிக்கிழமை மண்ணெண்ணெய் வாங்குவதற்காக அளவெட்டி மல்லாகம் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் நீண்ட வரிசையில் காத்திருந்துள்ளார். சில மணி நேரத்தில் மண்ணெண்ணெய் முடிந்து விட்டதாக ஊழியர்கள் அறிவித்தனர். இதனால் மண்ணெண்ணெய் கிடைக்காமலே இவர்,வீடு திரும்பியிருந்தார்.

மறுநாள் சனிக்கிழமை மீண்டும் மண்ணெண்ணெய் வாங்குவதற்காக சென்று நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்துள்ளார்.

இவரது தவணை வந்தபோது, மண்ணெண்ணெய் முடிவடைந்து விட்டதாக ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதனால் கடும் மனவிரக்தியுடன் வீடு திரும்பிய அம்முதியவர், மண்ணெண்ணெய் வாங்க முடியவில்லை என மனைவியிடம் கூறிவிட்டு படுக்கைக்குச் சென்றுள்ளார். இதன் பின்னர்,சில நிமிடங்களில் அவர் உயிரிழந்தார்.

இவரின் இறப்பு அப்பகுதி மக்களிடம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# வவுனியா சதொசவில் பால்மா பதுக்கல் அதிகாரிக்கு நடவடிக்கை எடுக்க கோரிக்கை

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா சதொச விற்பனை நிலையத்தில் விற்பனை செய்வதற்காக கொண்டுவரப்பட்ட பால்மா பக்கெற்றுக்கள்,பதுக்கி வைக்கப்பட்டமை தொடர்பில்

உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சாந்தசோலை கிராம மகளிர் அமைப்பு தலைவியே, மாவட்ட அரசாங்க அதிபரிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.இந்த பால்மா

பக்கெற்றுக்கள் ச,தொ,ச உதவி முகாமையாளரின் அலுவலகத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது.இது பற்றி

நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிக்கு தகவல் வழங்கப்பட்டி ருந்தது. இந்நிலையில்,இத்தகவல் சதொச விற்பனை நிலைய உதவி முகாமையாளருக்கு தெரியப்படுத்தப் பட்டுள்ளது.இதைத் தெரியப்படுத்திய நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறே, கிராம மகளிர் அமைப்பு தலைவி கோரியுள்ளார்.

இவ்விடயம், குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் ,

சதொசவில் பால்மா வழங்கப்படவில்லை. எனினும் உதவி முகாமையாளரின் அலுவலகத்தில் பால்மா மறைத்து பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக பொதுமக்களுக் கு தகவல் கிடைத்தது.இதுபற்றி வவுனியா மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு பொறுப்பதிகாரிக்கு இரகசியத் தகவல் வழங்கப்பட்டது.

எனினும், சில நிமிடங்களில் பால்மா உட்பட பதுக்கி வைக்கப்பட்ட உணவுப் பொருட்கள் சில உடனடியாக உதவி முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து விற்பனை செய்வதற்காக சதொசவிற்கு கொண்டு வரப்பட்டது.

நுகர்வோர் பாதுகாப்பு பொறுப்பதிகாரிக்கு வழங்கப்பட்ட இரகசியத்தகவல்,உதவி முகாமையாளருக்கு கிடைத்ததாலே,இப்பால்மா பக்கெற்றுக்கள் திடீரென விற்பனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. எனவே, மோசடியை காப்பாற்றுவதற்கு உதவிய நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றே மகளிர் அமைப்பு தலைவி கோரியுள்ளார்.

# நல்லதம்பி பேரின்பநாதனின் 45 ஆம் நாள் நினைவு தினம்

**கோப்பாய் குறூப் நிருபர்**

யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் பொருளியல் துறை தலைவர், நல்லதம்பி பேரின்பநாதனின் 45ஆவது நாள் நினைவு தினம் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.இதில், பேராசிரியர் செ.சந்திரசேகரம் எழுதிய "இலங்கையின் பொருளாதார நெருக்கடி (2022) வெளிப்பாடுகள், மூலங்கள் மற்றும் மீட்சிகள்" எனும் நூலும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இன்று திங்கட்கிழமை (09) பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இந்நிகழ்வு இடம்பெறும்.

# பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரி மன்னாரிலும் பூரண ஹர்த்தால்




**தலைமன்னார் விஷேட நிருபர்**

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரி வெள்ளிக்கிழமை (06) நாடு பூராகவும் மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தாலை ஆதரித்து, மன்னாரிலும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.பாடசாலைகள் எவையும் இயங்காத நிலையில்,பழக்கடைகள் தவிர சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன.

மன்னார் நகர் உட்பட சகல கிராமங்களிலும் வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை போக்குவரத்துவரத்து சபை சேவைகள் இடம்பெற்றபோதும், பிரயாணிகள் எவரையும் காண

முடியாதிருந்தது.

மக்கள், பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பியவாறு அடம்பன் நெடுங்கண்டல் பகுதியிலிருந்து மாந்தை மேற்கு பிரதேச செயலகம் வரை பேரணியாக வந்து, போராட்டத்தை முன்னெடுத்தனர்.

# உயரதிகாரி ஒருவருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

**கோப்பாய் குறூப் நிருபர்**

இலங்கை மின்சார சபையின் யாழ். சுன்னாக கிளை உயரதிகாரி ஒருவரின் தவறான வழிநடத்தலால், தனது வீட்டு மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட நபர் கடந்த (05) வியாழக்கிழமை இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார் .

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

மின் துண்டிக்கப்பட்ட தனது வீட்டை மனைவியின் மருத்துவச் செலவுக்காக உரிமையாளர் அடகு வைத்துள்ளார்.

பளைப் பகுதியில் வசிக்கும் நபர் ஒருவரிடமே இவ்வீடு அடகு வைக்கப்பட்டது.

இந்நிலையில்,வீட்டை அடகுக்காக பெற்றுக் கொண்ட பளைப் பிரதேசத்தை சேர்ந்த நபர்,அவ்வீட்டை தனதாக்கும் நோக்கில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளார்.

இதன் ஒரு அங்கமாக தனது பெயருக்கு மாற்றப்பட்ட அடகு உறுதியை, சுன்னாக மின்சார சபை பணிமனையில் காண்பித்து உயர் அதிகாரி ஒருவரின் அனுமதியுடன் குறித்த வீட்டின் மின் இணைப்பையும் துண்டித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர், தனது வீட்டை மீட்பதற்கு வாங்கிய பணம், அதற்கான வட்டியை செலுத்த தயாராக இருப்பதாக அடகுக்காரரிடம் பலமுறை தெரிவித்தும் அவர் அதைப் பொருட்படுத்தாது இருந்துள்ளார்.

வீட்டின் மின்சார பட்டியல் இன்றுவரை தமது பெயரிலே இருக்கையில்,எவ்வித முன்னறிவித்தலுமின்றி மின்சாரமும் துண்டிக்கப்பட்டிருக்கிறது.

எனவே, அரச அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட நீதியற்ற செயற்பாட்டிற்கு நீதி தருமாறு கோரியே, மனித உரிமை ஆணைக்குழுவில் பாதிக்கப்பட்டவர் முறைப்பாடு செய்துள்ளார்.

# தமிழரசுக்கட்சி மத்திய செயற்குழு உறுப்பினரை நீக்கியமைக்கு மீண்டும் இடைக்கால தடை உத்தரவு

**ஓமந்தை விஷேட நிருபர்**

இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினரும் வாலிபர் முன்னணியின் இணை பொருளாளருமான அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளம்செழியன், கட்சியிலிருந்து நீக்கப்பட்டமைக்கு

20.05.2022 வரை மீண்டும் இடைக்கால தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.இது தொடர்பான வழக்கு (06) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, இவ்விடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இவ் வழக்கு விசாரணையானது யாழ். மாவட்டநீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தம்மை கட்சியிலிருந்து, இலங்கை தமிழரசு கட்சி பதில் பொது செயலாளர் வைத்தியர் ப. சத்தியலிங்கம் நீக்கியது தவறு என யாழ். மாவட்ட நீதிமன்றில் இலங்கை தமிழரசுக்கட்சி வாலிபர் அணி பொருளாளரும், மத்தியகுழு உறுப்பினருமான பீற்றர் இளம்செழியன் மனுத்தாக்கல் செய்திருந்தார். அவரின் மனுவிற்கு ஆதரவாக சட்டத்தரணி கலாநிதி குருபரன் முன்னிலையாகியிருந்தார்.இந்த வழக்கில், சம்மந்தப்பட்ட இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பதில் பொது செயலாளர் ப. சத்தியலிங்கம் ஆகியோர் நீதிமன்றில் பிரசன்னமாகவில்லை.

நிர்வாக செயலாளர் சூ. சேவியர் குலநாயகம் மட்டும் நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்தார். பூரண விளக்கம் வழங்கும் பொருட்டு (06) இருந்து எதிர்வரும் 20.05.2022 ம் திகதி வரை சந்தர்ப்பம் வழங்கப்பட்டு மீண்டும் இடைக்கால தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

பிரதிவாதிகளாக இலங்கை தமிழரசு கட்சி பதில் பொதுச்செயலாளர் வைத்தியர் சத்தியலிங்கம், இலங்கை தமிழரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராசா, நிர்வாக செயலாளர் குலநாயகம் ஆகியோரின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

# நிர்வாணப்படங்களை முகநூலில் பதிவிடுவதாக மிரட்டி பணம் பறிப்பு

**கோப்பாய் குறூப் நிருபர்**

நிர்வாணப்படங்களை முகப்புத்தகம் மற்றும் சமூக வலைத்தளங்களில் பதிவிடுவதாக மிரட்டி, இரண்டு இலட்சம் ரூபா பணம் பறித்த கணவன் மனைவி உட்பட நால்வர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.குறித்த ஒரு நபரை தனியறைக்குள் பூட்டி, நிர்வாணமாகப் படங்களை எடுத்த பின்னரே, அந்நபரை இவர்கள் மிரட்டியுள்ளனர். கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதுபற்றித் தெரியவருவதாவது,

கோப்பாய் செல்வபுரம் பகுதியிலுள்ள இள வயது கணவன், மனைவி மற்றும் மனைவியின் இரண்டு சகோதரர்கள் சேர்ந்து, சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த ஒருவரை முகப்புத்தக நட்பு வட்டத்துக்குள் இணைத்து பெண்கள் போல் பாசாங்கு செய்துள்ளனர். பின்னர், அவரை கோப்பாய் பகுதிக்கு அவரை அழைத்து அறையொன்றில் பூட்டி நிர்வாணமாக்கி புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்தனர்.

எடுத்த புகைப்படங்கள் வீடியோக்களை முகப்புத்தகம் மற்றும் சமூக வலைத்தளங்களில் பதிவிடுவோம் என மிரட்டி இவர்கள், தமக்கு இரண்டு லட்சம் ரூபா பணம் வழங்குமாறு கோரியதால், குறித்த நபர் இரண்டு இலட்சம் ரூபாவை வங்கியில் வைப்பிலிட்டுள்ளார்.

எனினும்,மேலதிகமாக வங்கியில் ஐந்து இலட்சம் ரூபா பணத்தை வைப்பிலிடுமாறு அக்குடும்பத்தினர் மீண்டும் மிரட்டியுள்ளனர். இதையடுத்து, கோப்பாய் பொலிஸில் குறித்த அந்நபர் முறைப்பாடு செய்தார். இதையடுத்தே அக்குடும்பத்தினர் கைது செய்யப்பட்டனர்.

# களவு, கொள்ளைகளைத் தடுக்கவே சாவகச்சேரியில் காவலரண் திறப்பு

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரி நகரின் பாதுகாப்பு நிலைமையைக் கருத்திற்கொண்டே, பொலிஸ் காவலரண் திறந்து வைக்கப்பட்டிருப்பதாக சாவகச்சேரி வர்த்தக சங்கத் தலைவர் வே.சிவநிதன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரில் (07) பொலிஸ் காவலரண் திறந்து வைக்கப்பட்டது.இதன்பின்னர்,நடந்த வைபவத்தில்

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;



சாவகச்சேரி நகரில் பொலிஸ் காவலரணின் அவசியம் உணரப்பட்டது.இதனால் காலத்தின் தேவையாக இது கருதப்பட்டது . இந்நிலையில் சாவகச்சேரி பொலிஸ் பொறுப்பதிகாரி வர்த்தக சங்கத்திடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே, பொலிஸ் காவலரண் அமைக்கப்பட்டது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியால், களவு உள்ளிட்ட சட்டவிரோதச் செயற்பாடுகள் அதிகரிக்கும் ஆபத்துக்கள் உள்ளன. இதனைத் தடுக்கவே பொலிஸ் காவலரண் அமைக்கப்பட்டது.

இந்த காவலரண் மூலம் இவ்வாறான பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு, வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களின் பாதுகாப்பினை பேண முடியும்.

மேலும், சாவகச்சேரி வர்த்தக சங்கத்தை மேலும் வலுவூட்டுவதற்கான செயற்பாடுகளை நாம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறோம்.இவ்வருடம் புதிதாக 74 வர்த்தக நிலையங்கள் எமது சங்கத்தில் பதியப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கிழக்கின் குரல்

# கல்விக் கல்லூரி ஆசிரிய நியமனங்கள் குறித்து மீளாய்வு செய்யுமாறு கோரிக்கை

## கல்வி அமைச்சின் செயலாளருக்கு இம்ரான் எம்.பி கடிதம்

**கந்தளாய் தினகரன் நிருபர்**



கிழக்கு மாகாணத்தில் அண்மையில் வழங்கப்பட்ட கல்விக் கல்லூரி ஆசிரியர் நியமனங்கள் குறித்து மீளாய்வு செய்யுமாறு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப், கிழக்கு மாகாண கல்வி அமைச்சுச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சு செயலாளருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் அண்மையில் வழங்கப்பட்ட கல்விக் கல்லூரி ஆசிரியர் நியமனங்கள் தொடர்பில் பல ஆசிரியர்களின் பெற்றோர்களினால் பல்வேறு குறைபாடுகள் என்னிடம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

அவற்றில் பொதுவாக பின்வரும் விபரங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன என்பதை தங்களது கவனத்திற்குச் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, போக்குவரத்து பிரச்சினைகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு இயன்றவரை ஆசிரியர்களின் வசிப்பிடத்திற்கு அண்மையில் உள்ள பாடசாலைகள் வழங்கப்பட வேண்டுமென்பதை கல்வி அமைச்சு செயலாளர் ஏற்றுக் கொண்டுள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளிவந்திருந்தது.

இந் நி லை யி ல் கிழக்கு மாகாணத்தில் கல்விக் கல்லூரி ஆசிரியர் நியமனம் பல ஆசிரியர்களுக்கு வசிப்பிடத்திலிருந்து வெகுதூரத்தில் வழங்கப்பட்டுள்ளது. சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட பஸ் போக்குவரத்தின் மூலமே பாடசாலையை சென்றடையக் கூடியதாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநராக எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா பணியாற்றிய காலத்தில் ஆசிரியைகளுக்கு (பெண்களுக்கு) பஸ் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் பாடசாலைகள் வழங்கும் நடைமுறை இருந்தது. எனினும், தற்போது வழங்கப்பட்ட நியமனத்தில் இது கவனத்தில் கொள்ளப்படாமல் ஆசிரியைகள் பஸ்ஸில் இருந்து இறங்கி முச்சக்கர வண்டியில் சில கிலோ மீற்றர்கள் பயணம் செய்து பாடசாலைக்குச் செல்லும் வகையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய பொருளாதார நெருக்கடி நிலையையும், ஆசிரியர்களின் சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு இவ்விடயத்திற்கு முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுப்பீர்களென அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் (ஜீ.எம்.எம்.எஸ்) முதலாம் தர மாணவர்களின் 'வித்தியாரம்ப விழா ' பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ் தலைமையில் இடம்பெற்ற போது. (படம்; மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# கல்முனை பாத்திமா கல்லூரியில் மாணவர் பாராளுமன்ற தேர்தல்



**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட கல்முனை கார்மல் பாத்திமாக் கல்லூரியில் மாணவர் பாராளுமன்ற தேர்தல் அண்மையில் கல்லூரி அதிபர் அருட்சகோதரர் சந்தியாகோவின் ஆலோசனையின் பேரில் கல்லூரி திறந்த வெளியில் இடம்பெற்றது.

கல்வியமைச்சின் சுற்று நிருபத்திற்கமைய பாடசாலை மாணவர்களிடையே அரசியல் மற்றும் தலைமைத்துவப் பண்புகளை புரிந்து கொள்ளும் வகையில் இந்த மாணவர் பாராளுமன்றம் அமைக்கப்படவுள்ளதுடன், பாடசாலையின் கல்வி மற்றும் புறக்கிருத்திய செயற்பாடுகளில், பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்து செயற்பட்டு பாடசாலையின் பெயரையும் புகழையும் மேலோங்கச் செய்வதுடன், வெற்றியையும் தோல்வியையும் தாங்கிக் கொள்ளும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வதுமே இதன் முக்கிய நோக்கமாகும்.

இம் மாணவர் பாராளுமன்ற தேர்தலில் மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடன் வாக்களிப்பில் ஈடுபட்டதுடன் , பாடசாலை ஆசிரியர்கள் இந்த தேர்தலை நடத்துவதில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டனர்.



மூதூர் சதாம் வித்தியாலயத்தில் அதிபர் எஸ்.ஐ.சுஹூத் தலைமையில் இடம்பெற்ற, தரம் 01 மாணவர்களுக்கான வித்தியாரம்ப நிகழ்வின் போது.
(படம் ; மூதூர் தினகரன் நிருபர்)

# உணவு பொதிகள் விநியோகம்

**(மூதூர் தினகரன் நிருபர்)**



தற்போதைய அசாதாரண சூழலினால் மூதூர் பிரதேசத்தில் பெரிதும் வாழ்வாதார வழிகளில் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் ஊடாக மூதூர் கிளையின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டுள்ளன.

குடும்ப பொருளாதார சுமை, நாளாந்தம் தொழில் புரிவதில் உள்ள கஷ்டம் உள்ளிட்ட பல்வேறு கஷ்ட நிலையில் வாழும் குடும்பங்களுக்கு இவ்வுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மூதூர் வை.எம்.எம்.ஏ. கிளை அலுவலகத்தில் கிளைத் தலைவர் எம்.கே.எம். ஜிஹாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் , நிருவாக சபை உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## தினகரன் வர்த்தக உலா

எம்.எஸ். பாஹிம் E-mail: businesstkn@gmail.com

# வெற்றிகரமாக ஹேக்கத்தான் சவாலை நடாத்தியுள்ள AIA






AIA இன்ஷூரன்ஸ் காப்புறுதித் துறையில் முதன் முறையாக 'AIA ஸ்ரீலங்கா ஹேக்கத்தான் சவால் 2021' இனை மிகவும் வெற்றிகரமாகவே நடாத்தியிருந்தது.'ஹேக்கத்தான் சவால் 2021' கடந்த வருடம் செப்டெம்பர் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு இலங்கை மற்றும் சர்வதேச நிதியியல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் காப்புறுதித் தொழில்நுட்ப நிறுவனங்களின் மகத்தான வெற்றிக்கு இடமளிக்கும் வகையில் 2022 மார்ச் 09 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்தது. இந்த ஐந்து மாத கால நிகழ்வானது எட்டிற்கும் (08) மேற்பட்ட போட்டியாளர்களைக் கவர்ந்திருந்ததுடன் மிகவும் சிக்கலான வியாபாரச் செயல்முறைகளை இலகுபடுத்தும் இறுதியான இலக்குடன் நான்கு (04) முன்மாதிரித் தீர்வுகளும் இதன்போது பகிரப்பட்டிருந்தன.

ஹேக்கத்தான் நிகழ்வானது AIA இனால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டிருந்ததுடன்,ASEAN நிதியியல் புத்தாக்க வலையமைப்பு சமூக விளைவு முயற்சியானது சிங்கப்பூர் நாணய ஆணையம் , சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் ,ASEAN வங்கியாளர்கள் சங்கம் ஆகியவற்றுடனான கூட்டாண்மையுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

AIA இன் பிரதான நிறைவேற்று அதிகாரி நிகில் அத்வானி கருத்துத் தெரிவிக்கையில், 'டிஜிட்டல் மாற்றமானது யுஐயு இற்கான அத்தியவசிய முன்னுரிமைக்குரிய விடயமொன்றாகும். எங்கள் வாடிக்கையாளர்களுக்கு எங்களின் வியாபாரத்தை மாற்றுவதற்கான தொழில்நுட்பத் தரத்தினை மேம்படுத்துவதற்காக நாங்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றோம். டிஜிட்டல் மயமாக்கலுக்கு மாறுதல் மற்றும் அதிகப்படியான வாடிக்கையாளர் சௌகரியத்தினை ஏற்படுத்துதல் போன்றவற்றை உள்ளடக்கிய பயணத்தில் பாரிய மைல்கல்லாகவே அமையும். புதுமையான தீர்வுகள் நடைமுறைப் படுத்தப்படும் போது அது காப்புறுதித் துறையில் புதிய தரநிலையை உருவாக்குவதுடன் காப்பீடு விற்பனை செய்யப்படும் விதத்திலும் குறிப்பிடத்தக்க வகையிலான எளிமைக்கும் வழிவகுக்கின்றது' எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

# தொழில்துறை அழிவைத் தடுக்க அரசு உடனடிநடவடிக்கை எடுக்குமாறு பெருந்தோட்டங்கள் வலியுறுத்து



பிராந்திய தோட்டநிறுவனங்களுக்கு (RPCs) எரிபொருள் ஒதுக்கீட்டை அரசாங்கம் வழங்கத் தவறியமை, தொடர்ச்சியான மின்சாரத் தடைகள் மற்றும் அறியப்படாத கொள்கை வகுக்கப்படுதல் ஆகிய வற்றின் மூலம், இலங்கையின் பெருந்தோட்டங்கள் ஸ்தம்பிதப்படுத்துகிறது. எரிபொருள் பற்றாக்குறையால், அனைத்து கொழுந்துமற்றும் இறப்பர்பால் போக்குவரத்து நடவடிக்கைகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது மற்றும் ஜெனரேட்டர்களை இயக்க போதுமான எரிபொருள் இல்லை.

அதன்படி, இலங்கையின் ஏற்றுமதி வருவாயில்1.5பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமாக பங்களிக்கும் இலங்கையின் பெருந்தோட்டத்தொழிலுக்கு முன்னுரிமை வழங்க அதிகாரிகள் உடனடிநடவடிக்கை எடுக்கவேண்டுமென இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம்(PA), கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கட்டான நிலைமை குறித்து கருத்து தெரிவித்த இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர், கலாநிதி ரொஷான் இராஜதுரை, 2022ஆம்ஆண்டின் தொடக்கத்தில் இருந்து தேயிலையின் போக்குவரத்து மற்றும் விரைவான உற்பத்திச் செலவு சுமார் 30% அதிகரித்தது. "உண்மையான மற்றும் அர்த்தமுள்ள தீர்வுகள் உடனடியாக வழங்கப்படாவிட்டால், RPCகள் இனிவழக்கம் போல் செயல்பாடுகளைத் தொடர முடியாது" என்று ராஜதுரை வலியுறுத்தினார்." ரூபாயின் மதிப்புசரிவு மற்றும் பொருட்களின்விலைகளில் உலகளாவிய அதிகரிப்பு ஆகியவற்றின் விளைவாகஇந்த அத்தியாவசிய உள்ளீடுகளின் விலை விண்ணைமுட்டும். உதாரணமாக, தேயிலைக்கு பயன்படுத்தப்படும் உரத்தின் விலைதடைக்கு முன்னர் 25 மடங்கு அதிகரித்துள்ளது. மார்ச் 2022 வரை கொழும்பு தேயிலைஏலத்தில், அதிக பயிரிடப்பட்ட தேயிலையின் நிகர விற்பனை சராசரி (NSA) சுமார் 717ரூபாவாகும்.

# இலங்கையில் 'சிறந்த கூட்டாண்மை வங்கி' மற்றும் 'சிறந்த சில்லறை வங்கியாக' ComBank தெரிவு

COMMERCIAL BANK

ஐக்கிய அரபு இராச்சியத்தை தளமாகக் கொண்ட Global Business Review சஞ்சிகையின் வருடாந்த விருதுகளில் 'சிறந்த சில்லறை வங்கி இலங்கை மற்றும் சிறந்த கூட்டாண்மை வங்கி 2022" ஆகிய விருதுகளை கொமர்ஷல் வங்கி வென்றுள்ளது.

2021 இல் அதன் செயல்திறனை மதிப்பாய்வு செய்த ஒரு சுயாதீன ஆய்வுக் குழுவின் முடிவுகளின் அடிப்படையில் வங்கிக்கு இந்தப் பாராட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. மதிப்பிடப்பட்ட ஆண்டில் கொமர்ஷல் வங்கியானது இலங்கையின் தரப்படுத்தல் மற்றும் வேகமாக வளர்ந்து வரும் தனியார் வங்கியாகத் திகழ்ந்தது. நாட்டில் உள்ள தனியார் வங்கிகளில் துறை சார்ந்த முன்னணி செயல்திறன் குறிகாட்டிகள் மதிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றில் அதிக சந்தை மூலதனம் , அதிக மொத்த வருமானம்,வரிக்கு முந்திய மற்றும் பின்னரான அதிக லாபம், மொத்த சொத்துக்களில் அதிக மதிப்பு,மொத்த கடன்களில் அதிக மதிப்பு,

கடன்களின் அதிக சந்தை பங்கு, அதிக மொத்த பங்குதாரர் நிதி, அதிக செயல்பாட்டு வருமானம், அதிகபட்ச மொத்த வைப்பு, அதிக நிலையான வைப்புக்களின் சந்தை பங்கு மற்றும் அதிக CASA விகிதம் ஆகியன மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

குளோபல் பிசினஸ் ரிவியூ சஞ்சிகையின்; விருதுகள் என்பது வங்கி, நிதி, காப்பீடு, ரியல் எஸ்டேட், தலைமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் உள்ள நிறுவனங்களின் அசாதாரண செயல்திறனைக் கௌரவிப்பதற்கும் விருதுகளில் அளிப்பதற்குமான ஒரு தளமாகும்.

# துபாயில் 2022 கோடை காலத்துக்கு பல்வேறு வாய்ப்புக்களை வழங்கும் எமிரேட்ஸ் போர்டிங் பாஸ்



எ மி ரே ட் ஸின் விமான போர்டிங் பாஸ் என்பது வெறுமனே ஒரு பயணப் பத்திரம் மட்டுமல்ல அது துபாயில் இவ்வாண்டு கோடை காலத்துக்கான பல்வேறு வாய்ப்புக்களை வழங்கும் ஒரு ஆவணமும் கூட. மே மாதம் முதலாம் திகதி தொடங்கி செப்டம்பர் மாதம் 30ம் திகதி வரையான ஐந்து மாத காலத்துக்கு எமிரேட்ஸ் அதன் வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு வாய்ப்புக்களை வழங்க உள்ளது. எமிரேட்ஸ் கோடை கால அனுமதிச் சீட்டுடன் துபாய்க்குள் வருபவர்களுக்கு அல்லது தரித்துச் செல்பவர்களுக்கும் இந்த வாயப்பு வழங்கப்படுகிறது.

எமிரேட்ஸ் வாடிக்கையாளர்கள் தமது போர்டிங் பாஸைக் காட்டுவதன் மூலம் துபாய் முழுவதும் உள்ள நூற்றுக்கணக்கான விற்பனை நிலையங்கள், ஓய்வு மற்றும் பொழுது போக்கு இடங்கள், உணவு உட்கொள்ளும் இடங்கள் என்பனவற்றில் கணிசமான கழிவுச் சலுகைகளை அனுபவிக்க முடியும். இவற்றுக்கு மேலதிகமாக, மே மாதத்தில் துபாயில் தரை இறங்குபவர்கள் துபாயில் மரீனா குரூஸ் ஆடம்பர கடல் பயணத்துக்கான ஒரு வாய்ப்பையும் பெறலாம். துபாயின் எழில் கொஞ்சும் அழகை பார்வையிட இது ஒரு அருமையான வாய்ப்பாகும். இந்த ஒரு மணிநேர நீர் வழி சுற்றுப்பயணத்துக்கு முன் கூட்டிய பதிவுகளும் அவசியமில்லை. அங்கீகாரம் உள்ள ஒரு போடிங் பாஸை உரிய டிக்கட் கவுண்டரில் காட்டி தனது தனிப்பட்ட அடையாளத்தை நிரூபிப்பது மட்டுமே போதுமானது. அது காகித வடிவில் அல்லது டிஜிட்டல் வடிவில் கூட இருக்கலாம்.

# கிழக்கின் குரல்







அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவர்களின் "வித்தியாரம்ப விழா" வியாழக்கிழமை (05) அதிபர் திருமதி நஜீமா ஹாறுடீன் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் அதிதிகள் கௌரவிக்கப்படுவதையும்,எம். எம்.பாத்திமா பதூல் எனும் மாணவிக்கு ஏடு தொடங்குவதையும், மாணவிகளுடன் அதிபர், ஆசிரியர்கள் கூட்டாக எடுத்த படம். படம்: அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

# உற்பத்திக்கு பங்களிக்கும் நோக்கில் வேலைத் திட்டங்கள் முன்னெடுப்பு

**கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அஸ்மி**





**பாலமுனை விசேட நிருபர்**

கிழக்கு மாகாணத்தில் உள்ள உற்பத்தி சங்கங்களை நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு செய்யக்கூடிய வகையில் ஒழுங்கமைத்து, அதன் செயற்பாடுகளையும் அதிகரிக்க பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதாக கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தெரிவித்தார்.

கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பிரிவு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் பொது முகாமையாளர்களுக்கான விசேட கூட்டம் கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

தேசிய அபிவிருத்தியில் உற்பத்தி சங்கங்களின் அவசியம் உணரப்படுகிறது. அந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள உற்பத்தி சங்கங்களை நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு செய்யக்கூடிய வகையில் ஒழுங்கமைத்து பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

கொரோனா தாக்கம் இலங்கையிலும் பாரிய பொருளாதார நெருக்கடியை உருவாக்கியுள்ளது. இதனை ஈடுசெய்யும் வகையில் நாட்டில் தேசிய உற்பத்திக்கும் உணவு தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் வகையிலும் கிழக்கு மாகாணத்தில் காணப்படும் அரிசி மற்றும் பால் உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு சங்கங்களின் அடைவுகளை தேசிய ரீதியான பங்களிப்பாக மாற்றியமைக்க திட்டமிட்டுள்ளோம். பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கோப்பிறஸ்கள் ஊடாக பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை இலாப நோக்கில் அல்லாமல் சேவை அடிப்படையில் வழங்கி வருகின்றோம். இதனால் மக்கள் பெரிதும் நன்மையடைந்து வருகின்றனர்.

சங்கத்திற்கு ஒரு வேலைத்திட்டம் எனும் கருப்பொருளில் முன்னெடுக்கப்பட்டு வரும் குறித்த திட்டமானது வெற்றியளித்துள்ளதாகவும், ஆலையடிவேம்பு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் கோப்பிறஸ் நஞ்சற்ற மரக்கறி விற்பனை நிலையமொன்றை விரைவில் திறந்து வைக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கல்முனை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் பொதுமுகாமையாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# "அரசியல் அறம் ஏ.ஆர்.எம்" கவிதை நூல் வெளியீட்டு விழா



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

டாக்டர் எஸ்.நளீமுடீன் எழுதிய "அரசியல் அறம் ஏ.ஆர்.எம்." கவிதை நூல் வெளியீடும் ஏ.ஆர். மன்சூர் பௌண்டேஷனின் இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை ஏ.ஆர். மன்சூர் பௌண்டேஷனின் ஏற்பாட்டில், அதன் ஸ்தாபகத் தலைவி சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளீமுடீன் தலைமையில் சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் தமிழ் மொழித்துறை பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் நூல் ஆய்வுரை வழங்கியதுடன், அறிஞர் சித்திலெப்பை ஆய்வு மன்றத் தலைவர் சட்டத்தரணி மர்சூம் மௌலானா மற்றும் இஸ்லாமிய ஆசிரியர் சங்க தலைவரும் எழுத்தாளருமான ஆசிரியர் ஜெஸ்மி எம். மூஸா, கவிதாயினி டாக்டர் புஸ்பலதா லோகநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நூலின் முதற்பிரதியை மறைந்த முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூரின் பாரியார் சுஹாரா மன்சூர் பெற்றுக் கொண்டார்.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக், கல்முனை வடக்கு உப பிரதேச செயலாளர் டி.ஜெ அதிசயராஜ், சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், கலை, இலக்கிய, ஊடக பிரமுகர்கள், முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம்.மன்சூரின் குடும்ப உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# இழுது மீனின் பிடிக்குள் சிக்கி மீனவர் பலி

**காரைதீவு குறூப் நிருபர்**

கடலில் வாழும் இழுது மீனின் பிடிக்குள் சிக்கி மீனவர் ஒருவர் பலியாகியுள்ளார். இச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (8) காரைதீவில் இடம் பெற்றுள்ளது.

காரைதீவு 8 ஆம் பிரிவைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெயரஞ்சன் (வயது 51) என்ற மீனவரே இவ்விதம் விழுது மீனின் பிடிக்குள் சிக்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

கடலில் வாழும் சொறி முட்டை என அழைக்கப்படும் இழுதுமீன், நுங்கு மீன் ,ஜெலிபிஸ் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது.

கடலுக்கு மாயாவலை மீன்பிடி தொழிலுக்காக சென்றவேளை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கரையிலிருந்து சுமார் 100 மீற்றர் கடலில் தோணி வந்து கொண்டிருந்தவேளை இறங்கி வலையை கழற்றும் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த வேளையில் திடீரென இழுதுமீன் தலைப்பிட்டு மீனவரை சுற்றிக்கொண்டது.

இதை தற்செயலாக கண்ட ஏனைய மீனவர் அவரை காப்பாற்ற முயற்சி செய்தும் பலனளிக்கவில்லை.

ஒருவாறு அவரை கரைக்கு கொண்டு வந்து வைத்திய சாலையில் சேர்த்தனர். எனினும் காப்பாற்ற முடியவில்லை.



பாலமுனை உதுமாபுர தாறுல் ஹஸனாத் வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களின் வித்தியாரம்ப விழா இடம்பெற்ற போது. படம்: பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்

# அம்பாறை மாவட்டத்தில் வரட்சி; 5,426 குடும்பங்கள் பாதிப்பு

**மாவட்ட அனர்த்த மத்திய நிலைய உதவி பணிப்பாளர்**

**ஒலுவில் விசேட நிருபர்**



அம்பாறை மாவட்டத்தில் நிலவும் வரட்சியினால் 05 ஆயிரத்தி 426 குடும்பங்களைச் சேர்ந்த 18 ஆயிரத்தி 635 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம்.றியாஸ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு மாவட்ட செயலாளர் ஜே.எம்.ஏ. டக்ளஸின் ஆலோசனைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் வரட்சியினால் கூடுதலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வரட்சியினால் கால்நடைகள் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதோடு கால்நடைகளுக்கு குடிநீர் வழங்குவதற்கும் சம்மந்தப்பட்ட பிரதேச கால்நடை வைத்தியதிகாரிகள் தகவல்களை வழங்கும் பட்சத்தில் கால்நடைகளுக்கு குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் 2,754 குடும்பங்களைச் சேர்ந்த 9,201 பேரும், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் 1189 குடும்பங்களைச் சேர்ந்த 3988 பேரும், லகுகல பிரதேச செயலாளர் பிரிவில் 26 குடும்பங்களைச் சேர்ந்த 96 பேரும் , அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் 1457 குடும்பங்களைச் சேர்ந்த 5,350 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு குடிநீர் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு பிரதேச செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கனினூடாக, குடிநீர் பௌஸர் மூலம் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருவதாகவும், மேலும் தேவைப்படும் பட்சத்தில் மேலதிகமாக குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

# புதிய உறுப்பினராக சத்திய பிரமாணம்



**மருதமுனை தினகரன் நிருபர்**

கல்முனை மாநகர சபைக்கு அகில இலங்கை மக்கள் காங்கரஸ் கட்சியின் புதிய உறுப்பினராக மருதமுனையைச் சேர்ந்த ஏ.எச்.அப்துல் மூாஹிர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.எம்.ஜமீல் முன்னிலையில் இவர் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் கல்முனை மாநகர சபை உறுப்பினராக கடமையாற்றிய பி.எம்.ஷிபான் இராஜினாமாச் செய்ததையடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவில் 400 கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்படுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிற்குபட்ட எருவில் கிராமத்தில் கிடைக்கப்பெற்ற தகவலொன்றின் அடிப்படையில் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் வழிகாட்டலில் மேற்கொள்ளப்பட சுற்றிவளைப்பின்போது குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைதான நபர் களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# மட்டு. மாநகர பொது மயானங்கள் துப்பரவு

**மட்டக்களப்பு விசேட நிருபர்**

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பொது மயானங்களின் தூய்மையைப் பாதுகாக்கும் நோக்கில் அவற்றைத் துப்புரவு செய்யும் பணிகள் ஞாயிற்றுக்கிழமை (08) நடைபெற்றன.

மாநகரசபை முதல்வர் தி.சரவணபவனின் தலைமையில், சின்ன ஊறணி பொது மயானமும் கல்லடி உப்போடை இந்து மயானமும் துப்புரவு செய்யப்பட்டன.

சின்ன ஊறணி பொது மயானத்தை மாநகர சுகாதாரத் தொழிலாளர்கள், சின்ன ஊறணி கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், கயல்வெளி இளைஞர் கழகத்தினர் மற்றும் சண்றைஸ் விளையாட்டுக் கழக அங்கத்தினர்கள் கலந்து கொண்டு துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர்.

இதேவேளை கல்லடி 10 உப்போடை இந்து மயானத்தை கல்லடி பேச்சியம்மன் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் சமூக ஒன்றியங்களின் அங்கத்தினர்கள் இணைந்து கழிவுகளை முகாமைத்துவம் செய்தனர்.





அட்டாளைச்சேனை சம்புநகர் அல்மினா வித்தியாலயத்தில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை இணைக்கும் வித்தியாரம்ப நிகழ்வு வியாழக்கிழமை (05) நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலைன் அதிபர் எம்.ஐ.எம்.றியாஸ் கலந்து கொண்டு வித்தியாரம்ப நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் அப்துல் ஹை ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர். படம்: ஆலம்குளம் தினகரன் நிருபர்

# நகர்வலம்



# நெருக்கடி நிலையில் ஆட்சியை பொறுப்பேற்க எவரும் தயாரில்லை

## பொறுப்பேற்க முன்வந்தால் அமைச்சுப் பதவிகளை கைவிட தயார்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் பொறுப்பு 225 பேருக்கும் உள்ளது எனவும் ஆனால் யாரும் இந்த நெருக்கடி நிலையில் ஆட்சியை பொறுப்பேற்கத் தயாரில்லை எனவும் மக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மகாநாயக்க தேரர்கள், பேராயர் மற்றும் நீதித் துறையினரின் வேண்டுகோளை ஏற்று இந்த நாட்டை பொறுப்பேற்க எவரும் தயாராக உள்ளனரா? அவ்வாறாயின் நாம் எமது அமைச்சுப்பதவிகளை கைவிடவும் தயார் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பிரதமர் பதவியை எதிர்க்கட்சித் தலைவரும் நிதியமைச்சர் பதவியை அனுரகுமார திசாநாயக்கவும் ஏற்கட்டும். நாமும் அதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தத்தமது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயல்படுவோர் நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையில் நாட்டை பொறுப்பேற்க தயாரில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.பாராளுமன்றத்தில் நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பில் இடம்பெற்ற விவாதத்தின்போதே மக்கள் பாதுகாப்பு அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நாட்டை ஆண்ட அனைத்து அரசாங்கங்களின் பாவங்களைத் தான் தற்போது நாம் சுமக்க நேரிட்டுள்ளது.

சபையில் உரையாற்றும் சிலர் நிதி அமைச்சரின் உரைக்கு தவறான அர்த்தங்களை புகட்டுகின்றனர்.

பேராசிரியர்களும் கலாநிதிகளும் தற்போதைய இளைஞர்களுக்கு தவறானவற்றை கற்பிப்பதையே காண முடிகிறது. நெருக்கடிகளை அதிகரிக்கும் விதத்திலேயே அவர்கள் செயற்படுகின்றார்கள்.அவ்வாறு அவர்கள் செயற்படுவதன் மூலம் நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு கிடைக்குமானால் அல்லது டொலர் கிடைக்குமானால் பரவாயில்லை.

சபையில் பேசும்போது சர்வ கட்சி அரசாங்கம் அமைத்து நாட்டின் நெருக்கடி நிலைக்கு தீர்வு காணுமாறு மகாநாயக்க தேரர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் .பேராயர் வேண்டுகோள் விடுத்துள்ளார். சட்டத்தரணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என எதிர்க் கட்சியினர் கூறுகின்றனர். அதற்கு யார் விருப்பம் தெரிவித்துள்ளார்கள்?

எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது அனுரகுமார திசாநாயக்கவோ அதற்கு ஏன் இணங்கவில்லை? இவர்கள் எவருக்கும் அதில் விருப்பம் கிடையாது என்பதே உண்மை. தற்போதைய நெருக்கடியில் எவரும் நாட்டை பொறுப்பேற்க தயாரில்லை.நாட்டைப் பொறுப்பேற்குமாறு ஜனாதிபதியும் பிரதமரும் பகிரங்க வேண்டுகோள் விடுத்தனர். சிறப்பாக நாட்டை முன்னெடுத்துச் செல்பவர்கள் இருந்தால் நாமும் இந்த அமைச்சுப் பதவிகளையும் துறக்கத் தயார்.

அதற்கு எவரும் தயாரில்லை அவர்களது தேவை நாட்டை மேலும் நெருக்கடிக்குள் தள்ளுவதே.

தற்போதைய நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்கு பாராளுமன்றத்தில் உள்ள 225 பேருக்கும் பொறுப்புகள் உள்ளன. நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்க வேண்டும். நாம் அமைச்சுப் பதவிகளை துறக்கத் தயார். எதிர்க்கட்சித் தலைவருக்கு பிரதமர் பதவி வழங்க முடியும் அனுரகுமார திசாநாயக்க வந்தால் நிதியமைச்சர் பதவி வழங்க முடியும் நாம் நாட்டு மக்களுக்கு திறந்த மனதுடன் செயற்படுவதற்கு தயாரா என கேட்க விரும்புகின்றேன். என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# முந்தல் ஸ்ரீ கல்யாண முருகன் ஆலய வருடாந்த உற்சவம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

முந்தல் கருங்காளிச்சோலை அருள்மிகு ஸ்ரீ கல்யாண முருகன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் (07) கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.



சர்வதேச இந்து மத குரு பீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியாரின் அருளாசியுடன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மாதவ ரவிச்சந்திர குருக்கள் தலைமையில் மஹோற்சவம் நடைபெற்றது. நேற்றுக் காலையில் நடைபெற்ற வசந்த மண்டப பூஜையடுத்து உற்சவ மூர்த்திகள் வெளி வீதி வந்து வெளிக் கொடியேற்றமும், உள்கொடியேற்றமும் நடைபெற்றது.

அத்துடன், கொடிக் கம்பத்திற்கு பால் அபிஷேகமும் நடைபெற்றது.

மேற்படி மஹோற்சவம் தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளன. இதில் பிரதான உற்சவங்களான வேட்டைத் திருவிழா 13 ஆம் திகதியும் சப்பரத் திருவிழா 14 ஆம் திகதியும் தேர்த் திருவிழா 15 ஆம் திகதியும் தீர்த்தோற்சவம் 16 ஆம் திகதியும் திருக்கல்யாணம் 17 ஆம் திகதியும் மற்றும் சுவாமி ஊர்வலம் 18 ஆம் திகதியும் இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# இராணுவ சிப்பாயின் வீட்டில் புதைக்கப்பட்டிருந்த ரீ56

## துப்பாக்கி, வெடிபொருட்கள் மீட்பு; மனைவியும் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கஹட்டகஸ்திகிலிய பழுகஸ்வெவ பிரதேசத்தைச் சேர்ந்த இராணுவ சிப்பாய் ஒருவரின் வீட்டுத்தோட்டத்தில் புதைக்கப்பட்டிருந்த ரீ 56 ரக துப்பாக்கி உள்ளிட்ட வெடி பொருட்களுடன் பெண் ஒருவரையும் கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

கெப்பித்திகொல்லாவ ஊழல் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றிற்கமைய மேற்கொள்ளப்பட்ட தேடல் நடவடிக்கையின் போது துப்பாக்கி உள்ளிட்ட வெடி பொருட்களை கண்டு பிடித்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

சந்தேக நபராண பெண்ணின் கணவர் இராணுவ சிப்பாய் என்பதுடன் துப்பாக்கி உள்ளிட்ட வெடி பொருட்களை கைப்பற்றும் போது சிப்பாய் வீட்டுக்கு வெளியில் சென்றிருந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

வீட்டுத்தோட்டத்தின் முன்னால் சூசகமான விதத்தில் ரீ 56 ரக துப்பாக்கி ஒன்றும் 56 ரக 3 மெகசின்கள், 08 ஜெலிக்னைட் கூறு, ரீ 56 ரக 184 ரவைகள், 11 டெனட்டர் ,02 வெற்று ரவைகள் மற்றும் 33 அடி நீளமுடைய சேவை நூல் என்பனவைகளை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

ஏதோ ஒரு குற்றச்செயலை புரிவதற்காக இந்த ஆயுதம் உட்பட வெடிபொருட்களை தன் வசம் வைத்திருக்ககூடும் என பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் ஊழல் குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# வீதி விபத்தில் சிக்கிய; கற்பிட்டி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் அக்மல் காலமானார்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம், பாலாவி – கற்பிட்டி பிரதான வீதியின் தளுவ பகுதியில் கடந்த திங்கட்கிழமை (02) இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த கற்பிட்டி பிரதேச சபையின் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் முஹம்மட் அக்மல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற திங்கட்கிழமை இரவு குறித்த பிரதேச சபை உறுப்பினர் பயணித்த மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டியொன்றுடன் மோதியதில் இந்த விபத்து நடைபெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த பிரதேச சபை உறுப்பினரை அங்கிருந்தவர்கள் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக அன்றிரவே கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இவ்வாறு கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பிரதேச சபை உறுப்பினர் மீண்டும் புத்தளம் தள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் புதன்கிழமை (03) இரவு சிகிச்சை பலனின்றி இவர் உயிரிழந்துள்ளார்.

## புரவலர் புத்தகப்பூங்காவின் 41வது வெளியீடு



புரவலர் புத்தகப் பூங்காவின் 41வது வெளியீடான, மறைந்த கவிஞர் (மர்ஹூம்) கலாபூஷணம் எம்.பி.சிறாஜ்டீனின் முதலாவது கவிதை தொகுதியான "இன்னும் திருந்தவில்லை" நூல்கள் கையளிக்கும் நிகழ்வு புரவலரின் இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை (8) காலை நடைபெற்ற போது, நூலாசிரியரின் புதல்வர் எஸ்.எம். றம்சியிடம் புரவலர் வழங்கி வைப்பதையும் தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர், தொகுப்பாசிரியர் கவிஞர் மேமன் கவியும் உடன் காணப்படுகின்றனர்.

# இவ்வருட பொசன் பண்டிகை தந்திரிமலை புனித பிரதேசத்தில் ஏற்பாடுகள் பூர்த்தி

**திறப்பனை தினகரன் நிருபர்**

வரலாற்றுச் சிறப்புமிக்க தந்திரிமலை புனிதப் பிரதேசத்தில் இவ்வருட பொசன் பண்டிகைக்கு ஏற்பாடு செய்யும் விசேட கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

தந்திரிமலை விகாரையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர, பொசன் பிங்கம் குழுவின் தலைவர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் இவ்வருட பொசன் பிங்கம் எதிர்வரும் ஜூன் மாதம் 13, 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் இந்த புனித இடத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முந்தைய ஆண்டுகளைப் போலவே, பொது வசதிகள் மற்றும் உட்கட்டமைப்புகள் மற்றும் பக்தர்களுக்கு தேவையான உணவு மற்றும் பானங்கள் ஆகியவற்றை வழங்குவதற்கு இம்முறை பல்வேறு நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

இதனுடன் இம்முறை வரும் பொசன் பண்டிகையை சிறப்பாக நடத்துவதற்கு தானும் தனது ஊழியர்களும் பூரண ஆதரவை வழங்குவதாகவும் அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்தார்.

மஹவிலச்சிய பிரதேச செயலாளர் மஞ்சரி சி. சந்திரதாச, உதவிப் பிரதேச செயலாளர் ஹாஷினி யாசரா மற்றும் பிரதேசத்தில் உள்ள அரச நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் குழு, மாவட்ட பௌத்த விவகாரப் பிரிவினால் விழாக்கள் இம்முறை ஒருங்கிணைக்கப்பட்டு நடை முறைப்படுத்தப்படவுள்ளன.

# தங்காலையில் டெங்கு நோய் தீவிரம்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

தங்காலை சுகாதார வைத்திய அதிகாரி கோட்டப் பிரிவில் டெங்குநோய் பரவி வருவதாக சுகாதார அதிகாரிகள் (08) தெரிவித்தனர்.

தங்காலை முஸ்லிம் வீதியில் 11 நோயாளர்களும், பொலம்மாருவவில் 06 பேரும், குடாவெல்லவில் 07 பேரும், தங்காலை கலால் வரி திணைக்களஅதிகாரிகள் இருவருமாக மொத்தம் 26 பேர் டெங்கு தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேற்படி பிரதேசங்களை சிரமதானம் மூலம் துப்புரவு செய்து மக்களை தெளிவூட்டும் நடவடிக்கைளை சுகாதார அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர்.

# க.பொ.த சா/த பரீட்சை இலவச கருத்தரங்கு

**(வெலிகம தினகரன் நிருபர்)**

இம்முறை க. பொ. த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி 8வது வருடமாக வெலிகம பத்ர் பௌண்டேஷன் ஏற்பாட்டிலான கல்விக் கருத்தரங்கு நேற்று முன்தினம் 07ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு இம்மாதம் 16ஆம் திகதி வரை வெலிகம அறபா தேசிய பாடசாலை வெபா மண்டபத்தில் காலை 8.30 முதல் மாலை 4.30 வரை நடைபெற்று வருகிறது.

இஸ்லாம், தமிழ், வரலாறு, விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கே விசேட தேர்ச்சி பெற்ற பாட ஆசிரியர்களினால் நடாத்தப்பட்டு வருகிறது. மேலும் கையேடுகளும், மாதிரி வினாப்பத்திரங்களும் பங்குபற்றும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தென் மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இக்கருத்தரங்குகளில் கலந்து கொண்டு வருவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# ஜனாதிபதி விருதுக்கு புத்தளம் மாவட்டத்திலிருந்து 11 மாணவர்கள் தெரிவு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

சுற்றாடல் முன்னோடி ஜனாதிபதி விருதுக்காக புத்தளம் மாவட்டத்திலிருந்து இந்த வருடம் (2022) 11 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட சுற்றாடல் முன்னோடி ஆணையாளர் ஏ.எச்.எம்.எம்.ஷாபி தெரிவித்துள்ளார்.



கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையிலிருந்து 06 மாணவர்களும், பள்ளிவாசல் துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து 05 மாணவர்களும் தெரிவாகியுள்ளார். இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை அண்மையில் ஜனாதிபதி செயலகம், கல்வி அமைச்சு மற்றும் சுற்றாடல் அமைச்சு என்பன இணைந்து கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அநுராதபுரம் மாவட்டத்தில்; கடந்த 4 மாதங்களில் 39 பேர் விபத்துகளில் மரணம்

**( கல்நேவ தினகரன் விசேட நிருபர் )**

அநுராதபுரம் மாவட்டத்தில் இந்த வருடத்தில் கடந்த நான்கு மாதங்களில் ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 30 வரையிலானகாலப் பகுதியில் இடம்பெற்ற 37 வீதி விபத்துக்களில் 39 பேர் மரணமடைந்துள்ளதாக அநுராதபுரம் கோட்ட பிரிவு மோட்டார் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.மொகம்மட் நியாஸ் தெரிவித்தார். கடந்த ஏப்ரல் மாதத்தில் மட்டும் இடம்பெற்ற ஆறு வீதி விபத்துக்களில் ஏழு பேர் மரணமடைந்துள்ளனர். அதில் சிங்கள,தமிழ் புதுவருட தினத்தில் தமுத்தேகம பொலிஸ் பிரிவில் பெல்லங்கடவல பிரதேசத்தில் மோட்டார் கார் ஒன்றுடன் மோதி 13,14 வயதுடைய சிறுவர்கள் இருவர் மரணமடைந்துள்ளனர். அத்தோடு கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது இந்த வருடம் சிங்கள தமிழ் புதுவருட தினங்களில் அதி குறைந்த வீதி விபத்துக்கள் இடம் பெற்றுள்ளதுடன் குறைந்த தொகையினர் மரணமடைந்துள்ளனர் எனவும் மேலும் அவர் தெரிவித்தார்.



பேருவளை சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் ஈதுல் பித்ர் பெருநாள் தொழுகை (03) நடைபெற்றது. இதில் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். றிழ்வான் (நளீமி) ஜும்ஆ பிரசங்கம் நிகழ்த்துவதையும் கலந்து கொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். (படம்: பேருவளை விசேட நிருபர்)

## பிறந்த நாள் நிகழ்வில்

# போதைப்பொருள் பாவித்த 09 பேர் கைது

## நீர்கொழும்பில் சம்பவம்

**( நீர்கொழும்பு தினகரன் நிருபர் )**

பிறந்தநாள் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு போதைப் பொருள் பாவித்த 9 பேரை நீர்கொழும்பு வலயக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் அதிகாரிகள் கைது செய்துள்ளனர் . நீர்கொழும்பு வலயக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் கிஹான் மனோஹரவுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் மேற்படி நபர்களை பொலிஸார் சுற்றி வளைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர் .

நீர்கொழும்பு பிரதேசத்தில் அமைந்துள்ள ஓய்வு கால விடுதியொன்றில் (ரெஸ்ட் ஹவுஸில் ) தனது சக திருமணமான 34 வயதுடைய நண்பியின் பிறந்த நாள் நிகழ்வில் கலந்து கொண்டு போதைப் பொருள் பாவித்த போதே பொலிஸார் மேற்படி நபர்களை கைது செய்துள்ளனர்

குறித்த சந்தேக நபர்களிடம் ஹெரோயின் 9 கிராம் மற்றும் 350 மில்லி கிராம் , ஐஸ் போதை வஸ்து 1 கிராம் உட்பட ஒரு தொகை கஞ்சா சுருட்டுக்கள் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் . கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 20 தொடக்கம் 40 வயதுகளுக்கு இடைப்பட்ட வயதுகளையுடைய நபர்கள் எனவும் , இவர்களில் 3 பெண்கள் மற்றும் 6 ஆண்கள் அடங்குவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர் .




## மாணிக்கக்கல் அகழ்வால் கால்வாய் சேதம்

**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை மாவட்டத்தில் லக்கல வில்கமுவ பிரதேசங்களில் இடம் பெற்றுவரும் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு நடவடிக்கை காரணமாக இப்பிரதேசத்தில் உள்ள நீர் பாசன கால்வாய் பலவற்றில் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக விவசாய அமைப்புகள் புகார் செய்து வருகின்றனர்

நீர் பாசன கால்வாய் பகுதி அமைந்துள்ள இடங்களில் இடம் பெற்றுவரும் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு நடவடிக்கை காரணமாக இப்பிரதேசத்தில் உள்ள ஹத்ததோட அமுன என்ற நீர்ப்பாசன கால்வாய்க்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். நீர் பாசன கால்வாய் அமைக்கப்பட்டுள்ள பகுதிக்கு இவ்வாறு ஏற்படும் சேதம் காரணமாக நீர்ப்பாசன வசதியை உரிய முறையில் தமது விவசாய நிலங்களுக்கு பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது, சுற்றாடலுக்கு பாரிய பாதிப்புகள் ஏற்பட்டு வருவதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டி வருகின்றனர்

எனவே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நீர்பாசன கால்வாய்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இப் பிரதேச விவசாய அமைப்புக்களினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

## தனியார் வசமுள்ள பசளை விநியோகத்தை அரசு பொறுப்பேற்க நடவடிக்கை

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

**அமைச்சர் ஜானக வக்கும்புர**

தனியாருக்கு இரசாயன பசளை இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டதன் மூலம் பசளை வகைகள் அதிக விலைகளில் விற்கப்படுவதாகவும் இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக புகார் கிடைத்துள்ளது. அதனால் இரசாயன பசளை வகைகளை அரசாங்க பசளை நிறுவனங்கள் மூலம் இறக்குமதி செய்து விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சர் ஜானக வக்கும்புர நேற்று தெரிவித்தார்.

விவசாயிகள் எதிர்கொண்டு வரும் நெருக்கடிகளுக்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து நேற்று எம்பிலிபிட்டியவில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில், தனியார் பசளை நிறுவனங்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளை பயன்படுத்தி விவசாயிகள் தற் போது எதிர்கொண்டுள்ள கஷ்டமான நிலைமைகளை கருத்தில் கொள்ளாது பசளை வகைகளின் விலகளை அதிகரித்து விற்கின்றன. இதனை அனுமதிக்க முடியாது. இதனா ல் அரச நிறுவனங்கள் மூலமும் இவ ற்றை இறக்குமதி செய்து விநியோகிக்க தீர்மானித்துள்ளோம்.

மேலும் பூச்சிகளை பூஞ்சை கொல்லிகளை இறக்குமதி செய்வதற்கு நடைமுறைப்படுத்தப்பட்ட பங்கீட்டு முறை திட்டத்தையும் நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.

## வெளிநாடுகளில் தொழில் புரிவோரது உழைப்பை டொலர் மூலம் உள்வாங்க நடவடிக்கை எடுப்பதே சிறந்தது

**(அக்குறணை குறூப் நிருபர்)**

**பொருளியல் துறை பேராசிரியர் ஆனந்த ஜயவிக்ரம**

புதிய வரவு செலவுத்திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டு புதிய வரி அதிகரிப்பை மேற்கொண்டால் தற்போதுள்ள வரிகள் 50 முதல் 75 சதவீதம் அதிகரிக்கும். அது நாட்டு மக்களால் தாங்கிக் கொள்ள முடியாது போகும். எனவே இயன்றவரை வெளிநாடுகளில் தொழில் புரிபவர்களது உழைப்பை டொலர்கள் மூலம் உள்வாங்க நடவடிக்கை எடுப்பதே சிறந்ததாகும் என்று பேராதனைப் பல்கலைக்கழக பொருளியல் துறை பேராசிரியர் ஆனந்த ஜயவிக்ரம தெரிவி'த்தார்.

கண்டியில் வைத்து அவர் ஊடகங்களுக்கு இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது

தற்போது மத்திய வங்கியில் இருக்கும் ஒதுக்கு நிதி 50 மில்லியன் டொலர் என்று குறிப்பிட்டாலும் அதனை விடக் குறைவாக அது இருக்கலாம். இதன் காரணமாக அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்படலாம். இதனால் ஐ.எம்.எப் போன்ற சர்தேச நிறுவனங்கள் இலங்கையின் நிதி வாக்குறுதிகளை நம்பாது உதாசீனம் செய்யும் நிலைக்கு நாடு தள்ளப்படலாம்.

2019 முதல் தமது வர்த்தக நண்பர்களுக்கு அரசு வழங்கிய வரிச்சலுகைகளை நிறுத்தி மீண்டும் படிப்படியாக அதனை அதிகரிப்பது நல்லது. ஆட்சியாளர்கள் தேவையற்ற செலவினங்களை குறைப்பதை விட்டு புதிய வரிகளை கொண்டு வருவது பொருத்தமற்றது.

வழமைபோல் திடீர் முடிவுகளை மேற்கொள்ளும் செயற்பாடாக வரி அதிகரிப்பு ஆகிவிடும்.

## குளவி கொட்டுக்கு 9 தொழிலாளர்கள் இலக்காகி வைத்திய சாலையில் சிகிச்சை

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

பொகவந்தலாவ மோரா மேல் பிரிவு தோட்டத்தில் தேயிலை மலையில் தேயிலை கொழுந்து பறித்து கொண்டிருந்த 09 பெண் தொழிலாளர்கள் குளவி கொட்டுக்கு உள்ளாகி பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் (07) காலை 8.30 மணியளவில் இடம் பெற்றதாக காயங்களுக்கு உள்ளான தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

மரம் ஒன்றில் இருந்த குளவி கூடு கலைந்து வந்து தொழிலாளர்களை தாக்கியுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

காயங்களுக்கு உள்ளான ஒன்பது பெண் தொழிலாளர்களும் பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

## கீரகல தமிழ் வித்தியாலயம் வலைப்பந்தாட்ட போட்டியில் முதலிடம் பெற்று சாதனை

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி கல்வி வலயத்தின் கீரகல தமிழ் வித்தியாலய வலைப்பந்தாட்ட அணி குருவிட்ட கல்வி கோட்டத்தில் முதலிடத்தை பெற்று அனைத்து தரப்பினரதும் பாராட்டைப் பெற்றுள்ளது.

சகல பௌதீக வளங்களையும் மற்றும் விளையாட்டுத்துறைக்கு அவசியமான அனைத்து வசதிகளையும் கொண்ட பிரபலமான தேசிய பாடசாலைகள் மற்றும் மத்திய கல்லூரிகள், மஹா வித்தியாலய அணிகளுடன் போட்டியிட்டு இச்சிறுமிகள் இவ்வெற்றியை நிலைநாட்டியுள்ளனர்.

இதனை இப்பாடசாலையின் சகல துறை வெற்றிகளுக்கும் தலைமைத்துவம் வழங்கி வரும் பாடசாலை அதிபர் ஜே.டேமியன் தெரிவித்தார்.



வெற்றிபெற்ற இவ்வணியின் பயிற்றுவிப்பாளரையும் அணி வீராங்னைகளையும் படத்தில் காணலாம். டபிள்யூ. டிலக்ஷானி, வீ.டியானி, எஸ். அபிநயா, எஸ்.தனுஷிகா, எஸ். ஜீ ஹஜந்தி, டபிள்யூ.ஷானிகா, சுரங்கி எஸ்.டிலானி, கே.மெக்ஷி காவிந்யா ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

## சாமிமலையில் ஆலயம் உடைத்து கொள்ளை

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள சாமிமலை மல்லியப்பு தோட்ட முத்துமாரி அம்மன் ஆலயத்தில் 7 ம் திகதி இரவு தங்க நகை மற்றும் உண்டியல் திருடப்பட்டுள்ளது. கடந்த 8 ம் திகதி காலை இவ்வாறு மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் புகார் ஒன்று பதிவு செய்யப்பட்டதை அடுத்து மஸ்கெலியா பொலிஸ் பொறுப்பதிகாரி எச். யசரத்ன பண்டாரவின் பணிப்புரையில் உதவி அதிகாரி செனவிரத்ன சார்ஜன்ட் ரெங்கரன் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று அங்கு பார்வை இட்டனர்.ஆலய பரிபாலன சபையினர் பொலிசாருக்கு தகவல் வழங்கிய போது அம்மன் சிலையில் போடப்பட்டிருந்த தாலியுடன் செயின் 4 அரை பவுண் தங்க ஆபரணங்கள் மற்றும் உண்டியல் காணாமல் போய் உள்ளது என வாக்குமுலத்தில் பதிவு செய்து உள்ளனர். உண்டியல் பெட்டியை ஆலயத்திற்கு அருகில் உடைத்து பணத்தை எடுத்து விட்டு வீசி எறிந்து சென்றதை பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். இது தொடர்பாக வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



## கல்வித்திட்டங்களிலே தான் நாட்டின் எதிர்காலம் தங்கி இருக்கிறது

**(அக்குறணை குறூப் நிருபர்)**

**அமைச்சர் ரமேஷ் பத்திரன**

நாம் மேற்கொள்ளும் சிறந்த கல்வித்திட்டங்களிலே தான் நாட்டின் எதிர்காலம் தங்கி இருக்கிறது என்று பெருந்தோட்டக் கைத் தொழில் மற்றும் கல்வி அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

கண்டியில் நடந்த வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது

நாம் மேற்கொள்ளும் சிறந்த கல்வித்திட்டங்களில் வெற்றியின் அடிப்படையில் நாட்டின் எதிர்காலம் தங்கி இருப்பதால் கல்விக்காக மேற்கொள்ளப்படும் முதலீடுகள் முறையாக நிர்வகிக்கப்பட வேண்டும். அவ்வாறு படிப்படியாக அவை இதுகால வரை மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. கடந்த 74 வருட கால ஆட்சியில் கல்வியில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக பாடசாலைகளின் எண்ணிக்கையை மட்டும் எடுத்துக்கொண்டால் அவை சுமார் 3000 தில் இருந்து இன்று 10 000 வரை அதிகரித்துள்ளது. மேற்படி வளர்ச்சி பௌதீக ரீதியான கட்டிடங்களின் எண்ணிக்கை மட்டுமல்ல.அதற்கு சமாந்தரமாக மானிட வளங்கள் உட்பட இன்னோரன்ன விடயங்கள், தொழில் நுட்பத் துறை உட்பட பல விடயங்கள் வளர்ச்சி அடைந்துள்ளன. கல்வியில் தொழில் நுட்ப வளர்ச்சியானது 4வது கைத் தொழில் புரட்சிக்கு ஈடுகொடுக்கக் கூடியதாக அமைய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.



## கொட்டகலையில் பயிற்சி

**ஹட்டன் விசேட நிருபர்.**

பெண் தலைமைத்துவம் குறைந்துள்ளதன் காரணமாக பெண்களின் உரிமைகள் மற்றும் அவர்களின் தேவைகள் இன்று புறக்கணிக்கப்பட்ட நிலையே காணப்படுகின்றன. குறிப்பாக எமது நாட்டில் 55 சதவீத பெண்கள் காணப்பட்டாலும் அவர்களின் 5 சதவீதமே சட்டமியற்றும் பாத்திரத்தினை ஏற்றுள்ளனர். இவ்வாறு சென்றவர்கள் கூட சாதாரண குடும்பங்களில் இருந்து சென்றவர்கள் அல்ல. அவர்களின் பின்னணி காரணமாகவே அவர்கள் அந்த இடத்திற்கு வந்துள்ளனர்.

இந்நிலையில் மலையகப்பகுதியில் தலைமைத்துவ பாத்திரங்களில் பெண்களை வலுப்படுத்தும் நோக்கில் பெண் தலைமைத்துவ பயிற்சி செயலமர்வு ஒன்று பிரிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொட்டகலை பிரிடோ நிறுவனத்தின் அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது. குறித்த செயலமர்வில் தலைமைத்துவ பாத்திரங்களை பெண்கள் ஏற்காததன் காரணமாக இவர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

அரசியல் ரீதியாக இவர்களின் பங்களிப்பு குறைவாக காணப்படுவதனால் இன்று பெண்களுக்கு ஏற்படும் அசாதாரண நிலவரங்களின் போது அவர்களுக்காக போதியளவு குரல் கொடுக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் இதனால் மலையகத்தில் மாத்திரமன்றி நாடு முழுவதிலும் பெண்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த வண்ணம் இருப்பதாகவும் இதன் போது சுட்டிக்காட்டப்பட்டன.





இங்கிரிய, றைகம், கீழ்ப்பிரிவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் ஸ்ரீ இராமர் மன்றம் நடத்திவரும் விக்னேஷ்வரா அறநெறி பாடசாலையில் திருநாவுக்கரசரின் குருபூஜை அண்மையில் நடத்தப்பட்டது. இப்பாடசாலை 1993 ஆம் தொடக்கம் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது என அறநெறி பாடசாலை ஆசிரியை திருமதி ரஞ்சனி சுரேஷ் தெரிவித்தார்.

# எண்ணெய் விலை அதிகரிப்பால் சபாரி ஜீப் வண்டிகளின் சாரதிகளும் பாதிப்பு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்.**

அடிக்கடி எண்ணெய்யின் விலை அதிகரிக்கப்பட்டு வருவதினால் சபாரி ஜீப் வண்டிகளின் சாரதிகள் பாதிக்கப்பட்டு அவர்களது தொழில்களை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஜீப் வண்டிச் சாரதிகளும் தங்களது கட்டணங்களை அதிகரித்துள்ளனர். தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப்பாட்டிற்கு தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சேவைகளை வழங்கும்போது அவர்களிடமிருந்து டொலரினூடாக கட்டணங்களை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்பொழுதுள்ள நிலையில் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் பாரிய அளவில் குறைவடைந்துள்ளது.

# மக்கள் நலன் கருதி; அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி மீளப்பெற வேண்டும்

## ஆனந்தகுமார் வலியுறுத்து



நாடு பொருளாதார நிலையை சந்தித்திருக்கின்ற இன்றைய நிலையில் ஜனாதிபதி மக்கள் நலன்கருதி அவசரகாலச் சட்டத்தை மீள பெறவேண்டுமென இரத்தினபுரி மாவட்ட ஐ.தே.க அமைப்பாளர் எஸ். ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டம் நாட்டை பாதாளத்திற்கு இட்டுச்செல்லும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வரி குறைப்பு, இரசாயன உரத்துக்கான தடை என்பன நாட்டின் பொருளாதாரத்தை மிகவும் மோசமான நிலைக்கு தள்ளியுள்ளது. இதனால்தான் நாளுக்கு நாள் மக்கள் புரட்சி வெடித்துவருகிறது. நிபுணர்களுடன் கலந்துரையாடி தீர்மானங்களை எடுத்திருந்தால் இன்று இந்நிலை ஏற்பட்டிருக்காது.

போராட்டங்களை கட்டுப்படுத்த அவசரகாலச் சட்டத்தை கையில் எடுப்பது தீர்வாகாது. இதன்மூலம் மக்கள் போராட்டங்களை ஒருபோதும் கட்டுப்படுத்த முடியாது. அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கையை இழந்து வருகின்றனர். அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தி போராட்டங்களை கட்டுப்படுத்துகிறோம் என்ற போர்வையில் மக்களின் ஜனநாயக உரிமைகளையும் கருத்துச் சுதந்திரத்தையும் பறிக்க வேண்டாம். வாழ வழியில்லாதமையின் காரணமாகவே மக்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர். இங்கு அரசியல் கட்சிகளின் தலையீடுகள் இல்லை. ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச நாணய நிதியம் உட்பட பல நாடுகளில் இருந்து கிடைக்கபெறும் உதவிகளுக்கு ஜனாதிபதியின் தீர்மானம் பாதகமாக அமையக்கூடும் என்பதால் உடனடியாக அவசரகாலச் சட்டத்தை மீளப்பெற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜன்னல் உடைக்கப்பட்டு தங்க ஆபரணம் திருட்டு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கெக்கிராவ யகல்ல பகுதியில் அமைந்துள்ள முன்பள்ளி ஆசிரியைக்கு சொந்தமான வீட்டு ஜன்னல் உடைக்கப்பட்டு இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க தங்க ஆபரணம் திருடப்பட்டுள்ளதாக கெக்கிராவ பொலிசார் தெரிவித்தனர். சம்பவ தினத்தன்று தான் வீட்டை மூடிவிட்டு நகருக்கு சென்று மீண்டும் வீடு திரும்பி வந்து பார்த்த போது ஜன்னல் உடைக்கப்பட்டு இருந்ததாகவும் பின்னர் வீட்டின் அறைகளை பார்த்த போது அலுமாரி உடைக்கப்பட்டு தங்க ஆபரணங்களை திருடிச் சென்றுள்ளதாகவும் 46 வயது முன்பள்ளி ஆசிரியை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.


**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம்**

**(460 ஆம் அத்தியாயம்)**

**7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக் கொண்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் விபரங்கள் சம்பந்தமாக அச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் உரிமை மற்றும் நஷ்ட ஈட்டு பரீட்சைகள் 2022.05.10/13ஆகிய திகதி மஹவ பிரதேச சபை அலுவலகத்தில் என்னால் நடைபெறவுள்ளது என்பதை பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது. இக் காணிகளுக்கான உரித்துடையவர்கள் சமுகமளிக்கவும் மேலதிக விபரங்களுக்கு 2022.03.14 மற்றும் 2271/4 இலக்க அதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும். அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை நான் இத்தால் அறிவிக்கின்றேன்

| | | |
|---|---|---|
| மாவட்டம் | குருநாகல் | |
| பிரதேச செயலாளர் பிரிவு | மஹவ | |
| கிராம சேவகர் பிரிவு | 136 யந்திகம், 137 பமுனுகம், 138 இஹலகம, 139 பஹலகம | |
| **ஆரம்ப வரைபட இல** | **கிராமத்தின் பெயர்** | **துண்டு இல** |
| 3859 இல். பிற் சேர்க்கை இல 3, தாள் இலக்கம் 3 | தெல்னய்தாகம | 51,52,54-63,65,66,67,69,72,73, 75-80,82,83,84 வரை |
| 3670 இல் பிற் சேர்க்கை இல 2, தாள் இலக்கம் 2 | தெமடகொள்ள | 111-113,117, 118,122-124,128,130,131,132, 134,136 142,144,147,150,153,155,158, 159,162, 165 167,170,173,174,175,178-180,182,183 |
| பிற்சேர்க்கை இல.5, தாள் இலக்கம் 5 | இஹலகம | 337,338,342-344,348-350,353,354,357,360,364,367,370 ,372,375, 377-380,383 வரை |
| 3665 இல் பிற் சேர்க்கை இல-2 தாள் | முதியன் சேகெகம | 36,38-42,44,46,47,49,50, 51,54,57,58,59,61,62,65-68,72,79-82-87,92,89,91,95,98-101,103-106,109 வரை |

**பி.எம்.நதுன் ஆர் சம்பத்**
**பிரதேச செயலாளர்**

**பிரதேச செயலாளர், காரியாலயம், மஹவ**
**திகதி 2022.05.09**



**மக்கள் வங்கி பிராந்திய பிரதான காரியாலயம் அநுராதபுரம் தேவஹீவ, மக்குள்கஸ்வெவ, பியசிரி அரிசி ஆலை எனும் இடத்தில் அமைந்துள்ள திமிக்க சொத்தை (காணி, வீடு மற்றும் அரிசி ஆலை) விலைக்கு வாங்க முத்திரையிடப்பட்ட விலைமனுக் கோரப்படுகிறது**

**அளவு : ரூட் : 20, பர்: 07.75**

1. பிராந்திய முகாமையாளர் (அநுராதபுரம்) மக்கள் வங்கியினால் மேற்குறிப்பிடப்பட்ட சொத்தை விற்பனை செய்வதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனு கோரப்படுகிறது.
2. 2022.05.20ஆம் திகதி வரை (வேலை நாட்களில் மு.ப 9 மணி முதல் பி.ப 3 மணி வரையான நேரத்திற்குள் மீளச் செலுத்தப்படாத ரூபா 3000/= பணத் தொகையை கல்கிரியாகம கிளையின் நபர் அல்லாத கணக்கிலக்கம் 301-100118888888 கொண்ட கணக்கில் வைப்பிலிட்டு இல.75, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்த மக்கள் வங்கி பிராந்திய பிரதான காரியாலயம் அநுராதபுரம் பிராந்திய முகாமையாளருக்கு விலைமனு விண்ணப்பபடிவத்தை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அந்த படிவத்தின் ஊடாக மட்டுமே விலை விபரங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்
3. மீள் செலுத்தப்படும் ரூபாய் 50,000/= பெறுமதியான வைப்பு ஒன்றையும் மக்கள் வங்கியின் கல்கிரியாகம கிளையின் நபர் அல்லாத (கணக்கிலக்கம் 301-100118888888) வரவில் வைப்பில் இடப்பட்டு உரிய பற்றுச் சீட்டின் மூலப்பிரதியை விலைமனுக்கோரல் விண்ணப்பபடிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அந்தப் பணத்தொகையானது விலை மனுக்கோரலை உறுதிப்படுத்தியதன் பின்னர் தகுதியற்ற விலை மனுக்கோரல் செய்தவர்களுக்கு மீண்டும் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தெரிவுசெய்யப்பட்ட விலை மனுதாரர்கள் தமது விலைமனுவின் பெறுமதியில் 25% பணத்தொகையை விலைமனுவை ஏற்றுக் கொண்டதாக அறிவிக்கப்பட்ட கடிதத்தின் திகதி முதல் 10 தினங்களுக்குள் வைப்பிலிடுதல் வேண்டுமென்பதுடன் மிகுதி 75% முழுமையான பணத்தை மேற்படி விலை மனுவை ஏற்றுக் கொண்டதாக அறிவிக்கப்பட்ட கடிதத்தின் திகதியிலிருந்து 30 தினங்களுக்குள் வைப்பிலிடுதல் வேண்டும். விலைமனு தொடர்பிலான சகல செலுத்துகைகளும் கல்கிரியாகம கிளையின் நபர் அல்லாத கணக்கிலக்கம் 301-100118888888 எந்தவொரு மக்கள் வங்கி கிளையினூடாகவும் வைப்பிலிட முடியும்.
4. சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலை மனுக்கள் முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு அந்த உறையின் இடப்பக்க மேல் மூலையில் "தேவஹீவ, மக்குள்கஸ்வெவ, பியசிரி அரிசி ஆலைக்கான விலைமனு" என குறிப்பிடப்பட்டு இல:75 மைத்திரிபால சேனாநாயக்க மாவத்த மக்கள் வங்கி பிராந்திய பிரதான காரியாலயம், அநுராதபுரம், பிராந்திய முகாமையாளர் எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலின் மூலம் அனுப்புதல் வேண்டும். 2022.05.27 ஆம் திகதி பி.ப 2 மணிக்கு முன்னர் வருகை தந்து கையளிப்பதாயின் மேற்படி மக்கள் வங்கி பிராந்திய பிரதான காரியாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் விலை மனுக்கோரல் பெட்டியில் இடுதல் வேண்டும்.
5. 2022.05.26 ஆம் திகதி பி.ப 3 மணிக்கு மேற்படி இடத்தில் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் (அநுராதபுரம்) பெயரிடப்பட்ட விலைமனுக் குழு முன்னிலையில் முத்திரை இடப்பட்ட விலை மனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர்களுக்கு அல்லது அவர்களது அனுமதி பெற்ற பிரதிநிதிகளுக்கு அந்த சந்தர்ப்பத்தின்போது பங்குபற்ற முடியும்.
6. இந்த விலைமனுவிற்குரிய நிபந்தனைகள் மற்றும் நியமங்கள் விலைமனு விண்ணப்ப படிவங்களுடன் விநியோகிக்கப்படும்.
7. இந்த சொத்தானது தற்போதுள்ள நிலையிலேயே விற்பனை செய்யப்படுவதுடன் கொள்வனவாளர்கள் அவ்வாறு விலைக்கு வாங்குவதற்கு தயாராக விலைமனு பத்திரங்களை விலைக்கு வாங்குதல் வேண்டும். சொத்துக்கள் தொடர்பிலான மேலதிக விபரங்களை இல:75 மைத்திரிபால சேனாநாயக்க மாவத்த மக்கள் வங்கி பிராந்திய பிரதான காரியாலயம் அநுராதபுரம் பிராந்திய முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். தொலைபேசி 025-2223035 025-22234870 025-2222665

**பிராந்திய முகாமையாளர் - அநுராதபுரம்**
**மக்கள் வங்கி - பிராந்திய பிரதான காரியாலயம்**
**இல : 75 மைத்திரிபால சேனாநாயக்க மாவத்த,**
**அநுராதபுரம்.**

மக்கள் வங்கி PEOPLE'S BANK



IHRA UNIVERSITY OF COLOMBO

மனிதவள மேம்பாட்டு நிறுவகம்
கொழும்பு பல்கலைக்கழகம்

## பணிப்பாளர் பதவி வெற்றிடம்

மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் (IHRA) முகாமைச் சபை, 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க மனிதவள மேம்பாட்டுக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 5 (1) இன் படி 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் பிரிவு 24A (1) மற்றும் அதனைத் தொடந்த திருத்தங்களின் அடிப்படையில், கொழும்பு பல்கலைக்கழக மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்களை / பரிந்துரைப்புகளைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரர்கள் / பரிந்துரைக்கப்பட்டவர்கள் இலங்கையின் குடிமக்களாக இருக்க வேண்டும். மற்றும் 63 வயதிற்கும் குறைந்தவர்களாக இருக்க வேண்டும். வெற்றிகரமான விண்ணப்பதாரர் / பரிந்துரைக்கப்பட்டவர் நியமனம் செய்யப்பட்ட நாளில் இருந்து மூன்று வருட காலத்திற்கு அல்லது அவர் / அவள் தனது 65வது ஆண்டை நிறைவு செய்யும் வரை அந்தப் பதவியில் இருப்பார்.

IHRA என்பது கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட ஒரு நிறுவகமாகும். இது பட்டம், டிப்ளோமாக்கள் மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகளை நடத்த பல்கலைக்கழக மானிய ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் முதுகலை மற்றும் இளங்கலைப்பட்டங்களை வழங்குகிறது. மேலும் டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகளை நடத்துகிறது. IHRA மாணவர்கள் முக்கியமாக தற்போது பொது மற்றும் தனியார் துறையில் பணியாற்றுபவர்களாக உள்ளனர். இது ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவைகளிலும் ஈடுபடுகிறது.

பணிப்பாளர், நிறுவகத்தின் முழுநேர அதிகாரியாக இருப்பார். கல்வி மற்றும் நிர்வாகத் தலைவராக இருப்பார். அவர் / அவள் நிறுவனத்தின் கணக்கியல் அதிகாரியாகவும் இருப்பார். முன்னாள் அலுவலக உறுப்பினராகவும் கல்வி நிர்வாக ஆட்சிக் குழு தலைவராகவும் (இது நிறுவகத்தின் முகாமைச் சபையாகும்) வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறலைப் பேணுவது பணிப்பாளரது கடமையாகும். மேலும் கல்வித்தலைமையை வழங்குவதற்கும் இவரே பொறுப்பாக இருப்பார். நிறுவனத்திற்குள் ஒழுக்கத்தைப் பராமரிப்பதற்கும் பணிப்பாளரே பொறுப்பு. அவர் / அவள் நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களின் தேவைகளைப் பற்றிய புரிதலைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் நிதிகளைப் பெறவும் பல்கலைக்கழக நிறுவனம் மற்றும் தொழில் ஒத்துழைப்புகளையும் கல்வி விவகாரங்களில் சர்வதேச உறவையும் உருவாக்க முடியும்.

பணிப்பாளர் தனது அறிவுசார் மற்றும் நிர்வாகத் திறமை மூலம் நிறுவகத்தின் இலக்குகளை அடையக்கூடிய நபராக இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் / பரிந்துரைக்கப்பட்டவர் சிறந்த கல்வித்தகைமைகளைக் கொண்டவராக சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டவராக நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ குணங்கள் மற்றும் கொள்கை கொண்டவராக கொள்கைகள் பற்றிய தெளிவான புரிதலைக் கொண்டவராக, தொடர்பாடல் திறன் மிக்கவராக பணிப்பாளர் இருக்க வேண்டும்.

ஒரு பேராசிரியரின் சம்பளம் மற்றும் பதவிக்குப் பொருத்தமான பிற கொடுப்பவவுகளை இவர் பெறுவார்.

பின்வரும் ஆவணங்கள் விண்ணப்பங்கள் / பரிந்துரைகளுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(I) விண்ணப்பதாரர் / பரிந்துரைக்கப்பட்டவரின் சுயவிபரம் பிறந்த திகதி உட்பட, (பிறப்புச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட நகல் இணைக்கப்பட வேண்டும்)
(ii) நிறுவனத்தின் வளர்ச்சிக்கான நோக்க அறிக்கை
(iii) பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் அவர் / அவளின் சுருக்கமான முன்மொழிவுகள்
(iv) பரிந்துரையாக இருந்தால், பரிந்துரைக்கப்படுபவரிடமிந்து ஒப்புதல் கடிதம்
(v) மனிதவள மேம்பாட்டு நிறுவகம் தவிர்ந்த பொதுத்துறை, கூட்டாண்மைகள், சட்டவாக்க சபைகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் ஒரு விண்ணப்பதாரர் அவர் / அவள் பதவிக்கு நியமிக்கப்பட்டால் விண்ணப்பதாரர் / நியமனம் செய்யப்படலாமா என்பதைக் குறிக்கும் நிறுவனத் தலைவரின் கடிதம்.

செப்டெம்பர் 11, 2020 திகதியிடப்பட்ட UGC சுற்றறிக்கை எண் 7/2020 இல் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் அடிப்படையில் தேர்வு செயல்முறை இடம்பெறும். (சுற்றறிக்கை www.ugc.ac.lk இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்)

விண்ணப்பங்கள் / பரிந்துரைகள் முத்திரையிடப்பட்ட தபாலுறையில் இடப்பட வேண்டும், முகாமைச் சபை செயலாளர், இல. 275 மனிதவள மேம்பாட்டு நிறுகவம் பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு - 07 எனும் முகவரிக்கு மே 30, 2022 அன்று மாலை 3.00 மணிக்கு முன்பாக கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும். விண்ணப்பம் அடங்கிய .உறையின் இடது மூலையில் "பணிப்பாளர் பதவி" என்று குறிக்கப்பிடல் வேண்டும்.

இறுதித் திகதிக்குப்பின் பெறப்பட்ட விண்ணப்பங்கள் / பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

முகாமைச் சபை செயலாளர்,
மனிதவள மேம்பாட்டு நிறுவகம்,
கொழும்பு பல்கலைக்கழகம்.

மே 9 ஆம் திகதி 2022

N & G Ads



**இலங்கை துறைமுக அதிகாரசபை**

**காலி துறைமுக அபிவிருத்தித் திட்டத்திற்கான முதலீட்டு முன்தகைமைக்கான ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு**

**(IEOI No: SLPA/EOI/GPDP/2022-01)**

**ஆர்வ வெளிப்பாட்டினைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியை நீடித்தல்**

01. விண்ணப்பங்களை தயாரிப்பதற்கு ஆர்வமுடைய தரப்புகளால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க இந்தப் பத்திரிகையில் 2022 பெப்ரவரி 13 ஆம் திகதி மற்றும் 2022 ஏப்ரல் 3 ஆம் திகதிகளில் வெளியிடப்பட்ட விளம்பரத்தின் அட்டவணை பின்வருமாறு மேலும் திருத்தப்பட்டுள்ளது.

| | நிகழ்வு | முந்தைய நீடிப்புத் திகதி மற்றும் நேரம் | திருத்தப்பட்ட நீடிப்பு திகதி மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| a | ஆர்வ வெளிப்பாட்டு ஆவணத்திற்கான அழைப்பை வழங்கல் | 2022 பெப்ரவரி 9 ஆம் திகதி 10.00 மணி தொடக்கம் 2022 மே 5ஆம் திகதி 14.00 மணி வரை | 2022 பெப்ரவரி 9 ஆம் திகதி 10.00 மணி தொடக்கம் 2022 ஜூன் 6 ஆம் திகதி 14.00 மணி வரை | குறிப்பு – 1 |
| b | ஆர்வ வெளிப்பாட்டு ஆவணத்திற்கான அழைப்பை தெளிவுபடுத்துவதற்கு ஆர்வமுடைய தரப்புகளின் விண்ணபத்திற்கான இறுதித் திகதி | 2022 ஏப்ரல் 20 | 2022 மே 20 | |
| c | ஆர்வ வெளிப்பாட்டு ஆவணத்திற்கான அழைப்புக்கு தெளிவுபடுத்தலை வழங்க இலங்கை துறைமுக அதிகாரசபைக்கான இறுதித் திகதி | 2022 ஏப்ரல் 29 | 2022 ஜூன் 1 | |
| d | ஆர்வ வெளிப்பாட்டை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | 2022 மே 10 ஆம் திகதி 14.00 மணி | 2022 ஜூன் 9 ஆம் திகதி 14.00 மணி | குறிப்பு – 2 |
| e | ஆர்வ வெளிப்பாட்டை திறப்பது | 2022 மே 10 ஆம் திகதி 14.00 மணி | 2022 ஜூன் 9ஆம் திகதி 14.00 மணி | குறிப்பு – 2 |

02. ஆர்வ வெளிப்பாட்டு ஆவணத்திற்கான திருத்தங்கள் ஆவணங்களை ஏற்கனவே வாங்கிய அனைத்து தரப்புகளுக்கும் ஒரு பின்னிணைப்பு வடிவத்தில் வழங்கப்படும்.
03. ஆர்வமுடைய தரப்புகள் 2022 ஜூன் 6 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 10.00 – 16.00 மணிக்கு இடையே கட்டணம் இன்றி கீழுள்ள குறிப்பு – 1 இல் குறிப்பிடப்பட்டிருக்கும் முகவரியில் பின்னிணைப்புடன் (கள்) சேர்த்து ஆர்வ வெளிப்பாட்டு ஆவணத்தை பரீட்சிக்கலாம்.
04. மேல் வரையறுக்கப்பட்ட காலத்தில் இலங்கை ரூபா ஐம்பதாயிரம் (இ.ரூபா 50,000.00) (வரி உட்பட) மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கீழுள்ள குறிப்பு – 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து எந்த ஒரு ஆர்வமுடைய தரப்பினாலும் ஆர்வ வெளிப்பாட்டு ஆவணத்திற்கான அழைப்பின் முழுமையான தொகுதி ஒன்றை வாங்கலாம்.

**குறிப்பு – 1:**
தலைமை பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் மேம்பாடு), இலங்கை துறைமுக அதிகாரசபை, 45, லெய்டன் பஸ்டியன் வீதி, கொழும்பு 1, இலங்கை
தொ. இல. +94 (0) 112483456, தொலைநகல் இல. +94 (0) 112323055, மின்னஞ்சல் முகவரி: cepd@slpa.lk

**குறிப்பு – 2:**
தலைவர், அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தை குழு, துறைமுகங்கள் மற்றும் கப்பற் சேவைகள் அமைச்சு, இல. 19, சைத்யா வீதி, கொழும்பு 1.
ஆர்வ வெளிப்பாட்டை தயாரிப்பது மற்றும் சமர்ப்பிப்பதுடன் தொடர்புபட்டு ஆர்வமுடைய தரப்புகளினால் ஏற்படும் எந்த ஒரு செலவு அல்லது இழப்புக்கும் அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தை குழு அல்லது இலங்கை துறைமுக அதிகாரசபை பொறுப்பேற்காது.

**தலைவர்**
**அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தை குழு**

நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

நகர அபிவிருத்தி அதிகார சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**பேலியகொட புதிய மெனிங் சந்தைக் கட்டிடத்தொகுதியில் அமைந்துள்ள மலசலகூடத் தொகுதிகளை மாதாந்த வாடகை அடிப்படையில் பராமரித்து நடாத்திக் கொண்டு செல்லும் பொருட்டான செயற்பாட்டாளரைத் தெரிவு செய்தல்**

01. நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள பேலியகொட புதிய மெனிங் சந்தைக் கட்டிடத்தொகுதியில் அமைந்துள்ள மலசலகூட தொகுதியை ஐந்து (05) வருட காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் பராமரித்து நடாத்திக் கொண்டு செல்லும் பொருட்டான செயற்பாட்டாளரைத் தெரிவு செய்வதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இந்த மலசலகூடத் தொகுதிகள் சந்தைக் கட்டிடத்தொகுதியின் பல்வேறுபட்ட 03 இடங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

02. மலசலகூடத் தொகுதிக்கான அடிப்படை மாதாந்த வாடகை 250,000.00 ரூபாவாகும். செயற்பாட்டாளரைத் தெரிவு செய்தலானது இந்த அடிப்படை வாடகைப் பெறுமதியை விட அதிகமாக சமர்ப்பிக்கப்படும் விலைகளுக்கிடையில் அதிகூடிய பெறுமதியின் பிரகாரமாகும். தெரிவு செய்யப்படும் செயற்பாட்டாளர் அதிகார சபையுடன் வாடகை உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடல் வேண்டும். அவரால் சமர்ப்பிக்கப்படும் மாதாந்த வாடகைத் தொகையுடன் அத்தொகைக்குரித்தான வெட் வரியையும் கைச்சாத்திடும் நாள் முதல் இடைவிடாது ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும்.

03. இதில் ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் இயைபுடைய விபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்களை மீளளிக்கப்படாத 2,160.00 ரூபாவை (வரிகள் உட்பட) செலுத்தி பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'', 7வது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைப் பிரிவிலிருந்து 2022 மே மாதம் 09ஆம் திகதியிலிருந்து 2022 மே மாதம் 27ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையான காலத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். விலைமனுக்களைக் சமர்ப்பிக்கும் போது 150,000.00 ரூபா பிணைத் தொகையை அதிகார சபையின் நிதிப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். இந்த பிணைத் தொகை தகுதி வாய்ந்த செயற்பாட்டாளரைத் தெரிவு செய்ததன் பின்னர் விடுவிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டாளரால் மூன்று (03) மாத வாடகைக்குச் சமமான தொகையை குத்தகைக் காலத்தின் இறுதியில் மீளளிக்கப்படும் பாதுகாப்பு வைப்பாக அதிகார சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.

04. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் 2022 மே மாதம் 30ஆம் பி.ப. 2.00 மணிக்கு நிறைவுறும். விலைமனுக்களை முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட உறையினுள் இட்டு நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன் தலைவர், வருமானக் கேள்விச் சபை (கீழ் நிலை), நகர அபிவிருத்தி அதிகார சபை, 6ஆம் மாடி, ''செத்சிறிபாய'', பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மெனிக் சந்தைக் கட்டிடத்தொகுதி மலசலகூடத் தொகுதி'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்த உடனடுத்து பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'', 6ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவில் விண்ணப்பதாரரின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

06. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை பத்தரமுல்ல, 'செத்சிறிபாய', 7வது மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபை, பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 011-3049008)

**தலைவர்,**
**வருமானக் கேள்விச் சபை (கீழ் நிலை),**
**நகர அபிவிருத்தி அதிகார சபை,**
**6 மற்றும் 7வது மாடிகள்,**
**''செத்சிறிபாய'',**
**பத்தரமுல்ல.**

# பெறுகை அறிவித்தல்

**வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு**

**மத்திய மாகாணம்**

2022 ஏப்ரல் 18ஆம் திகதிய திங்கட்கிழமை பிரசுரமான பத்திரிகை அறிவித்தலின் திருத்தம்

அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி ஒதுக்கீடு மற்றும் பராமரிப்பு ஒதுக்கீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காட்டப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கு இயைபான பெறுகை வேலைகள் 2022-04-26ஆம் திகதிய அரச நிதி அமைச்சின் தேசிய வரவு செலவுத் திட்டம் 03/2022ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் இரத்துச் செய்யப்படுவதாக இத்தால் சகலருக்கும் அறியத் தரப்படுகின்றது.

என்றாலும் அந்த பத்திரிகை விளம்பரத்திற்கு இயைபாக அலுவலக முற்றவெளிக்கான பொருட்கள் வழங்குதல் 10,11,12,13,14,15 இலக்கங்கள் மற்றும் ஏனைய செயற்றிட்டங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள 01ஆம் இலக்க பொருட்கள் வழங்குதல் மட்டும் செயற்படுத்தப்படும் என அறிவிக்கப்படுகின்றது.

ஏனைய சகல விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் 2022-04-18ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் என மேலும் அறிவிக்கப்படுகின்றது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, சக்திவலு மற்றும்**
**வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு,**
**109, யடிநுவர வீதி,**
**கண்டி.**

# கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை 2022/2023

**முந்தல் பிரதேச செயலக பிரிவு – புத்தளம் மாவட்டம்**

2022 ஜூலை மாதம் 01 திகதி முதல் 2023 ஜூன் மாதம் 30ம் திகதி வரையுமான காலப்பகுதிக்கு முந்தல் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் கள்ளுத் தவறணைகளுக்கான குத்தகை விற்பனைக்கான கேள்விப்பத்திரங்கள் 2022.06.03ம் திகதி காலை 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 2022.05.13 ம் திகதிய இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு வர்த்தமானியினை பார்வையிடவும்.

| பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|
| முந்தல் | 01. முந்தல் | காலை - 11.00<br>பி.ப. - 05.00 | பி.ப. - 02.00<br>இரவு - 08.00 | காலை - 10.30<br>மணி 2022.06.03 | 1000.00 |
| முந்தல் | 02. மதுரங்குளி | காலை - 11.00<br>பி.ப. - 05.00 | பி.ப. - 02.00<br>இரவு - 08.00 | காலை - 10.30<br>மணி 2022.06.03 | 1000.00 |
| முந்தல் | 03. முக்குதொடுவாவ | காலை - 11.00<br>பி.ப. - 05.00 | பி.ப. - 02.00<br>இரவு - 08.00 | காலை - 10.30<br>மணி 2022.06.03 | 1000.00 |
| முந்தல் | 04. உடப்பு | காலை - 11.00<br>பி.ப. - 05.00 | பி.ப. - 02.00<br>இரவு - 08.00 | காலை - 10.30<br>மணி 2022.06.03 | 1000.00 |

2022.05.04

**டீ.எம். றொகான் பிரியந்த தசநாயக,**
**பிரதேச செயலாளர்,**
**முந்தல்**

**SRI LANKAN DAIRY SECTOR INVESTMENT OPPORTUNITY**

Sri Lanka's pioneering dairy product manufacturing and distributing company seeks investment partners for their expansion from the investors who can invest Rs. 10 to 500 Mn. Every Successful transaction will get guaranteed return with a share holding of the company.

For more details contact: 0704777777
or
E-mail: srilankadairysector@gmail.com

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

**அட்டோர்ணி அதிகார பத்திரத்தை இரத்துச் செய்தல்**

ஹோமாகம, ஹபரகட, சமூபகார மாவத்தை, 371/9ஆம் இலக்கத்தில் வசிக்கும் மெத்தகே தொன் நிமல் கபுமுல்ல (தே.அ.அ.இல. 711880992V) ஆகிய என்னால் ஐக்கிய அமெரிக்கா, அயோவா 52241 கொரல்வில் 14வது வீதி, 2102ஆம் இலக்கத்தில் வசிக்கும் தவுன்ட முதியன்சேலாகே உபேந்தர சுமணசிறி (தே.அ.அ.இல. 731522618V) என்பவரை எனது அட்டோர்ணி தத்துவதாரராக நியமித்து 2020-08-20ஆம் திகதிய விசேட அட்டோர்ணி அதிகாரப் பத்திரம் இத்தால் இரத்துச் செய்யப்படுவதாக சகலருக்கும் அறிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் காலத்தில் அந்த அட்டோர்னி தத்துவதாரால் மேற்குறிப்பிடப்பட்ட அட்டோர்ணி அதிகாரப் பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாடுகள் தொடர்பிலும் நான் பொறுப்பல்ல என சகலருக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**சட்டத்தரணி**

நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

நகர அபிவிருத்தி அதிகார சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**பேலியகொட புதிய மெனிங் சந்தைக் கட்டிடத்தொகுதியின் இடைநடுவிலுள்ள மாடியில் இளைப்பாறும் அறைக்கு அருகில் அமைந்துள்ள உணவகம் மற்றும் மலசலகூடத் தொகுதி 05 வருட காலத்திற்கு நடாத்திக் கொண்டு செல்லும் பொருட்டான செயற்பாட்டாளரைத் தெரிவு செய்தல்**

01. நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள பேலியகொட புதிய மெனிங் சந்தைக் கட்டிடத்தொகுதியின் இடைநடுவிலுள்ள மாடியில் இளைப்பாறும் அறைக்கு அருகில் அமைந்துள்ள உணவகம் மற்றும் மலசலகூட தொகுதியை 05 வருட காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் பராமரித்து நடாத்திக் கொண்டு செல்லும் பொருட்டான செயற்பாட்டாளரைத் தெரிவு செய்வதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. வியாபார நிலையத்திற்கு இயைபான விபரங்கள் பின்வருமாறாகும்.

| எதிர்பார்க்கப்படும் ஆகக் குறைந்த (அடிப்படை) விலை (ரூபா) | உணவகத்தின் விஸ்தீரணம் (சதுர அடி) | மாதாந்த வாடகை (ரூபா) | பிணை முறி (ரூபா) |
|---|---|---|---|
| 1,560,000.00 | 2895 | 30,000.00 | 50,000.00 |

02. இந்த இரண்டு (02) இடப்பரப்பையும் ஒரு அலகாக வழங்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை எதிர்பார்க்கின்றது என்பதுடன் இதற்காக அதிகார சபையின் உத்தேச ஆகக் குறைந்த அடிப்படை பெறுமதி மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. விண்ணப்பதாரரால் தாம் விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் வியாபார இடத்திற்கான உடன் பணத்தொகையாக எவ்வளவு தொகை செலுத்துவதற்கு முன்வருகின்றார் எனக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் அது மேற்குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த அடிப்படை பெறுமதியை (உடன் பணத்தொகை) விட அதிகப் பெறுமதியாக இருத்தல் வேண்டும். செயற்பாட்டாளரைத் தெரிவு செய்தலானது இந்த அடிப்படை வாடகைப் பெறுமதியை விட அதிகமாக சமர்ப்பிக்கப்படும் விலைகளுக்கிடையில் அதிகூடிய பெறுமதியின் பிரகாரமாகும். இந்தத் தொகை மீளளிக்கப்பட மாட்டாது. தெரிவு செய்யப்படும் செயற்பாட்டாளர் அதிகார சபையுடன் வாடகை உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடல் வேண்டும். உடன் பணத்தொகை மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை செலுத்தியதன் பின் இடம் ஒப்படைக்கப்படும் என்பதுடன் அன்று முதல் வியாபார இடத்திற்கு இயைபான மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்ட மாதாந்த வாடகைத் தொகை செலுத்துதல் ஆரம்பமாகும். வியாபார இடத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அடிப்படை விலைக்கு மற்றும் மாதாந்த வாடகைக்கு இயைபான வெட் வரித் தொகையையும் செலுத்துதல் வேண்டும்.

03. இதில் ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் இயைபுடைய விபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்களை மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா தொகை மற்றும் அதற்கு இயைபான அரச வரிகள் சகிதம் (மொத்தம் 2,160.00) செலுத்தி பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'', 7வது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைப் பிரிவிலிருந்து 2022 மே மாதம் 09ஆம் திகதியிலிருந்து 2022 மே மாதம் 27ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையான காலத்தில் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை அவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பப் படிவங்கள் மூலம் மட்டுமே சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது பிணைத் தொகை வைப்புச் செய்யப்படல் வேண்டும் என்பதுடன் தாம் விண்ணப்பிப்பதற்கு எதிர்ப்பார்க்கும் வியாபார இடத்திற்கு இயைபான பிணைத் தொகையின் பெறுமதி மேற்படி அட்டவணையின் இறுதி நிரலில் காட்டப்பட்டுள்ளது. இந்தத் தொகையை அதிகார சபையின் நிதிப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். இந்த பிணைத் தொகை தகுதி வாய்ந்த செயற்பாட்டாளரைத் தெரிவு செய்ததன் பின்னர் விடுவிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டாளரால் மூன்று (03) மாத வாடகைக்குச் சமமான தொகையை குத்தகைக் காலத்தின் இறுதியில் மீளளிக்கப்படும் பாதுகாப்பு வைப்பாக அதிகார சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.

04. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் 2022 மே மாதம் 30ஆம் பி.ப. 2.00 மணிக்கு நிறைவுறும். விலைமனுக்களை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையினுள் இட்டு நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன் தலைவர், வருமானக் கேள்விச் சபை (கீழ் நிலை), நகர அபிவிருத்தி அதிகார சபை, 6ஆம் மாடி, ''செத்சிறிபாய'', பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது ''செத்சிறிபாய'', 6ஆம் மாடியில் அமைந்துள்ள நிதிப் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பேலியகொட மெனிக் சந்தைக் கட்டிடத்தொகுதியின் இடைநடுவிலுள்ள மாடியில் உணவகம் மற்றும் மலசலகூடத் தொகுதி'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்த உடனடுத்து பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'', 6ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவில் விண்ணப்பதாரரின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

06. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை பத்தரமுல்ல, 'செத்சிறிபாய', 7வது மாடியில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அதேபோல் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும் காலத்தினுள் பெறுகைப் பிரிவில் இலவசமாகப் பரீசித்துப் பார்க்கலாம். (தொலைபேசி இல. 011-3049008)

**தலைவர்,**
**வருமானக் கேள்விச் சபை (கீழ் நிலை),**
**நகர அபிவிருத்தி அதிகார சபை,**
**6 மற்றும் 7வது மாடிகள்,**
**''செத்சிறிபாய'',**
**பத்தரமுல்ல.**

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

# விலைமனுக்கோருதல்

**பிரதேச அபிவிருத்தி வங்கியின் வசமுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களை விற்பனை செய்வதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன**

1. **ஹிங்குரக்கொட சாமபுர கிராமத்தில் "ஹிங்குரக்தமன" எனும் 50 பர்ச்சஸ் காணியும் தனி மாடிக் கட்டிடமும்.**
2020.02.26ஆம் திகதி எச்.கே.சாருனி என். சந்ததாஸ வினால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 124ஆம் இலக்க விற்பனை சான்றிதழுக்குரிய உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொலன்னறுவை காணி பதிவகத்தில் LDO G 10 /11 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள 187 இலக்கமுடைய நில அளவையாளர் நாயகத்தின் களப்பத்திரத்தில் எப்.சி.பி.பொ. (FCP PO182) துண்டு இலக்கம் 1090 என குறிப்பிடப்பட்டுள்ள பிரித்து ஒதுக்கப்பட்டுள்ள பூச்சியம் தசம் ஒன்று இரண்டு ஆறு ஐந்து ஹெக்டயர் அளவின் வட மத்திய மாகாணத்தில், பொலன்னறுவை மாவட்டத்தின், ஹிங்குரக்கொட பிரதேச அலுவலக பிரிவில், சிங்கள பற்று சிறு பிரிவில், ஹிங்குராக்கொட அதிகார பரவலில், இலக்கம் 05 சாமபுர கிராம அலுவலர் பிரிவில் இலக்கம் 80 இல் அமைந்துள்ள ஹிங்குரக்தமன அரசாங்க காணி. வடக்கில் துண்டு இலக்கம் 1086, கிழக்கில் துண்டு இலக்கங்கள் 1086 மற்றும் 1091, தெற்கில் துண்டு இலக்கங்கள் 1091 மற்றும் 1097 மற்றும் மேற்கில் துண்டு இலக்கம் 1089 ஆகிய எல்லைகளைக் கொண்ட காணித் துண்டு, அதற்குரிய சோலை வரி மற்றும் வேறு கட்டணங்கள் இருந்தால் அவற்றையும் சேர்த்து விற்பனை செய்தல். (மேலதிக விபரங்களுக்கு 2019.07.27 திகதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளை பார்க்கவும்.)

**ஆதனத்தை சென்றடைதல்**

ஹிங்குரக்கொட நகரத்தில் டீ.எஸ்.சேனநாயக்க உருவச் சிலையையுடைய சந்தியிலிருந்து கவுடுல்ல மாவத்தை ஊடாக 2.5 கி.மீ. அளவில் பிரயாணம் செய்து அதாவது "சமரவீர மோடர்ஸ்" நிறுவனத்தை கடப்பதற்கு முன்னர் இவ் வீதிக்கு இடது பக்கத்தில் இருக்கும் வீதி ஊடாக 150 மீட்டர் அளவில் பிரயாணம் செய்த பின்னர் உரிய ஆதனம் அமைந்துள்ள காணியை வீதியின் இடது பக்கம் காணமுடியும்

2. **ஹிக்கடுவ பன்வில கிராமத்தில் அமைந்துள்ள பீல்லகொட பெத்த 39 பர்ச்சஸ் விசாலமான காணியும் தனி மாடி வீடும்**
2020.07.15 ஆம் திகதி எச்.கே.சாருனி என். சந்ததாஸ வினால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 130 ஆம் இலக்கத்திற்குரிய காலி காணிபதிவகத்தில் M/75/59 இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், வெல்லபொட பற்றில், அம்பலங்கொட பிரதேச சபை எல்லைக்குள் மற்றும் கொணாபீனுவல பிரதேச செயலாளர் பிரிவிற்குள், ஹிக்கடுவ கிழக்கு 59A இலக்க கிராம அலுவலர் பிரிவிற்குள் பன்வில்ல கிராமத்தில் அமைந்துள்ள "பீல்லகொடபெத்த" என அழைக்கப்படும் காணிக்கு, அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் ஜீ.எச்.பி. மானில் த சில்வா என்பவரினால் தயாரிக்கப்பட்டுள்ள 2014. 06.01ஆம் திகதி மற்றும் 655 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு B என குறிக்கப்பட்டுள்ள 39 பர்ச்சஸ் விசாலமான பிரித்து ஒதுக்கப்பட்டுள்ள காணிக்கான எல்லைகள் வடக்கே ஶ்ரீமதி அபேகுணவர்தன இற்கு சொந்தமான காணி, கிழக்கே அதே காணியின் துண்டு இலக்கம் "C" தெற்கே அதே காணியின் துண்டு இலக்கம் 4 (வீதி) மேற்கே அதே காணியின் துண்டு இலக்கம் "A" எனும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணி மற்றும் அதன் மீதுள்ள மரஞ்செடி கொடிகள், கட்டிடங்கள் உட்பட அனைத்தும்.

**ஆதனத்தை சென்றடைதல்**

ஹிக்கடுவை நகரத்திலிருந்து ஹிக்கடுவ - பத்தேகம வீதியில் 3.2 கி.மீ. அளவில் புஞ்சி பதன சந்திவரை பிரயாணித்து மீண்டும் வலது பக்கம் திரும்பி பன்வில வீதியில் 250 மீட்டர் அளவில் பயணம் செய்து மீண்டும் வலது பக்கம் திரும்பி, பல்லேகொடபெத்த வீதியில் 100 மீட்டர் அளவில் பயணம் செய்யும் போது வீதியின் வலது புறம் இவ் ஆதனம் அமைந்துள்ளது.

மீளச் செலுத்தப்படாத ரூபா 1,000/- கட்டணம் மற்றும் மீளச்செலுத்தப்படும் ரூபா 2,500/- கட்டணம் செலுத்தி கேள்வி மனு பத்திரங்களை 2022.05.09ஆம் திகதி முதல் 2022.05.30ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையான காலப்பகுதியில் பிரதேச அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

- ஒவ்வொரு காணிக்கும் வெவ்வேறாக கேள்வி மனு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- கேள்வி மனுக்களை தாக்கல் செய்யும் முன்னர் கேள்வி மனுதாரர்கள் ஆதன உரிமையை பற்றி முழுமையாக திருப்தி அடைய வேண்டும்.
- உரிமையை பரீட்சிப்பதற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் ஏனைய விடயங்களை பிரதேச அபிவிருத்தி வங்கியின் பிரிவுத் தலைவரிடமிருந்து (கடன் அறவிடல்) பெற்றுக் கொள்ள முடியும்.
- முறையாக பூர்த்தி செய்யப்பட்டகேள்வி மனு பத்திரங்கள் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விமனு பெட்டியில் இடவேண்டும். அல்லது பதிவுத் தபாலில் 2022.05.30ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்பதுடன் அத்தினம் பி.ப. 3.00 மணிக்கு திறக்கப்படும்.
- கேள்வி மனுக்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் நிராகரிக்கும் உரிமை வங்கிக்குரியது.

**மேலதிக விபரங்களுக்கு,**
**பிரிவுத் தலைவர் - கடன் அறவிடல்,**
**பிரதேச அபிவிருத்தி வங்கி, பிரதான அலுவலகம்,**
**இல. 933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி.**
**தொலைபேசி இலக்கங்கள் - 0112035454/0112035455**

**வழக்கறிஞரின் அதிகாரத்தை ரத்து செய்தல்**

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின், இலக்கம் 1001. கடவத்த வீதி ராகம இடத்தில் குடியிருக்கும் அந்த இடத்தில் வசிக்கும் மிரந்த மாகினாகே நிலுஷி நதிஷானி சில்வா ஆகிய நான் 2017 மே மாதம் 02 ம் திகதி கம்பஹா பொது நோட்டரி சுரங்கா மென்டிஸ் அவர்களால் எழுதி சான்றளிக்கப்பட்ட இல. 3267 என்ற விஷேட வழக்கறிஞர் அதிகார பத்திரத்தை இல. 75, கனே வீதி, ராகம இடத்தில் வசிக்கும் வெலிசரகே ரீடா ரஞ்சனி பிரனாந்து அவர்களுக்கு வழங்கப்பட்ட வழக்கறிஞர் அதிகார பத்திரத்தை 2022 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ம் திகதி முதல் ரத்து செய்யப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எம்.எம்.நிலுஷி நதிஷானி சில்வா**

**தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு**

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் - சுத்திகரிப்பு பிரிவு

பகிரங்க கேள்வி: **4429T**

**19 லீற்றர் கொள்ளளவுடன் கூடிய 40,000 குடிநீர் போத்தல்களை – வழங்குதல் (2022 – 2023)**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, இலங்கை, களனிய, சப்புகஸ்கந்த சுத்திகரிப்புப் பிரிவு, திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் உள்நாட்டு வழங்குநர்களிடமிருந்து விலைகோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரக்குறிப்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முழுமையாக அமையும் வகையில் மேற்குறிப்பிட்ட பொருளை வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

எந்தவொரு கேள்விதாரரும் கேள்வியைச் சமர்ப்பிக்கும்போது மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 1,000.00 ரூபாவை 2022 மே 23ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நாட்களில் கொழும்பு - 09, இல. 609, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தின் 05ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பணியகத்தின் காசாளிடம் கடிதமொன்றைச் சமர்ப்பித்து ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் சகல கொடுப்பனவுகளையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்தின் ஊடாக கேள்வி இலக்கம் மற்றும் கேள்விதாரரின் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு பணத்தை செலுத்தலாம்.

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகள் அடங்கிய கேள்வி ஆவணங்கள் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com எனும் இணையதளங்களில் கிடைக்கத்தக்கதாக உள்ளன.

மாற்றுவழியாக கேள்வி ஆவணங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்கள் 2022 மே மாதம் 25ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, அன்றைய தினமே உடனடியாக அவைகள் சுத்திகரிப்பு நிலைய மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருள்வளம்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சப்புகஸ்கந்த,**
**களனி, இலங்கை.**

**தொலைபேசி: 011 2400110**

**பிரதேச சபை வரவுசெலவுத் திட்டம் மற்றும் செயற்படுத்தும் சட்டத் தொகுப்பின் 6(1) அத்தியாயத்திற்கு இயைபாக அதிகாரப் பிரதேசத்தின் பிரசைகளுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்**

2023ஆம் வருடத்திற்கான அளவ்வ பிரதேச சபையினால் தயாரிப்பதற்கு உத்தேசித்துள்ள வரவு செலவுத் திட்ட ஆவணத்தின் மூலதன செலவு மதிப்பீடு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உள்ளடக்குவதற்கு உத்தேசிக்கும் முன்மொழிவுகள் இருப்பின் 2022-06-30ஆம் திகதிக்கு முன் எனக்குச் சமர்ப்பிக்குமாறு பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

**2022-05-05ஆம் திகதி**
**அளவ்வ பிரதேச சபை பிரதான அலுவலகத்தில்.**

**தொலைபேசி : 037-2278175**
**தொலைநகல் : 037-2278747**
**மின்னஞ்சல் : alawwa_ps@yahoo.com**

**பத்மா வெத்தேவ,**
**தலைவர்.**
**பிரதேச சபை, அளவ்வ.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## நிதி அமைச்சு
## கொழும்பு 01

**IFB No-MF/06/22**/வா.அக/2021

**IFB No-MF/06/02**/உ.பொ.அக/2022

நிதி அமைச்சின் பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் இரும்பு நீர்க் குழாய்களை கேள்வி மூலம் விற்பனை செய்வதற்காக வெவ்வேறாக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

நிதி அமைச்சின் பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் இரும்பு நீர்க் குழாய்களை 2022-05-24ஆம் திகதி மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையான காலத்தினுள் கொழும்பு-01, லோட்டஸ் வீதி, நிதி அமைச்சு இடப்பரப்பில் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மீளளிக்கப்படாத 500.00 ரூபா வைப்புத் தொகை மற்றும் மீளளிக்கப்படும் 5000.00 ரூபா தொகையைச் செலுத்தி விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான மாதிரிப் படிவங்களை நிதி அமைச்சின் கணக்கிடல் பிரிவிலிருந்து 2022-05-09 - 2022-05-27 வரை பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வாகனங்களுக்கான விலைமனுக்கள் கோருதல்'' அல்லது ''இரும்பு நீர்க் குழாய்களுக்கான விலைமனு கோருதல்'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டு தலைமைக் கணக்காளர், கணக்கிடல் பிரிவு, நிதி அமைச்சு, மேல் தரைத் தளம், புதிய கட்டிடம், கொழும்பு-01 எனும் முகவரிக்கு 2022-05-30ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் முத்திரைக்குறி பொறித்து பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வேளையிலேயே விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**தலைவர், சிறியளவிலான பெறுகைக் குழு,**
**நிதி அமைச்சு, லோட்டஸ் வீதி,**
**கொழும்பு-01.**
**2022-05-09.**

**அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்**

கம்பஹா, வேபட, வேபட வடக்கு, 606/எவ் என்ற முகவரியில் வசிக்கும் பொல்பிட்டி ஆச்சாரிகே விஜித்த தம்மிக்க வர்ணசிரி (தே.அ.அ. இல.: 793392826V) ஆகிய நான் 2020.02.12 ஆம் திகதியன்று கட்டார் நாட்டின் இலங்கை தூதுவரின் அலுவலகத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்டு பத்தரமுல்ல பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2998 என்ற இலக்கமும் 2020.02.20 ஆம் திகதியுமுடைய விஷேட அற்றோணித்தத்துவமானது கம்பஹா, வேபட, வேபட வடக்கு 606/ எவ் என்ற முகவரியில் வசிக்கும் பொல்பிட்டி ஆச்சாரிகே தமரா ஜயசீலி (தே.அ.அ. 196868000814) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவமானது இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து (2022.05.06 ஆம் திகதி) செயற்படும் நாளிலிருந்து இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இலங்கை சனநாயக சோஷலிச குடியரசிற்கும் அதனது பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

**பொல்பிட்டி ஆச்சாரிகே விஜித்த தம்மிக்க வர்ணசிரி.**

**விசேட அட்டோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

கோட்டே, மாதிவல, இல: 137 என்ற விலாசத்தில் வசிக்கும் எதுல்துர ஆராச்சிகே லலித் கித்சிறி பெரேரா ஆகிய நான், ஸ்ரீ லங்கா பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்வதாவது, எதுல்துர ஆராச்சிகே சுனேத்ரா சுபாஷினி பெரேரா என்பவருக்கு என்னால் அளிக்கப்பட்ட கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச்.கே.ஹெட்டிகே அவர்களால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 483 இடப்பட்ட 2015.05.08ந் திகதியுடைய விசேட அட்டோணித் தத்துவத்தை என்னால் இரத்துச் செய்யப்படுவதோடு, அதனால் இதிலிருந்து எதுல்துர ஆராச்சிகே சுனேத்ரா சுபாஷினி பெரேரா என்பவரினால் எனக்காக செய்யப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் எவற்றுக்கும் நான் பொறுப்பாளியாக மாட்டேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**எதுல்துர ஆராச்சிகே லலித் கித்சிறி பெரேரா**

**Best way to fulfil your Future Dreams**

*Marriage Proposals*

**in the**

Sunday Observer

NLDB

## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை

# பெறுகை அறிவித்தல்

## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைக்குரித்தான ரிதீயகம பண்ணையில் பிரதான மின் வலையமைப்போடு தொடர்பாக 1MW சூரிய சக்தி முறைமையொன்றை நிறுவுதல்

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையினால் அம்பலாந்தோட்டையில் அமைந்துள்ள ரிதீயகம பண்ணையில் 1MW சூரிய சக்தி முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்கு மாட்டுத் தொழுவங்களை குத்தகைக்கு வழங்குவதற்காக தேசிய தொழில்சார் வழங்குநர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**வழங்கக்கூடிய மாட்டுத்தொழுவ இடவசதிகள் பின்வருமாறாகும்.**

| தொழுவ இலக்கம் | கூரையின் நீளம் / அகலம் | விஸ்தீரணம் (சதுர மீற்றர்) | விஸ்தீரணம் (சதுர அடி) |
|---|---|---|---|
| 1 | 100m x 20m | $2000m^2$ | 21.125sf |
| 2 | 100m x 20m | $2000m^2$ | 21.125sf |
| 3 | 100m x 20m | $2000m^2$ | 21.125sf |
| 4 | 100m x 20m | $2000m^2$ | 21.125sf |
| 5 | 100m x 20m | $2000m^2$ | 21.125sf |
| 6 | 100m x 20m | $2000m^2$ | 21.125sf |
| 7 | 100m x 20m | $2000m^2$ | 21.125sf |
| 8 | 100m x 20m | $2000m^2$ | 21.125sf |
| | | **$16,000m^2$** | **169,000sf** |

தெரிவு செய்யப்பட்ட வழங்குநரினால் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையுடன் உடன்படிக்கையொன்றுக்கு வருவதற்கு இணங்குதல் வேண்டும்.

மீளளிக்கப்படாத கட்டணமாக 5000.00 ரூபாவை NLDB நிறுவனத்தின் தலைமை அலுவலக கணக்கிடல் பிரிவிற்குச் செலுத்தியதன் பின் வழங்கல் பிரிவிலிருந்து வேலை நேரங்களில் (மு.ப. 8.30 முதல் பி.ப. 3.30 மணி வரை) குறித்த விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

குறித்த விலைமனுக்களை பதிவுத் தபாலில் தலைவர், தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை, இல. 40, நாவல வீதி, நாராஹேன்பிட்டி, கொழும்பு-05 எனும் முகவரிக்கு 2022-05-30ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். அன்றைய தினமே கிடைக்கப்பெற்றுள்ள விலைமனுக்கள் தலைமை அலுவலகத்தில் மு.ப. 10.30 மணிக்கு திறக்கப்படும் என்பதுடன் அந்நேரத்தின் பின் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும்.

குறித்த விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் ரிதீயகம பண்ணைக்கு 1ஆறு சூரிய சக்தி முறைமையொன்றை ஸ்தாபித்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியாக வெவ்வேறு உறைகளில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களை மதிப்பிடுகையில் அதிக விலையைச் சமர்ப்பித்துள்ள வழங்குநர்களுக்கு கூடிய முன்னுரிமை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**தலைவர்,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை.**

## கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

## கட்டிடங்கள் திணைக்களம்

# கேள்விகளுக்கான அழைப்பு

1. பின்வருமாறு விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக தகைமையும் தகுதியும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் பிராந்திய பெறுகைக் குழு (வலயம் 6) பெறுகைக் குழுத் தலைவர் கோருகிறார்.

| | வேலையின் பெயர் | மதிப்பீட்டுச் செலவு (ரூபா மில்லியன்) | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | CIDA தரம் | விலைமனு பிணை முறி (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஹம்பாந்தோட்டையிலுள்ள சமல் ராஜபக்ஷ ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையின் புதுப்பித்தல் வேலைகள் - படிநிலை II (ஒப்பந்த இலக்கம்: RPC/Zone 6/04-C/2022) | 15.7 | 182 | C6 அல்லது C5 | 230,000.00 | 4,000.00 |
| 2. | மாத்தறையிலுள்ள மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கான மின்சார நிறுவல்கள் (ஒப்பந்த இலக்கம்: RPC/Zone 6/05-C/2022) | 0.5 | 35 | EM 5 அல்லது அதற்கு மேல் | 8,000.00 | 1,500.00 |
| 3. | பெல்மடுல்லயிலுள்ள (கஹவத்த) தொழில் அலுவலகத்தின் செயற்பாடுகள் மற்றும் சேவை வசதிகளை மேம்படுத்துதல் (ஒப்பந்த இலக்கம்: RPC/Zone 6/06-C/2022) | 1.64 | 63 | C9, C8, C7, C6 அல்லது C5 | 20,000.00 | 1,500.00 |

2. கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் இடம்பெறும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் (1ஆம் விடயத்தை விடுத்து) 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 04/2016 (iii) மற்றும் 03/2020ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தரம் முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்படும்.

3. ஒப்பந்தத்தையும் வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் கேள்விகள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA) கட்டிட நிர்மாணத் துறைக்காக அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தரங்களுக்கான பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். குறித்த பதிவானது ஒப்பந்தம் வழங்கும் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

   ''பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் கேள்விதாரர்கள் 1987இன் 3ஆம் இலக்க ஒப்பந்த விதிகள் பற்றிய ஒப்பந்தச் சட்டத்தின் பெறுகை விதிகளின் பிரகாரம் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை (Original Certificate of PCA 03) கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். PCA 03 பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் இந்தப் பெறுகை கையளிக்கப்படமாட்டாது.''

4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் காலி, இல. 10, மேல் டிக்சன் வீதி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 6), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

   தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 091-2222583, தொலைமடல்: 091-2234838

5. ஒவ்வொரு கேள்விக்கும் மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை 2022-05-09ஆம் திகதி முதல் 2022-05-23ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் காலி, இல. 10, அப்பர் டிக்சன் வீதி. கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 6), பிரதம பொறியியலாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

6. கேள்விகளை 2022-05-24ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (வலயம் 06), இல. 10, அப்பர் டிக்சன் வீதி, காலி முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். காலி, இல. 10, மேல் டிக்சன் வீதி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 6), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் கேள்வியில் பங்குபற்ற தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.

7. கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் அல்லது நீடிக்கப்பட்ட காலத்திலிருந்து 77 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.

8. அனைத்துக் கேள்விகளுடனும்
   * கேள்வி ஆவணத்தின் 09ம் பிரிவில் உள்ளடங்கும் படிவத்தின்படி
   * கட்டிடப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதப்பட்ட
   * மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தொகைக்கு
   * 2022 செப்டெம்பர் 05ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்
   * கேள்வித் தரவின் 16.2ஆம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்ட கேள்விப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பொறி. எஸ்.பி.எஸ். பண்டார,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் (பிராந்தியம் 3),**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2ம் மாடி, ''செத்சிறிபாய'', பத்தரமுல்லை.**
**www.buildings.gov.lk**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## ராகம, வெலிசர வர்த்தக வெடி பொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவிற்கு துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருட்களைப் பெற்றுக்கொள்ளல்

1. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களிடமிருந்து வர்த்தக வெடி பொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவிற்கு (CEFAP Unit) பின்வரும் விடயங்களைப் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுப் படிவத்தின் மூன்றாம் பிரிவில் (Section III) குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வழங்குநர்களிடமிருந்து மட்டும் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இல. | விடயம் | அளவு |
|---|---|---|
| **CEFAP/PRT/07/2021** | மின்சார டெடொனேட்டர் (4Mrt) | 1,500,000 எண்ணிக்கை |
| **CEFAP/PRT/43/2021** | போர் 12 ரிபீட்டர் வகையான ரவை துப்பாக்கி | 350 எண்ணிக்கை |

2. விலைக்கோரல் சர்வதேச போட்டி விலைக்கோரல் நடைமுறைக்கமைய செயற்படுத்தப்படும்.
3. இதில் ஆர்வம் காட்டும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குநர்கள் தேவையான மேலதிகத் தகவல்களை வெலிசரை, ராகமயில் அமைந்துள்ள வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவின் கொள்வனவு அதிகாரியிடமிருந்து தொலைபேசி இல. 0112958227 அல்லது வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவின் பணிப்பாளர் (தொலைபேசி இல. 0112955514) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
4. ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் வெவ்வேறாக விலைமனுக்களைக் கொள்வனவு செய்தல் வேண்டும்.
5. ராகம, வெலிசரை, வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றைச் செய்வதன் பேரில் ஒரு விலைமனுவிற்கு மீளளிக்கப்படாத 4500.00 ரூபா வீதம் கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தி 2022 மே மாதம் 09ஆம் திகதி முதல் 2022 ஜூன் மாதம் 23ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம். (வெளிநாட்டு வழங்குநர்களால் இதற்காக உள்நாட்டு முகவர்கள் நியமிக்கப்படல் வேண்டும்)
6. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 120 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும் என்பதுடன் சகல விலைக்கோரலுக்கும் நிபந்தனையற்ற விலைமனுப் பிணை முறியொன்றைச் (Bid Bond) சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த விலைமனுப் பிணை முறி விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 150 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும். (அவ்வாறு வழங்கப்படும் விலைமனுப் பிணை முறியை உள்நாட்டு வர்த்தக வங்கியொன்றின் மூலமாக வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்)
7. தருவித்தற் கட்டளை படிவம் கையளிக்கப்பட்டவுடன் இயைபுடைய வழங்குநரால் வரியின்றி விலைக்கோரல் பெறுமதியின் 10% பெறுமிக்குச் சமமான நிபந்தனையற்ற செயலாற்றுகை பிணை முறியொன்று (Performance Bond) வழங்குதல் வேண்டும்.
8. 2022 ஜூன் மாதம் 23ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை கொழும்பு-01, கொடிகஹ வீதியிலுள்ள இலங்கை கடற்படை தலைமையகத்தின் கேள்விச் சபைத் தலைவருக்கு இரு நகல்களிலான முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஒப்படைக்கலாம் அல்லது அம்முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கடற்படை தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்து கொள்ளும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகள் திறக்கப்படும்.
9. இந்த விலைக்கோரல் தொடர்பான மேலதிக விபரங்களை கடற்படையில் www.navy.lk எனும் இணையதளத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர்,**
**வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும்**
**ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவு,**
**அரசாங்க வெடிமருந்துகள் களஞ்சியசாலை,**
**வெலிசரை, ராகம.**

# இங்கிலாந்தில் அசத்தும் இளம் துடுப்பாட்ட வீரர்கள்

கெண்ட் கி ரிக்கெட் கழகத்துக்கு எதிரான பயிற்சிப்போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டநேர நிறைவில் இலங்கை கிரிக்கெட் அபிவிருத்தி பதினொருவர் அணி மிகச்சிறந்த துடுப்பாட்ட ஆரம்பத்தை பெற்றுக் கொண்டுள்ளது.



இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை வளர்ந்துவரும் அணியின் இலங்கை கிரிக்கெட் சபை அபிவிருத்தி பதினொருவர் அணி மற்றும் கெண்ட் கிரிக்கெட் கழகத்துக்கான பயிற்சிப்போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டம் கடந்த (07) நிறைவுக்கு வந்தது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கெண்ட் அணி, 6 விக்கெட்டுகளை இழந்து முதல் நாள் ஆட்ட நேர நிறைவில் 418 ஓட்டங்களை பெற்றிருந்தது. இதில், டெரன் ஸ்டீவன்ஸ் 168 ஓட்டங்களையும், ஜோர்ஜ் லிண்டே 107 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொண்டனர்.

மிகச்சிறந்த ஓட்ட எண்ணிக்கையுடன் இன்றைய ஆட்டத்தை ஆரம்பித்த கெண்ட் அணிசார்பாக, விக்கெட் காப்பாளர் பில்லி மீட் மற்றுமொரு சதத்தை பதிவுசெய்து அணிக்கு பலம் கொடுக்க, மறுபக்கம் ஹெரி பொட்மோர் அரைச்சதம் கடந்தார். பில்லி மீட் ஆட்டமிழக்காமல் 106 ஓட்டங்களை பெற, ஹெரி பெட்மோர் 56 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

இவர்களின் இந்த துடுப்பாட்ட பங்களிப்பின் உதவியுடன் கெண்ட் கிரிக்கெட் கழகம் 137 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி 8 விக்கெட்டுகளை இழந்து 595 ஓட்டங்களுடன் ஆட்டத்தை இடைநிறுத்தியது. இலங்கை கிரிக்கெட் சபை அபிவிருத்தி பதினொருவர் அணியின் பந்துவீச்சில் உதித் மதுசான், யசிரு ரொட்ரிகோ, தனஞ்சய லக்ஷான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

கெண்ட் அணி முதல் இன்னிங்ஸில் குவித்திருந்த மிகப்பெரிய ஓட்ட எண்ணிக்கையை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய இலங்கை கிரிக்கெட் சபை அபிவிருத்தி பதினொருவர் அணியை பொருத்தவரை, அணித்தலைவர் நிபுன் தனஞ்சய 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தங்களுடைய முதல் விக்கெட்டை 14 ஓட்டங்களுக்கு இழந்திருந்தாலும், நிசான் மதுஷ்க மற்றும் லசித் குரூஸ்புள்ளே ஆகியோர் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்டங்களை குவித்தனர். இவர்கள் இருவரும் இன்றைய ஆட்டநேரம் நிறைவுவரை விக்கெட்டுகளை விட்டுக்கொடுக்காமல் 187 ஓட்டங்களை பகிர்ந்த நிலையில், இலங்கை அணி ஒரு விக்கெட்டினை மாத்திரம் இழந்து 201 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

நிசான் மதுஷ்க தன்னுடைய சதத்தை பதிவுசெய்து 120 பந்துகளில் ஒரு சிக்ஸர் மற்றும் 18 பௌண்டரிகள் அடங்கலாக 104 ஓட்டங்களை பெற, மறுமுனையில் லசித் குரூஸ்புள்ளே 109 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் 10 பௌண்டரிகள் அடங்கலாக 86 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்டார். கெண்ட் அணியின் பந்துவீச்சில் ஹெரி பொட்மோர் ஒரு விக்கெட்டினை வீழ்த்தினார்.

## நோன்பு பெருநாள் சம்பியன் கிண்ணத்தை நேகம ரெட் ஸ்டார் அணி சுவீகரித்துக் கொண்டது

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**



நோன்புப் பெருநாளை முன்னிட்டு நேகம நிவ் ஸ்டார் விளையாட்டுக்கழகம் நடாத்திய அணிக்கு 11 பேர் கொண்ட ஏழு ஓவர் கொண்ட மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேகம ரெட் ஸ்டார் அணி 4 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இக்கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஊரிலுள்ள பிரபல்யமான ஐந்து கிரிக்கெட் அணிகளை இணைத்து லீக் முறையில் இடம்பெற்றது. இதன் இறுதிப் போட்டி இம்மாதம் 07 ஆம் திகதி நேகம முஸ்லிம் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதில் இறுதிப் போட்டி நேகம கிறீன் ஸ்டார் அணிக்கும் நேகம ரெட் ஸ்டார் அணிக்கும் இடையில் இடம் பெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நேகம கிறீன் ஸ்டார் அணி ஏழு ஓவர்களில் ஐந்து விக்கட்டுக்களை இழந்து 41 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ரெட் ஸ்டார் அணி 6.4 ஓவர்களில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 45 ஓட்டங்களைப் பெற்று நான்கு விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இப் போட்டித் தொடரின் சிறப்பாட்டக்காரராக ஏ.ஏ.அமீன் தெரிவு செய்யப்பட்டார். இறுதிப் போட்டியின் சிறப்பாட்ட வீரராக ஜே.எச்.எம்.ஹஸ்ரான் சிறந்த பந்து வீச்சாளராக வஸீம்,சிறந்த துடுப்பாட்ட வீரராக ரிஸ்வான் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கும் கிண்ணங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

OBSERVER SLT-MOBITEL
44th SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

**44th OBSERVER SLT- MOBITEL**

**மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022**

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது :....................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை :....................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை :....................
வாக்களித்தவர் பெயர் :....................
முகவரி :....................
மொபைல் இல. :....................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 14-05-2022 இல. 07

Non-Stop லொக்கா
நீங்கள் விரும்பும் 9 App இற்கும் வேண்டியளவு data மற்றும் மேலதிகமாக 2GB.
398 ரூபா இற்கு #170#
அழைத்து அல்லது SELFCARE APP ஊடாக இப்போதே அக்டிவ் செய்யுங்கள்.
SLTMOBITEL

# பாடசாலை மட்ட பயிற்சியில் குறைகாணும் மாவன் அத்தபத்து

பெரிய போட்டிகள் தொடங்கவிருக்கும் நிலையில், பள்ளிகளுக்கிடையேயான 19 வயதுக்குட்பட்ட முதல் X1 கிரிக்கெட் சீசன் சுவாரஸ்யமான கட்டத்தை எட்டியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தில் பிக் மேட்ச் சீசன் நடத்தப்படுவது வழக்கம் என்றாலும், கோவிட்19 தொற்றுநோயால் பழைய பழக்கவழக்கங்கள் ஆறு வரை சென்றன.



2020 மார்ச் நடுப்பகுதியில் ரோயல் மற்றும் சென் தோமஸ் இடையேயான ப்ளூஸ் சண்டைக்குப் பிறகு, அனைத்து விளையாட்டுகள் மட்டுமின்றி, ஒட்டுமொத்த உலகத்தின் அன்றாட நடவடிக்கைகளும் குறைக்கப்பட்டன.

நீலங்களின் சமர் உட்பட சில போட்டிகள் விளையாடப்பட்டாலும் கடந்த ஆண்டு பெரும்பாலான பெரிய போட்டிகள் விளையாடப்படவில்லை, ஆனால் அட்டவணைக்கு பல மாதங்கள் பின்தங்கியிருந்தன. எனவே, மார்கழியை பெரிய போட்டி மாதமாகக் கொண்ட ஒரு நூற்றாண்டுக்கும் மேலான வழக்கம் பின் இருக்கையை எடுத்தது.



பதினைந்து நாட்களுக்கு முன்னர் ஜெய சிறிபுர கே.விக்கு எதிராக 417 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் சாதனை படைத்த ரத்னவலி பாலிகா அணித்தலைவர் விஷ்மி குணரத்ன, 92 பந்துகளில் 15 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காமல் 125 ஓட்டங்களைப் பெற்று மீண்டும் சிறந்த நிலையில் இருந்தார்.

கடந்த புதன்கிழமை புளூம்ஃபீல்ட் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் 19 வயதுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெண்கள் சம்பியனாவதற்கு அவரது சிறப்பான இன்னிங்ஸினால் ரத்னவலி 66 ஓட்டங்களால் அனுலா வித்தியாலய அணியை வீழ்த்தினர்.

16 வயதான தொடக்க ஆட்டக்காரர் குணரத்னவின் அபார சதத்தால் அவரது அணி 30 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 199 ஓட்டங்கள் எடுத்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அனுலா 29.3 ஓவர்களில் 133 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

தேவபதிராஜா ரத்கம வாதுவ மத்திய அணியை 54 ஓட்டங்களால் தோற்கடித்தது.

விஷ்மி குணரத்ன ஏற்கனவே 16 வயதில் தேசிய அணியில் உள்ளார் ஆனால் துரதிஷ்டவசமாக க.பொ.த சா/த பரீட்சையை எதிர்கொள்வதால் எதிர்வரும் பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தை தவிர்த்துள்ளார்.

ஏறக்குறைய அனைத்து பள்ளி மாணவர்களும் சிறுமிகளும் ஒப்சர்வர்மொபிடெல் ஆண்டின் சிறந்த பாடசாலை கிரிக்கெட் வீரர்கள் பட்டத்தை இலங்கை தொப்பியை விளையாடுவதற்கான அதிகாரப்பூர்வமற்ற உத்தரவாதமாக கருதுகின்றனர்.

OBSERVER SLT-MOBITEL
44th SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

1990 ஆம் ஆண்டு தான் வென்ற ஒப்சர்வர் பாடசாலை துடுப்பாட்டப் பட்டம் தான் இலங்கைக்காக விளையாடுவேன் என்பதற்கான 'சான்றிதழ் அல்லது உத்தரவாதம்' போன்றது என்று கருதும் இலங்கையின் முன்னாள் தலைவரும் முன்னாள் தேசிய பயிற்சியாளருமான மார்வன் அத்தபத்துவும் அப்படித்தான் என்று நம்புகிறார்கள். அதிக அர்ப்பணிப்புடன்.



அத்தபத்து, சண்டே ஒப்சர்வருக்கு அளித்த சமீபத்திய நேர்காணலில், ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட் வீரர் பட்டத்தை வென்றது தனது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக கருதுவதாகக் கூறினார், இது பாடசாலை கிரிக்கெட்டில் இருந்து சர்வதேச கிரிக்கெட்டுக்கு தன்னை மாற்றியது.

“அந்த நேரத்தில் நான் ஒரு பாடசாலை சிறு கிரிக்கெட் வீரராக ஆனந்த கல்லூரிக்காக சிறப்பாகச் செயல்பட்டு, தொடர்ந்து கோல் அடித்துக் கொண்டிருந்தேன், மேலும் பலர் என்னை எதிர்கால இலங்கை வாய்ப்பாகக் கருதினர். எனக்கும் ஒரு வாய்ப்பு கிடைத்ததாக நான் உணர்ந்திருந்தாலும், எந்த உத்தரவாதமும் இல்லை, ”என்று அவர் கூறினார்.

1991 ஆம் ஆண்டின் ஒப்சர்வர் ஸ்கூல் பாய் துடுப்பாட்ட வீரராக மகுடம் சூடியதன் மூலம் இலங்கைக்காக விளையாடுவேன் என்ற உறுதியை அளித்ததாக அதபத்து கூறினார்.

“கடந்த காலங்களில், எனக்கு முன்னர் ஒப்சர்வர் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர் பட்டத்தை வென்ற அனைத்து வீரர்களும் இலங்கைக்காக சிறப்பாக விளையாடியவர்கள். எனவே, நான் பட்டத்தை வென்றபோது, நான் கடினமாக உழைத்தால், அந்த தே ர்ந்தெ டுக்கப்பட்ட இசைக்குழுவில் சேர முடியும் என்று எனக்கும் தெரியும், ”என்று அத்தபத்து நினைவு கூர்ந்தார்.

"இலங்கைக்காக விளையாடுவதற்கான வாய்ப்பாக நான் எப்போதும் கருதப்பட்டேன், மேலும் எனக்கு மிகப்பெரிய உத்வேகத்தை அளித்த ஊக்கத்தின் ஆதாரம் பள்ளி மாணவர் கிரிக்கெட் பட்டத்தை வென்றது. எனவே, அந்த இலக்கை அடைய நான் கடினமாக உழைத்தேன், என்னை அர்ப்பணித்தேன். ஒப்சர்வர் ஆண்டின் சிறந்த பள்ளி கிரிக்கெட் வீரர் பட்டத்தை வென்ற சிறிது நேரத்திலேயே நான் இறுதியாக இலங்கை அணியில் இடம்பிடித்தேன்,” என்று 51 வயதான இலங்கையின் முன்னாள் தொடக்க ஆட்டக்காரர் கூறினார்.

ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டர் ஓஃப் தி இயர் விருதை வென்ற சில மாதங்களுக்குப் பிறகு, நவம்பர் 23, 1990 அன்று சண்டிகரில் நடந்த ஒரே டெஸ்டில் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார்.

வெளியூர்களில் இருந்து ஒரு சிறந்த வீரர் அல்லது இருவருக்கு வாய்ப்பு வழங்குவது, வெளியூர் கிரிக்கெட் வீரர்களுக்கு ஒரு உத்வேகமாக அங்கீகரிக்கப்படலாம்,” என்றார். நம்பகமான முன்னாள் இலங்கை தொடக்க ஆட்டக்காரர் தனது சிறந்த நுட்பத்திற்காக நன்கு அறியப்பட்டவர், அவர்களின் காலத்தில் பயிற்சியாளர்கள் மீது அவர்களுக்கு பெரிய மரியாதை இருந்தது என்றார்.

"வீரர்கள் தங்கள் பயிற்சியாளர்களுக்கு இப்போது அதே மரியாதையைக் கொண்டிருக்கிறார்களா என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. சில அணிகள் லெவல் ஒன் பயிற்சியாளர்களின் சேவையைப் பெற்றுள்ளதாகக் கூறுகின்றன, ஆனால் வீரர்களுக்கு சரியான வழிகாட்டுதல் மற்றும் பயிற்சியை உருவாக்கி வழங்குவதற்கான அவர்களின் திறன் கேள்விக்குரியதாக இருக்கலாம், ”என்று அவர் முடித்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 9ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.